வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்

முனைவர் பெ. சுயம்பு



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்

முனைவர் பெ.சுயம்பு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேராயர் இரா. அருளப்பர் அவர்கள்)

வரிசை எண் : 11 நாள்: 04.02.2014

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	**வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்**
ஆசிரியர்	:	முனைவர் பெ.சுயம்பு மதிப்பியல் காப்பாட்சியர் டாக்டர் உவே.சாமிநாதையர் நூல்நிலையம் சென்னை.
பொதுப்பதிப்பாசிரியர்	:	முனைவர் நா. சுலோசனா உதவிப் பேராசிரியர் தமிழ்மொழி (ம) மொழியியல் புலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை-600 113
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை-600 113 தொலை பேசி எண். 044 - 22542992
வெளியீட்டு எண்	:	790
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2014
பயன்படுத்திய தாள்	:	18.6 கிகி டிஎன்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8 டம்மி
எழுத்தின் அளவு	:	10 அளவு
பக்க எண்ணிக்கை	:	viii +96
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்)
அச்சகம்	:	ஸ்ரீ சரவணா அச்சகம் 148, தம்புத் தெரு சென்னை-600 001 9444265471
பாடம்	:	இலக்கண ஆய்வு

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் கோ. விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

அணிந்துரை

பழந்தமிழ் மரபுகளைக் காப்பதற்காக எழுந்தவைதாம் இலக்கண நூல்கள் ஆகும். எழுத்து, சொல், பொருள் எனும் மூன்றிலக்கணங்களாக இருந்த அவை யாப்பு, அணி என ஐந்திலக்கணங்களாக ஏற்றம் பெற்றன. தமிழ்மொழியின் அமைப்பு, பயன்பாடு, வாழ்வியல் நெறிமுறைகள் என இலக்கியமும் இலக்கணமும் ஒன்றோடு ஒன்று இணைந்தவையாக இருந்தன. இலக்கண நூல்களுள் தலையானது ஒல்காப்புகழ் தொல்காப்பியமாகும். தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களைத் தொடர்ந்து பல்வேறு இலக்கண நூல்களும் உரைகளும் வந்த வண்ணம் இருக்கின்றன.

தமிழ் மொழியையும் தமிழிலுள்ள இலக்கியச் சுவையையும் அறிந்த மேலைநாட்டார் தமிழ்மொழியையும் இலக்கண, இலக்கிய நூல்களையும் கற்று மேலை நாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்து தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் பெருமை சேர்த்துள்ளனர். தமிழால் கிறித்துவமும் கிறித்துவத்தால் தமிழும் மலர்ச்சி பெற்றன.

தமிழ் மொழிக்கு வழங்கிய கொடைகளுள் எழுத்துச் சீர்திருத்தத்தில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் வீரமாமுனிவர் ஆவார். இவர் கிறித்துவம் தமிழுக்கு வழங்கிய தவப்புதல்வர்களில் தனிச்சிறப்புக்குரியவராகத் திகழ்ந்தார்.

பேச்சுத்தமிழின் அமைப்பினையும், பயன்பாட்டினையும் விவரிக்கும் நூலான **கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம்** இவை போன்ற இலக்கண நூல்களை ஆய்ந்து அறிந்து முனைவர் பெ.சுயம்பு அவர்கள் **வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்** எனும் நூலை யாத்துள்ளார்.

இந்நூல், வீரமாமுனிவரின் இலக்கணப் புலமையை முழுமையாக அறிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது. வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி, வீரமாமுனிவரின் இலக்கணக்கோட்பாடு எனப் பல்வேறு தளங்களில் நின்று ஆய்வு செய்து இந்நூலைப் படைத்த நூலாசிரியர் முனைவர் பெ. சுயம்பு அவர்களுக்கும் இந்த அறக்கட்டளையை நிறுவியவருக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுகள்.

தேமதுரத் தமிழோசையை உலகெங்கும் பரப்புகிற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் **முனைவர் கோ.விசயராகவன்** அவர்களுக்கும், அறக்கட்டளையின் பொறுப்பாளர், உதவிப் பேராசிரியர் முனைவர் **நா. சுலோசனா** அவர்களுக்கும் இனிய நன்றி. இந்நூலைக் கணினித் தட்டச்சுச் செய்து வடிவமைத்த திருமதி. ச.சத்தியவாணி அவர்களுக்கு இனிய நன்றி.

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்

எனும் மொழியை ஏற்று அறக்கட்டளைப் பொழிவாற்றிடத் தெரிவு செய்தமை என்றும் நினைத்தற்கு உரித்து. நன்றி.

பெ. சுயம்பு

முகவுரை

மேலைநாட்டறிஞர்களுள் வீரமாமுனிவர் இலக்கணம், இலக்கியம், அகராதி, உரைநடை எனப் பல்வேறு துறைகளில் தமிழன்னைக்கு வளம் சேர்த்தவர். அவர்தம் இலக்கண நூல்கள் **கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், கிலாவிஸ்** என்பன. இந்நூல்களில் விவரிக்கப்பெற்ற கருத்துக்களிலிருந்து வீரமாமுனிவரின் தமிழ் இலக்கணக் கோட்பாடுகளை அறிந்துகொள்ள இயலும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் **வீரமா முனிவரின் சொல்லிலக்கணம்** குறித்து கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றிட வாய்ப்பு அமைந்தது. அப்பொழிவின் கருத்துக்கள் 'வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்' எனும் நூலாக மலர்ந்துள்ளன.

வீரமாமுனிவர் இயற்றிய இலக்கண நூல்களுள் **தொன்னூல் விளக்கம்** காலத்தால் மூன்றாவது; எனினும் தமிழில் எழுதப்பெற்றதால், இந்நூலை முதலாவதாகக் கொண்டு இலக்கணச் செய்திகள் இங்கு விவரிக்கப் பெற்றுள்ளன.

நான்கு உட்பிரிவுகள் இந்நூலில் உள்ளன. முதலாவது இயல் வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கிக் கூறுகிறது. இரண்டாம் பிரிவு அவர் இயற்றிய இலக்கண நூல்கள் நான்கு பற்றிய செய்திகளைத் தருகிறது. மூன்றாவதில் சொல்லிலக்கணமும் நான்காவதில் இலக்கணக் கோட்பாடும் விவரிக்கப்பெற்றுள்ளன.

தமிழ் மொழியின் வளத்தைப் பெருக்கவும் தமிழினத்தின் சிறப்பினை வெளிப்படுத்தவும் பெருந்தகையாளர் பலர் அறக்கட்டளைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவியுள்ளனர்.

கிறித்துவம் தமிழ் மொழியையும் தமிழினத்தையும் மேம்படுத்தியதையும் தமிழ்மொழியாலும் இனத்தாலும் கிறித்துவம் மலர்ச்சி எய்தியதையும் மாந்தருக்கு எடுத்துரைப்பது 'கிறித்துவமும் தமிழும்' எனும் அறக்கட்டளை. இந்த அறக்கட்டளையின் தளத்தில் **வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்** எனும் பொருளில் பொழிவொன்றினை ஆற்றிட வாய்ப்பளித்தமைக்கு அறக்கட்டளை நிறுவியோர்க்கு இனிய நன்றி.

அறக்கட்டளையின் பதினோராவது நூலாக இந்நூல் வெளிவருவதில் பேருவகை அடைகிறேன். எழுத்துருவைச் செப்பம் செய்து, சிறந்த முறையில் நூலாக்கம் பெறுவதற்கான பணிகளைச் சிறப்புறச் செய்த அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் நா. சுலோசனா அவர்களுக்கு எனது பாராட்டுகள்.


தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் பள்ளிக் கல்வி மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் **மாண்புமிகு அமைச்சர் கே.சி.வீரமணி** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் **முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறக்கட்டளை நூலினை மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், அறக்கட்டளை நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் ஒளியச்சுக் கோர்வை செய்த இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் குறிப்பு



முனைவர் பெ. சுயம்பு திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் பிறந்தவர். பள்ளிப்படிப்பை இடையங்குடியில் முடித்தவர்.

புதுமுக வகுப்பு மற்றும் இளநிலை சிறப்புத்தமிழ்ப் படிப்பை மதுரை செந்தமிழ்க் கல்லூரியில் படித்தவர். நாகர்கோயில் தென்திருவிதாங்கூர் இந்துக் கல்லூரியில் முதுநிலைப் பட்டம் பெற்றவர். தொல்காப்பியமும் இலக்கண விளக்கமும் என்னும் தலைப்பில் ஆராய்ந்து மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வழி 1986இல் முனைவர் பட்டம் பெற்றவர். 1975இல் புலவர் (பண்டிதம்), 1978இல் காந்தியம், இந்தி போன்ற பட்டயப் படிப்புகளும், 1979இல் மொழிபெயர்ப்பியல் சான்றிதழ்ப் படிப்பையும் பெற்றவர்.

1985-86இல் ஆசியவியல் நிறுவனத்தில் ஆய்வு உதவியாளராகப் பணியாற்றியவர். 1986-87இல் தமிழ் பல்கலைக் கழக வாழ்வியல் களஞ்சியம் முதன்மைப் பதிப்பாசிரியருக்கு உதவியாளராகப் பணிபுரிந்தவர். 1987முதல் 2010 முடிய திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியில் இணைப்பேராசிரியராக 23 ஆண்டுகள் தமிழ்ப் பணியாற்றியவர். 2010 முதல் தொடர்ந்து உ.வே.சாமிநாதையர் நூலகத்தில் மதிப்பியல் காப்பாட்சியராகப் பணியாற்றி வருகிறார்.

இவர் தமிழ்மொழி அமைப்பு வரலாறு, இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி, மொழி வரலாற்றுத் தமிழ், இலக்கண நூல் களஞ்சியம், தமிழ் இலக்கிய அறிமுகம், தமிழ் இலக்கிய ஒப்பீடு, செம்மொழித் தமிழ் சிறப்பும் வரலாறும் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். பன்னாடு மற்றும் தேசியக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு அறுபதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியவர். பல்வேறு கருத்தரங்க மாநாடுகள் மற்றும் பயிலரங்கங்களில் ஆய்வு வளமையராகக் கலந்து கொண்டவர்.

உள்ளுறை

1. தமிழ் வளர்த்த வீரமாமுனிவர்

கிறித்துவம் தமிழன்னைக்கு வழங்கிய தவப்புதல்வர்களுள் இணையிலாத் தனிச்சிறப்புக்குச் சொந்தக்காரர்; கிளைமொழியியல், அகராதியியல், மொழிபெயர்ப்பியல் எனப் பல்வேறு துறைகளில் முதலிடத்தைப் பெற்றவர்; புதிய மொழியியல் நெறிகளை ஒட்டியும் தமிழ் மரபினை ஒட்டியும் பிற மொழிகளை ஒப்பிட்டும் தமிழர்களுக்கு எனவும் வேற்று மொழியினருக்கு எனவும் இலக்கண நூல்களையும் அகராதிகளையும் எழுதியவர்; தமிழ் இலக்கிய நெறிகளை ஏற்று, பேரிலக்கியமும் சிற்றிலக்கியங்களையும் பா நடையில் இயற்றியவர்; இக்காலச் சிறுகதை இலக்கியத்துறையில் முன்னோடியாக நிற்பவர்; மொழி, இலக்கியத் துறைகளில் மட்டுமன்றி, தமது வாழ்வியலிலும் கிறித்துவச் சமய வழக்குகளிலும் தமிழ் மண்ணின் மணத்தைத் தோய்த்துப் படரவிட்டவர். இன்னோரன்ன பெருமைகள் பலவற்றுக்கு உரிமை உடைய மேலை நாட்டுப் பன்மொழிப் புலவர் - பேரறிஞர் - உலகவாம் சால்புடையவர்; அவர்தாம் வீரமாமுனிவர்.

கா.ஜோ. பெஸ்கி

வீரமாமுனிவர் பிறப்பால் இத்தாலியர் ; இத்தாலி நாட்டு மாந்துவா வட்டத்துக் காஸ்திகிலியானே எனும் ஊரில் 1680ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 8ஆம் நாளில் பிறந்தார். தாயார் பெயர் எலிசபெத். தந்தையார் கொண்டால்போ பெஸ்கி பிரபு பட்டம் பெற்றவர்.

பெற்றோர் வீரமாமுனிவருக்கு இட்ட இத்தாலி மொழிப்பெயர் கான்ஸ்டான்சியோ ஜோசபோ என்பதாகும். பெஸ்கியோ என்பது குடும்பப் பெயர். கான்ஸ்டான்சியோ ஜோசபோ பெஸ்கியோ எனும் இத்தாலிப் பெயர் ஆங்கிலத்தில் கான்ஸ்டான்சியஸ் ஜோசப் பெஸ்கி என்று கூறப்படுகின்றது. ஏ.பர்னல் போன்றோர் கான்ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்கி என்று குறிப்பிடுகின்றனர்.

இயேசுசபை ஊழியர்

வீரமாமுனிவர் குழந்தைப் பருவமுதல் இயேசுபிரான்பால் அளவிலாப் பக்தி கொண்டவர். இயேசுவின் நெறிகளை உலகெங்கும் பரப்பிடவேண்டும் எனும் பேரவா அவர்தம் நெஞ்சில் உறைந்திட, தம்

வாழ்வு முழுவதையும் இயேசுபிரானுக்காக அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் எனும் குறிக்கோள் அவரை இயேசு சபையின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்தது. தம் குடும்பம், இன்ப வாழ்வுகளை விலக்கி, கிறித்துவச் சமயத்தின் வளர்ச்சி ஒன்றையே வாழ்வின் முடிவான நோக்கமாகக் கொண்ட இயேசுசபை ஊழியர்களான துறவியரின் வாழ்க்கை அவரைப் பெரிதும் கவர்ந்தது. எனவே முனிவர் தாமும் இயேசுசபை ஊழியராகி இயேசுபிரான் நெறிகளைப் பரப்பவேண்டும் என்று உறுதிகொண்டார்.

வீரமாமுனிவரின் கல்வி அவர்தம் பிறப்பிடமாகிய காஸ்திகிலியானேவிலும், பொலோனாநகர், உரோம் பெருநகர் ஆகியவற்றிலும் மேம்பட்டது. அவ்விடங்களிலுள்ள பள்ளிகளில் இலக்கணம், சமயத்தத்துவம், தர்க்கவியல் ஆகிய துறைகளைக் கற்றுத் தேர்ந்தார். கிரேக்கம், எபிரேயம் (ஹீப்ரூ), போர்ச்சுக்கீசியம், பிரஞ்சு ஆகிய மொழிகளில் சிறந்த புலமை பெற்றார்.

வீரமாமுனிவர் பதினெட்டாம் வயதில் இயேசு சபையில் உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொண்டார். கத்தோலிக்கப் பாதிரிமார் பள்ளியில் அவருக்குச் சிறப்புச் சமயப் பயிற்சி அளிக்கப்பெற்றது. பன்மொழிப் புலமையும் இலக்கணவியலில் சிறப்புப் புலமையும் பெற்றிருந்தமையால், இயேசு சபைக் கல்லூரிகளில் சில காலம் ஆசிரியராக அவர் அமர்த்தப்பெற்றார்.

தெய்வபக்தி, சமய நம்பிக்கை, நட்புடன் பழகும் இனிய பண்பு, கேட்டார்ப் பிணிக்கும் சொல்வன்மை, மக்கள் தொண்டில் ஆழ்ந்த ஈடுபாடு போன்ற அரிய பண்புகள் பலவற்றை உடைமையாகக் கொண்டவர் வீரமாமுனிவர். இத்தகைய பண்புகளும் ஆற்றல்களும் பெற்றிருந்தும், அவரால் இருபத்தைந்தாம் வயதுக்குப் பின்னரே 1709இல் குருப்பட்டத்தை எய்த முடிந்தது. ஏனெனில் குருப்பட்டம் பெறுவோர் இருபத்தைந்து வயதை நிரம்பியவராக இருத்தல்வேண்டும் என்பது கத்தோலிக்கச் சமயத்தின் விதிகளுள் ஒன்று.

மதுரைத் திருச்சபைத் தலைவர்

முனிவரின் பண்புகளும் கிறித்துவப் பணிகளில் அவர் காட்டிய ஆர்வமும் போப் ஆண்டவரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. பாரத நாட்டில் இயேசுபிரானின் நெறிகளைப் பரப்புதற்குப் பொருத்தமானவர் என்று உணர்ந்து, அவரை மதுரைத் திருச்சபையில் பணியாற்றிட நியமித்தார்.

வீரமாமுனிவர் போர்ச்சுக்கீசிய நாட்டு லிஸ்பன் துறைமுகத்தில் கப்பல் ஏறினார். 1710ஆம் ஆண்டின் முற்பகுதியில் கோவா

துறைமுகத்தில் இறங்கினார். அங்கிருந்து கொச்சி வழியாகச் சென்று அம்பலக்காட்டிலுள்ள கத்தோலிக்கக் குருமார் கல்லூரியில் தங்கினார். அங்கு ஓரளவு தமிழ்மொழியைக் கற்றார். மதுரைத் திருச்சபை ஊழியர்களோடு தம்மை இணைத்துக்கொண்டு காம நாயக்கன்பட்டியில் தங்கியிருந்து கிறித்துவப் பணிகளில் முழு நிறைவுடன் ஈடுபட்டார். அவர்தம் பேராற்றல் அவரை 1711ஆம் ஆண்டில் மதுரைக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைக் குருவாக்கிச் சிறப்புச் செய்தது.

முனிவரின் திருப்பணிகள் சேர, சோழ, பாண்டிய, தொண்டை மண்டலங்கள் எனத் தமிழகத்தின் பெரும்பகுதியில் படர்ந்தன. கயத்தாறு, குருக்கள்பட்டி, கல்லுப்பட்டி, மணப்பாடு, வடுகர்பட்டி, ஆவூர், ஏலாக்குறிச்சி, கோனான்குப்பம், அரியலூர், காமநாயக்கன்பட்டி, மதுரை, திருச்சி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தஞ்சாவூர், அம்பலக் காடு(கேரளா) என முனிவர் பல்வேறு இடங்களுக்குச் சென்று, ஆங்காங்கே உள்ள தமிழ் மக்களோடு தாமும் ஒரு தமிழனாகத் தங்கித் தொண்டாற்றினார்; கிறித்துவ ஆலயங்களை அமைத்து, தமிழ்ப்பண்பாட்டோடு இணைந்த நாள்வழிபாடுகளையும் ஆண்டுத்திருவிழா முதலிய சிறப்பு வழிபாடுகளையும் நடத்திட வழிகாட்டினார்.

திருச்சிராப்பள்ளி திவான்

வீரமாமுனிவர் பாமர மக்களை மட்டுமன்றிப் பாராளும் மன்னர்களையும் தம் வயமாக்கிடும் பேருளாளர். சந்தாசாஹிப் 1736ஆம் ஆண்டில் திருச்சி மாநகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டான்; மதுரையை மையமாகக் கொண்ட பகுதிகளுக்கும் தானே மன்னர் என்று பறைசாற்றினான். மதுரைத் திருச்சபைக்குத் தலைவராக இருந்த வீரமாமுனிவர் தமது சமயப் பணிகளுக்குச் சந்தா சாஹிபின் நட்பு மிகவும் இன்றியமையாதது என உணர்ந்தார். அம்மன்னனின் இசைவு இன்றிக், கிறித்துவப் பணிகளைத் தொடரவியலாது என்பது அவர்தம் எண்ணம். எனவே திருச்சிக்குச் சென்று சாஹிபிடம் பாரசீகமொழியில் அன்பொழுகப் பேசினார். முனிவரின் சொல்வன்மையும் எளிமை கலந்த புலமையும் அருள் உள்ளமும் கொடியவன் என்று பேசப்பெற்ற சந்தாசாஹிபை எளிதில் ஆட்கொண்டன. தனது அரசவையில் முனிவரை ஒரு திவானாக நியமித்து அவரைப் பெருமைப்படுத்தினான்; திருப்பணிகளுக்குப் பயன்படுமாறு ரூபாய் பன்னீராயிரம் தரவல்ல அரசூர், நல்லூர், பூக்குளம், மால்வை எனும் நான்கு கிராமங்கள் அன்பளிப்பாகவும் 350 சாந்தோம் நாணயங்கள் உதவித்தொகையாகவும் அளிக்கப்பெற்றன. மேலும், சந்தாசாஹிபு ‘இஸ்மஸ்த் சந்யாசி’ என்ற சிறப்புப் பெயரையும் முனிவருக்கு வழங்கினான். இந்தப் பாரசீகப் பெயருக்குத் தூய துறவி என்பது பொருள்.

வேலூர்ப் பகுதிகள் கர்னாடக நவாபு தவுஸ்த்கானின் ஆட்சியின்கீழ் இருந்தன. அப்பகுதிகளில் சமயப் பணிகளைத் தொடருதற்கு நவாபின் இசைவு இன்றியமையாதது. இதனை உணர்ந்த கத்தோலிக்கத் திருச்சபையின் உலகத்தலைவர் தவுஸ்த்கானுக்கு ஒரு வேண்டுதல் கடிதத்தை எழுதி, வீரமாமுனிவருக்கு அனுப்பிவைத்தார். முனிவர் வேலூருக்குச் சென்று, நவாபிடம் உரையாடித் தம் தலைவரது கடிதத்தை வழங்கினார். வேலூர்ப் பகுதிகளில் கிறித்துவப் பணிகள் படருதற்குத் தவுஸ்த்கானின் நட்புப் பெரிதும் பயன்பட்டது.

நாதர்சிங் தலைமையில் மராட்டியப் பேரரசின் வீரர்கள் 1741இல் திருச்சியை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டனர். சந்தாசாஹிபும் கைப்பற்றப்பட்டான். மன்னர் கைப்பற்றப்பட்டதும், திவானாக இருந்த முனிவர் தம் உயிருக்கு இறுதி நேரிடும் என்று அஞ்சினார். இராமநாதபுரம் ஆகிய சேதுநாட்டை நோக்கிச் சென்றார். சேதுநாட்டு மன்னர்களும் மராட்டியர்களைப் போன்று இந்து சமயக் காவலர்களாக விளங்கினர். அங்குத் தங்கிக் கிறித்துவ ஊழியம் செய்தல் இயலாது. எனவே முனிவர் தூத்துக்குடி, காயல்பட்டினம், வீரபாண்டியன்பட்டினம் வழியாகப் பயணம் செய்து, மணப்பாடு எனும் மீனவர் சிற்றூரை அடைந்து, அங்குத் தங்கினார். அவ்வூர் ஏற்கெனவே டச்சு நாட்டவரின் ஆளுகையில் இருந்தது. அங்குக் கத்தோலிக்கத் திருச்சபையும் ஆலயமும் சிறப்புடன் விளங்கின. மணப்பாட்டில் வாழ்ந்த காலத்தில் அங்குத் தங்கியவாறே அண்மையிலுள்ள சிற்றூர்களிலும் சமயப்பணிகளைத் தொடர்ந்தார்.

மணப்பாட்டில் மறைவு

கிறித்துவத்தையும் தமிழ்மொழியையும் தம் இரு திருவிழிகளாகக் கொண்டு, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று வாழ்ந்த வீரமாமுனிவரின் ஆவி மணப்பாடு எனும் சிற்றூரில் அடங்கியது. தம் வாழ்வில் ஒளி ஏற்றிய கலங்கரை விளக்கத்தைத் தம் ஊரில் அடக்கம் செய்து பெருமை கொண்டது மணப்பாடு. நிலமகள் தம் தவப்புதல்வன் பெஸ்கியைத் தன்னகத்தே அடக்கிக்கொண்ட நாள் 04.02.1746. சிலர் 1747இல் மறைந்தார் என்று குறிப்பிட்டுள்ளனர்.

வீரமாமுனிவரின் இறுதிக் காலம் பற்றி வெவ்வேறு குறிப்புக்கள் நூல்களில் காணப்படுகின்றன. மணப்பாட்டில் வாழ்ந்து அங்கேயே இறந்தார் என்பது சிலர் கூற்று. வேறுசிலர் மணப்பாறையில் இறந்தார் என்கின்றனர். அம்பலக்காட்டில் இறந்தார் என்பது ஞானப்பிரகாச அடிகளார் (வீரமாமுனிவம், பக்கம் 14) போன்றோரது கருத்து.

> ஆங்கில நூல்கள் சிலவற்றில் காணப்படுகிற Maṇapāṛ எனும் குறிப்பு மணப்பாறை என்பதற்கு அடிப்படை. இங்கு ṛ எனும் எழுத்து றகரம் என்று பிழையாகக்

கருதப்பெற்றுளது. நாமடி ஒலிகளை இனம் காட்டிட அவற்றோடு தொடர்புடைய எழுத்துக்களுக்கு அடியில் புள்ளி இடுதல் மொழியியல் சார்ந்த நெறி. ளகரம் ḷ என்றும் ணகரம் ṇ என்றும் எழுதப்படுகின்றன. அவ்வாறே டகரத்தை ṛ என்றும் ṭ என்றும் எழுதுவர்.

வீரமாமுனிவர் திவானாக இருந்தார் என்பது உண்மையாயின், அவர் தம் பணிகளுக்கு எதிரான அரசிடமிருந்து ஒதுங்கினார்; மதுரையிலிருந்து இராமநாதபுரம், தூத்துக்குடி வழியாகத் தெற்கு நோக்கிப் பயணம் செய்தார் என்பதே உண்மையான வரலாறு. பிரான்சிஸ்சேவியர் திருச்செந்தூருக்கு அண்மையிலுள்ள மணப்பாட்டில் கி.பி.1542இல் வந்து சேர்ந்தார். அந்நாள் முதல் தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள கடற்கரை ஊர்களில் கத்தோலிக்கக் கிறித்துவம் வேரூன்றிப் படரலாயிற்று. மணப்பாட்டில் டச்சுக்காரர்களின் செல்வாக்கு இருந்தது. எனவே அங்குச் சென்று வாழ்தலே தமக்கும் தம் சமயப் பணிகளுக்கும் சிறந்த அரணாகும் என்று வீரமாமுனிவர் கருதியுள்ளார்.

வீரமாமுனிவர் பற்றிப் பேராயர் இராபர்ட் கால்டுவெல் திருநெல்வேலி வரலாறு **(A History of Tinnevelli)** எனும் நூலில் விரிவாக எழுதியுள்ளார். அதன் சிறுபகுதி :

> During four of the later years of his life, from 1736 to 1749, Beschi seems to have been employed as Dewan to Chanda Saheb, whose treacherous seizure of Trichinopoly... Beschi's native biographer states that in order to fit himself for an interview with Chanda Saheb, Beschi learned the Persian and Hindustani languages in the short space of three months, and that Chanda Saheb was so much struck with his attainments and ability that he presented him with the revenues of four villages and appointed him to be his Dewan or Prime Minister...This was Manapar (Manapadu) on the Tinnelvelly coast (literally Manal-padu, the sandy lagoon), then a Dutch possession, a small fishing and trading town, with a considerable Roman Catholic population, and far away from the reach of hostilities. It is certain from authentic records that Beschi was "Rector" of Manapar in 1744 and that he died there in 1746...It has been supposed by some that the Manapar where Beschi died was the Manapar, properly Manaparai, near Trichinopoly. For this idea however there is no foundation. The people of Manaparai themselves, including the Roman Catholic

Missionary of the place, admit that Beschi died at Manapar in Tinnevelly.

He is said to have been buried in the chancel of the church at Manapar, but the oldest of the churches is now completely buried in the sand.

தமிழ் முனிவர்

வேற்று மொழி அல்லது வேற்று இலக்கியங்களைக் கற்க விழைவோர் எழுத்து மொழியையே கற்பது வழக்கம். இந்நாளைய கல்வி நிறுவனங்களிலும் எழுத்து மொழியைக் கற்பிப்பதற்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. இந்த எழுத்து மொழிக் கல்வி இலக்கியங்களில் புலமை பெறுதற்கு உதவும். ஆனால் சாதாரண மக்களிடம் உணர்வு ஒன்றிய நிலையில் பழகுதற்கு உதவாது; பேச்சு மொழியே அதற்கு உகந்தது.

வீரமாமுனிவரின் வாழ்வியல் வெற்றிக்கு மொழி பற்றிய அவர்தம் கொள்கை முதன்மைக் காரணம் ஆகும். அவர் ஏற்கெனவே இத்தாலி, இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், பிரஞ்சு, போர்ச்சுக்கீசியம் முதலிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். பாரதநாடு வந்ததும் பாரசீகம், சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகியவற்றையும் கற்றார். தமிழக மக்களிடம் சமயக் கருத்துக்களைப் பரப்புதற்கு விரும்பிய முனிவர் தமிழில் சிறப்புப் புலமை பெற்றிட விழைந்தார். எனவே தமிழ்ப் புலவர்கள் சிலரை நாடினார். பேச்சுத் தமிழிலும் எழுத்துத் தமிழிலும் வல்லவர் ஆனார். அவருக்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்த ஆசிரியர்களுள் சுப்பிரதீபக் கவிராயர் முதன்மையானவர்.

வீரமாமுனிவர் ஒரு மேலை நாட்டவர்; மொழியால், இனத்தால், சமய நம்பிக்கையினால் தமிழ் மக்களிடமிருந்து வேறுபட்டவர். ஆனால் அவர் தமிழ் மக்களுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொண்டார். நடை, உடை, உள்ளவுணர்வால் ஒரு தமிழனாக ஒன்றிப் போனார். அவர் பின்பற்றிய பண்பாடு, நாகரிகம், சமய நெறிகள், மொழிப்பணிகள் யாவும் அவரை ஓர் இத்தாலியராக இனம் காட்டவில்லை.

வீரமாமுனிவர் காவி உடுத்த சாமியார்களுக்கும் துறவிகளுக்கும் தமிழக மக்களிடம் பெருமதிப்பு இருந்ததை அறிந்தார். சாமியார்களைக் கடவுளுக்கு இணையாக மதித்த மக்களிடம் தம்மைப் பற்றி உயர்ந்த எண்ணத்தையும் நம்பிக்கையையும் உருவாக்கிடவேண்டும் என்று துணிந்தார்.

குடிசையில் வாழ்ந்த வீரமாமுனிவரின் அமைதி தவழும் முகத்தில் தாடியும் மீசையும் காட்சி அளித்தன. நெற்றியில்

கோபிச்சந்தனப்பொட்டு, செவிகளில் முத்துக் கடுக்கன், விரலில் மோதிரம், கைகளில் பூணிடப்பெற்ற கோலும் விவிலியப் பெட்டியும், நீண்ட காவிநிற அங்கி, அங்கியின்மீது இடையில் காவித்துணிக்கச்சை, பாதங்களில் மரக்கட்டையால் ஆன பாதக்குறடுகள் (செருப்புக்கள்), தலையில் காவித் துணியால் ஆன தொப்பி என அவரது தோற்றம் காணப்பட்டது. அவர் சமயப் பிரச்சாரத்திற்குச் சிவிகையில் அமர்ந்து செல்வார். வெண் கொற்றக்குடையை ஒருவர் பிடித்துச் செல்வார். இருபுறமும் இருவர் மயில் தோகையால் ஆன விசிறிகளை விசிறிக் கொண்டிருப்பர். உட்காரும்போதும் வழிபாடு செய்யும் போதும் புலித்தோல் மீது அமர்ந்திருப்பார். அவர் புலாலை மறுத்துச் சைவ உணவை உட்கொண்டார். இவ்வாறு வீரமாமுனிவரின் பழக்க வழக்கங்களும் தோற்றமும் சைவத் திருமடாலயத் தலைவர்களை நினைவூட்டின. எல்லாவற்றிற்கும் மேலானதாகக் கான்ஸ்டான்சியோ எனும் இத்தாலிப் பெயரைத் தமிழில் பெயர்த்துத் 'தைரியநாதசுவாமி' என்று மாற்றிக்கொண்டதைக் குறிப்பிடலாம். இந்தப் பெயர் பின்னாளில் தேம்பாவணி அரங்கேற்றம் செய்யப்பெற்ற போது, வீரமாமுனிவர் என்று மதுரைமாநகர் அறிஞர் பெருமக்களால் அன்பும் மதிப்பும் கலந்து வழங்கப்பெற்றது. இவ்வாறு இத்தாலியப் பெஸ்கி ஒரு தமிழ் முனிவராகவே தம் வாழ்வை மாற்றிக் கொண்டார்.

தமிழகக் கிறித்துவம்

வீரமாமுனிவர் சமய வழிபாட்டு முறைகளையும் தமிழ் மயமாக்கினார். அவர் சென்று தங்கிய ஊர்தோறும் இயேசுபிரானின் தாயார் மாதாவுக்குத் தேவாலயம் கட்டினார். அங்கு அருளிச்செய்கிற மாதாவுக்குத் தமிழிலேயே பெயரும் சூட்டி மகிழ்ந்தார்.

விருத்தாசலத்திற்கு அருகில் கோனான்குப்பத்தில் உள்ள தேவாலய மாதாவைத் தமிழ்ப்பெண் உருவில் அமைத்து, பெரியநாயகி என்று பெயர் சூட்டினார். அரியலூர் அருகிலுள்ள ஏலாக்குறிச்சியைத் திருக்காவலூர் என்று பெயர் மாற்றி, அங்குத் தாம் உருவாக்கிய மாதாவுக்கு அடைக்கலமாதா, அடைக்கலநாயகி என்று பெயரிட்டார். தேவாலயங்களில் ஆண்டுத்திருவிழாவும் அவ்விழாவின் போது தேர்த்திருவிழாவும் நடத்தப்பெற்றன. தேவமாதா அலங்காரம், பூசை முறைகளிலும் தமிழ் மணம் கமழ்ந்தது.

கத்தோலிக்கக் கிறித்துவம் தமிழ்நாட்டிற்கு அயல்நாட்டிலிருந்து கொண்டு வரப்பெற்றது என்ற உணர்வுக்கு மாறாக, அது தமிழ்நாட்டிற்குச் சொந்தமான ஒன்றே என்று கருதும்வண்ணம் பல சீரமைப்புக்களை வீரமாமுனிவர் சமயத்துறையில் செய்தார். தமிழகக் கிறித்துவம் மேலைநாட்டிலிருந்து சில வேறுபாடுகளுடன் திகழலாயிற்று.

தேம்பாமாலை

வீரமாமுனிவர் இலக்கியத் துறையிலும் தமிழ் மணத்தைப் படரவிடுதற்குத் தவறவில்லை. அவர் படைத்துள்ள பேரிலக்கியம், சிற்றிலக்கியங்கள் யாவும் தமிழ்மயம் ஆக்கப்பெற்றன. அவை பெயராலும் விவரிக்கும் திறத்தாலும் தனித்தமிழ் இலக்கியங்களாகக் காட்சி தருகின்றன. தேம்பாவணி அவர் படைத்திட்ட பேரிலக்கியம் ஆகும். அடைக்கலமாலை, வெண்கலிப்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரி அம்மாள் அம்மானை, கருணாம்பரப்பதிகம், வண்ணக்கலைகள் என்பன அவரது சிற்றிலக்கியங்கள் ஆகும். அவர்தம் சிற்றிலக்கியங்களின் தொகுப்பு திருப்பாவணி என்றும் பேரிலக்கிய, சிற்றிலக்கியங்களின் தொகுப்பு தேம்பாமாலை என்றும் கூறப்படுகின்றன.

பரமார்த்தகுருவின் கதை, வேதியர் ஒழுக்கம், திருச்சபைக்கணிதம், வேத விளக்கம், வாமன் சரித்திரம், வாக்கிய சிந்தாமணி, ஞான விளக்கம், ஞானக்கண்ணாடி, பேதகமறுத்தல், ஞானமுணர்த்தல், லுத்தேரினத்தியல்பு, பதிதர்பேரில் நிரூபம் என்பன அவர் எழுதிய உரைநடை நூல்களாகும்.

தேம்பாவணி இயேசுபிரானின் தந்தை ஜோசப் (சூசை) வரலாற்றைக் கூறுகிற பேரிலக்கியம் (காப்பியம்). இதில் வளன் (ஜோசப்), சாராமி (சாரா), தொபீயான், சதாசிவன், காந்தரி, நகுலன் எனக் கதைமாந்தர்களின் பெயர்கள் தமிழாக்கம் பெற்றுள்ளன.

தற்கால உரைநடையின் தந்தை

பரமார்த்தகுருவின் கதை தமிழகத்தில் இருந்த வேற்றுச் சமயத் தலைவர்களையும் அவர்களது மாணாக்கர்களையும் கேலி செய்து எழுதப்பெற்ற அங்கத உரைநடை இலக்கியம்.

சாதாரண மக்களின் பேச்சு மொழியாகிய கொடுந்தமிழ் நடையில் எழுதினால் கற்றோரும் இலக்கியம் கல்லாதோரும் எளிதில் புரிந்து கொள்ள இயலும். எனவே கொடுந்தமிழ் நடையில் பரமார்த்தகுருவின் கதையை எழுதியதாக முனிவர் முகவுரையில் குறிப்பிடுகிறார். சிறுகதைகளும் புதினங்களும் பேச்சுமொழியிலேயே எழுதப்படுகின்றன. இதனாலேயே, "ஒருவகையில் பெஸ்கி தற்கால உரைநடை, தற்காலச் சிறுகதை ஆகியவற்றின் தந்தை ஆவார்" எனத் தெ.பொ.மீனாட்சிசுந்தரன் போற்றுகிறார்.

நீலக்கண்டி, வீரமெழுகு, வைத்திய முறை, இரத்தினச் சுருக்கம், நசகாண்ட வெண்பா நூறு, மேகனாதி எண்ணெய் சிந்தாமணி, குணபாடம் எனும் மருத்துவ நூல்களையும் ஞானபோதகம், தேவசிநேக முகாந்திரம், காலக்கண்ணாடி எனும் நூல்களையும் முனிவர் எழுதினார் என்பர்.

வீரமாமுனிவர் மொழிபெயர்ப்புத்துறையிலும் தமிழில் முன்னர் நிற்கிறார். திருக்குறளின் அறத்துப்பாலும் பொருட்பாலும் அவரால் இலத்தீன் மொழியில் பெயர்க்கப்பெற்றன. அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்த நூல்களுள் திருக்குறள் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

தமிழ் அகராதியின் தந்தை

வீரமாமுனிவரின் பணிகள் தமிழ் இலக்கியத்தில் மட்டுமன்றி, இலக்கண, அகராதித்துறைகளிலும் தவிர்க்க இயலாதன. அவர்தம் **தொன்னூல் விளக்கம், நன்னூல், இலக்கண விளக்கத்தை** அடுத்துப் பேசத்தக்க இலக்கண நூல். அவர் அகராதி கள் பலவற்றை எழுதியுள்ளார். அயல் நாட்டவர்களுக்கு, குறிப்பாக இயேசுசபை ஊழியர்களுக்குப் பயன்படும்வண்ணம் **தமிழ்-இலத்தீன் அகராதி, போர்ச்சுகீஸ்-இலத்தீன்-தமிழ் அகராதி** ஆகியன எழுதப்பெற்றன. அவர் எழுதிய **சதுரகராதி** தமிழ்க் கவிதைகளை எழுதுவோர்க்குப் பயன்படுமாறு உருவாக்கப்பெற்றது. பெயர் அகராதி, பொருள் அகராதி, தொகை அகராதி, தொடை அகராதி என நான்கு (சதுர) அகராதிகளின் தொகுப்பு இது. இவ்வகராதியே இந்நாளைய அகராதி நெறிகளின்படி உருவாக்கப்பெற்ற முதல் தமிழ் அகராதி. இதனாலேயே முனிவர் 'தமிழ் அகராதியின் தந்தை' என்று போற்றப்பெறுகிறார்.

தமிழ்க் கிளைமொழியியலின் முதல்வர்

வீரமாமுனிவர் எழுதியவற்றுள், **கொடுந்தமிழ் இலக்கணம்** பேச்சுத்தமிழ் இலக்கணத்தை விவரிக்கிறது. தமிழ் மக்களின் பேச்சுத்தமிழை இயேசுசபைக் கிறித்துவ ஊழியர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு எழுதப்பெற்றது. பேச்சுத் தமிழை முழுமையாகச் சிறப்பாக விவரிக்கிற முதல்நூல் இது எனலாம். இதனால் வீரமாமுனிவர் தமிழ்க்கிளை மொழியியலின் முதல்வராகக் கருதப்பெறுகிறார்.

எழுத்துச் சீர்திருத்த முன்னோடி

வீரமாமுனிவர் தமிழ் மொழிக்கு வழங்கிய கொடைகளுள் எழுத்துச் சீர்திருத்தம் குறிப்பிடத்தக்க ஒன்று. தமிழில் எகர, ஒகரங்களில் குறிலுக்கும் நெடிலுக்கும் ஒரே வடிவம் எழுதப்பெற்று, மேலே புள்ளி இட்டுக்காட்டுதலின்வழி குறில் வேறுபடுத்தப்பெற்றது. தொல்காப்பியக் காலத்திற்கு முன்னரே இம்முறை காணப்படுகிறது.

முனிவர் எகர, ஒகர உயிர்மெய் எழுத்துக்களில் புதிய முறையை உருவாக்கி, குறில் நெடில்களை வேறுபடுத்தினார்.

> எ, ஒ எழுத்துக்களில் குறில் நெடில்களை வேறுபடுத்திட
> நான் எளிய முறையைக் கண்டுபிடித்துள்ளேன். கொம்பு

> (ெ) தனியாக எழுதப்பெற்றால் எ, ஒ ஆகியவற்றின் குறிலாக இருக்கும். கொம்பின் மேற்பாகம், நான் கீழே இகரத்தின் நெடிலைக் குறிப்பிடுதல் போன்று சுழிக்கப்பெற்றால் நெடிலாக இருக்கும். இம்முறையில் (ே) என்பது ஏ, ஓ ஆகிய எழுத்துக்களின் நெடிலாகும். இவ்வாறு 'மெய்' என்பது குறில்; ஆனால் 'மேய்' என்பது நெடில். 'பொய்' என்பது குறில்; ஆனால் 'போய்' என்பது நெடில். இம்முறை பலரால் ஏற்கப்பெற்று, இகழாது பின்பற்றப்படுகிறது.

இவ்வாறு கொடுந்தமிழ் இலக்கணத்தில் குறிப்பிடுகிறார்.

வீரமாமுனிவருக்குச் சிறிது காலத்திற்குமுன் (1683-1719) தமிழகம் வந்தவர் பார்த்தலோமியா சீகன் பால்கு; லுத்தரன் சபையைச் சேர்ந்த கிறித்துவ ஊழியர்; இவர் தமிழ் இலக்கணம் (**Grammatica Damulica**) எனும் நூலை இயற்றினார். அது தரங்கம்பாடியில் 1716இல் அச்சிடப் பெற்றது. அந்நூலில் எ, ஒகரங்கள் குறில் நெடில் வேறுபாடற்ற நிலையிலும், கொம்பு மேற்சுழியின்றி நெடிலுக்கும் வழங்கியதையும் காணலாம்.

உயிர் நெடில் எழுத்துக்களை ஏ, ஓ எனும் வடிங்களில் எழுதும் முறை வீரமாமுனிவருக்கு முன்னரே இருந்ததாகத் தெரிகிறது என்று மு.இராகவன் (ஆராய்ச்சித் தொகுதி, பக்கம் 123) குறிப்பிட்டுள்ளார். எகர, ஏகார உயிர்மெய்க் குறியீடுகளான ெ, ே என்பன வீரமாமுனிவர் காலத்துக்கு முன்பே கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதாக இரா. நாகசாமி (தினமணிசுடர் 13.7.75)) குறிப்பிட்டுள்ளார்.

> சில கல்வெட்டுக்களில் இவை காணப்படுவது உண்மை என்றாலும் அந்த (ஏ, ஓ, ெ, ே) எழுத்து மாற்றம், வீரமாமுனிவர் செய்ததுபோலத் திட்டமிட்டுச் செய்யப் பட்டதாக இருக்கமுடியாது. வீரமாமுனிவர் காலத்தில் தமிழ்க் கல்வெட்டுக்கள் வெளிப்பட்டிருக்கவில்லை. ஆகவே, கல்வெட்டுக்களில் இந்த எழுத்து முறையைக் கண்டு, முனிவர் செய்தார் என்று நினைக்க முடியவில்லை.
>
> (க.ப.அறவாணன், வீரமாமுனிவம், பக்.43-44)

வீரமாமுனிவர் தமிழ் எழுத்துக்களை மேம்படுத்திடச் செய்த முயற்சி அவரை எழுத்துச் சீர்திருத்தத்திலும் ஒரு முன்னோடியாகக் காட்டுகிறது.

2. வீரமாமுனிவரின் இலக்கண நூல்கள்

வீரமாமுனிவர் தமிழ்மொழி அமைப்பினை விவரிக்கிற நான்கு இலக்கண நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் **கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், கிலாவிஸ்** மூன்றும் இலத்தீனில் எழுதப்பெற்றவை. **தொன்னூல் விளக்கம்** மட்டும் தமிழில் எழுதப்பெற்றது.

கொடுந்தமிழ் இலக்கணம்

கொடுந்தமிழ் இலக்கணம் (A Grammar of the Common Dialect of the Tamil Language called கொடுந்தமிழ்) எனும் நூல் இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றது. இதனை வீரமாமுனிவர் 29-01-1728இல் எழுதி, மதுரைக் கத்தோலிக்கக் கிறித்துவச் சபையிலிருந்து உரோமாபுரி இயேசு சபைக்கு அனுப்பினார்.

தமிழர்களிடையே கிறித்துவத்தைப் பரப்புதற்கு விருப்புற்ற மேலை நாடுகளைச் சார்ந்த இயேசுசபை ஊழியர்களுக்கு உதவும் நோக்கில் இந்நூல் எழுதப்பெற்றுளது. இவ்வூழியர்கள் தமிழரின் பேச்சு வழக்கை அறிந்தாலொழிய, தமிழர்களை மதமாற்றுதல் எளிதாக நிறைவேறாது; ஆதலால் பேச்சுத் தமிழ் இலக்கணத்தை விவரிக்கின்ற இந்நூலை வீரமாமுனிவர் தம் தாய் மொழியான இத்தாலியில் எழுதாது, சபை ஊழியர்கள் யாவரும் அறிந்த கிறித்துவ சமய மொழியான இலத்தீனில் வழங்கினார்.

நூலமைப்பு

கொடுந்தமிழ் இலக்கணம் 1739-இல் தரங்கம்பாடியில் இலத்தீன் மொழியில் அச்சேற்றப்பெற்றது. கிறிஸ்டோபர் ஹென்றி ஹார்ஸ்ட் (C.H. Horst) என்பவர் ஆங்கிலத்தில் 1813-இல் பெயர்த்தார். சென்னை வேப்பேரியில் அச்சேற்றப் பெற்றது. அதனை மேலும் செம்மையாக ஜார்ஜ் வில்லியம் மாஹன் (George William Mohan) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அது 1848இல் வேப்பேரியில் அச்சேற்றப்பெற்றது. பின்னாளில் அது தஞ்சாவூர் சரபோஜி மன்னரின் சரஸ்வதி மகால் நூலகத்தில் 1971இல் அச்சேற்றப்பெற்றது.

இந்நூல் வீரமாமுனிவர் உரோமாபுரியிலுள்ள இயேசு சபையினருக்கு எழுதிய மடலாகிய முன்னுரையுடன் தொடங்குகிறது. அதன் இறுதிப் பகுதி:

> தமிழ்மொழி பேசுகின்ற மக்களிடம் சமயத் தொண்டாற்ற விழைகின்ற ஊழியர்களே இறைவனால் உங்களுக்கு மிகுந்த நலம் உண்டாகட்டும்! கான்ஸ்டான் சியோ பெஸ்கி வாழ்த்துகிறேன். விடைபெறுகிறேன். மதுரா சபையிலிருந்து, 29 சனவரி, 1728.

கொடுந்தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், தொடர் இலக்கணங்களை விவரிக்கிறது. இந்நூல் ஐந்து அதிகாரங்களாகப் (chapters) பிரிக்கப்பட்டிருக்கிறது. எல்லா அதிகாரங்களின் தலைப்பும் உட்பிரிவுகளின் (sections) தலைப்பும் 'அதிகாரம் - தமிழ் எழுத்துக்கள், பிரிவு - எழுத்துக்களின் எண்ணிக்கையும் வடிவமும்' என்பது போன்று விளக்கக் குறிப்பினைப் பெற்றுள்ளன.

முதலதிகாரம் (தமிழ்) எழுத்துக்கள் எனும் பெயர் உடையது. இது ஆறு பிரிவுகளை உடையது.

முதற் பிரிவு உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை, வரிவடிவம் ஆகியவற்றைச் சுட்டுகிறது. இறுதியில் தமிழ் நெடுங்கணக்குப் பட்டியல் இணைக்கப் பெற்றுள்ளது.

இரண்டாம் பிரிவு மெய்யெழுத்துக்களை ஒலிக்கும் முறையை விவரிக்கிறது. க,ச,த,ப முதலிய எழுத்துக்கள் வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு மாற்றொலிகளாக ஒலிப்பதை முனிவர் விளக்கியுள்ளார். இந்த விவரிப்பு இக்கால மொழியியலார் நெறிமுறையாகும்.

மூன்றாம் பிரிவு அ, ஐ போன்ற எழுத்துக்கள் பேச்சு மொழியில் உறழ்ந்து ஒலிப்பதை (variations of pronunciation) விவரிக்கிறது. குறிப்பாக ஐகாரக் குறுக்கம் சொல் இடையிலும் இறுதியிலும் ஒலிக்கப்படும் என்று கூறுதலைக் குறிப்பிடலாம்.

நாலாவது பிரிவு ம், ல், ள், த், ன் ஆகியன புணர்ச்சியில் ஏற்படுகின்ற ஓரினமாதலை விவரிக்கிறது.

ஐந்தாம் பிரிவு சொற்புணர்ச்சியில் வல்லினம், அம் சாரியை முதலியன மிகுதலைக் கூறுகிறது.

இறுதிப் பிரிவு ஹ, க்ஷ, ஸ, ஸ்ரீ என்னும் கிரந்த எழுத்துக்களைக் கூறுகிறது.

இரண்டாம் அதிகாரம் பெயர் இலக்கணத்தை விவரிக்கிறது. 'பெயரும் மாற்றுப் பெயரும்' என்பது இந்த அதிகாரத்தின் பெயர். இதில் ஐந்து பிரிவுகள் உள்ளன.

வேற்றுமை இலக்கணத்தை முதற் பிரிவு கூறுகிறது. இதன் இறுதியில் க்கள், கள், மார் என்னும் பன்மைப் பெயர் விகுதிகள் குறித்த கருத்து இணைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது பிரிவு பெயரடைகளைக் கூறுகிறது.

மூன்றாவது பிரிவு 'மூவிடப்பெயர்கள்' எனும் பெயர் உடையது. இதில் மூவிடப் பெயர்கள், சுட்டு வினாப் பெயர்கள் ஆகிய மாற்றுப் பெயர்களும் அவற்றின் வேற்றுமை வடிவங்களும் கூறப்படுகின்றன.

நாலாவது பிரிவு மாற்றுப்பெயர்களிலிருந்து உருவான இந்த, அந்த, எந்த, இன்ன, அன்ன, அ, இ, எ, இப்படி என்பன போன்ற பெயரடைகளைச் சுட்டுகிறது.

ஐந்தாம் பிரிவு திணை - பால் (gender) பற்றிப் பேசுகிறது.

மூன்றாம் அதிகாரத்தின் பெயர் வினைச்சொல். இதில் ஒன்பது பிரிவுகள் உள்ளன. இதன் முதல் மூன்று பிரிவுகள் மூவிட வினைகள் அமையும் விதத்தினை (conjugation of verbs) விவரிக்கின்றன. அவற்றுள் முதலாவது நிகழ்கால வினை அமைப்பினை விளக்குகிறது. ஏனைய இரண்டும் முறையே இறந்தகால, எதிர்கால வினைச் சொற்களை விளக்குகின்றன.

நாலாவது பிரிவு ஏவல் வினைகளை விவரிக்கிறது.

செய என்னும் வாய்பாட்டு வினையெச்ச (infinitive) அமைப்பினை ஐந்தாம் பிரிவு விளக்குகிறது.

ஆறாம் பிரிவு செய்து வாய்பாட்டு இகர, யகர ஈற்று வினையெச்சங்களையும் மூன்று காலத்திற்கும் உரிய பெயரெச்சங்களையும் விளக்குகிறது.

எதிர்மறை வினைச்சொல் அடுத்த பிரிவில் கூறப்படுகிறது.

எட்டாவது பிரிவில் செயப்பாட்டு வினைச் சொற்கள் தமிழில் அமையும் விதம் இடம்பெற்றுள்ளது.

மூன்றாம் அதிகாரத்தின் இறுதிப் பிரிவு ஒக்கும், வேணும், மாட்டேன், இல்லை, அல்ல, உண்டு, போதும், கடவது, தக்க, கூடும், போல என்னும் சொற்களின் பயன்பாட்டை எடுத்துரைக்கின்றது.

இச்சொற்கள் இங்குக் குறைவினை (defective verbs) என்று சுட்டப்படுகின்றன.

நான்காம் அதிகாரம் 'தொடர்' எனப் பெயரிடப்பெற்றுள்ளது. இதில் ஆறு பிரிவுகள் உள்ளன.

முதற் பிரிவு 'தொடரின் அமைப்பு' எனும் பெயர் உடையது. இதில் வேற்றுமைகள் பல்வேறு பொருளில் பெயருடன் இணைந்து அமைகின்ற தொடரமைப்புச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் பிரிவுக்குப் 'பெயர்' எனத் தலைப்பு இடப்பெற்றுள்ளது. இதில் இளமைப்பெயர்கள், ஆண்மைப் பெயர்கள், பெண்மைப்பெயர்கள், தாவரத்தின் உறுப்புப் பெயர்கள், வினையாலணையும் பெயர்கள், தொழிற்பெயர்கள் முதலியன விவரிக்கப்படுகின்றன.

மூன்றாவது பிரிவுக்கு 'வினை' என்பது பெயர். இப்பிரிவு வியங்கோள்வினை, நிபந்தனை வினை, வினையடை முதலியவற்றை விவரிக்கிறது.

நாலாவது பிரிவு கூட்டு வினைகள் பற்றியது. இதில் துணைவினைகள் சேர்ந்து பல்வேறு வினை வகைகள் அமைதல் விவரிக்கப்படுகிறது.

ஐந்தாவது பிரிவு செய வாய்பாட்டு வினையெச்சங்களின் பயன்பாடு பற்றிக் கூறுகிறது.

ஆறாவது பிரிவு இடைச்சொற்கள் பற்றியது. குறிப்பிட்ட இடைச்சொற்களால் தொடர்கள் அமைதல் இப்பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

'அன்றாடத் தேவையாகிய பல்வகைச் செய்திகள்' என்று ஐந்தாம் அதிகாரத்திற்குப் பெயரிடப்பெற்றுள்ளது.

இதன் முதற் பிரிவு எண்ணுப் பெயர்களைக் கூறுகிறது. இரண்டாம் பிரிவு முகத்தலளவைப்பெயர்களைச் சுட்டுகிறது. மூன்றாம் பிரிவு உறவுமுறைப் பெயர்களையும் நான்காம் பிரிவு காலப் பெயர்களையும் கூறுகின்றன. எட்டுத் திசைப் பெயர்களும் அவற்றின் காவல் தெய்வங்களும் அட்டவணையில் சுட்டப்பட்டுள்ளன.

செந்தமிழ் இலக்கணம்

வீரமாமுனிவரால் இலத்தீனில் எழுதப்பெற்ற நூல்களுள் இதுவும் ஒன்று. இந்நூலின் முகப்பில் முனிவர் எழுதிய முகவுரை ஒன்று

13 செப்டம்பர் 1730 என்னும் நாட்குறிப்புடன் உளது. இதனைப் பெஞ்சமின் கெய் பேபிங்டன் (Benjamin Gay Babington) என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, 1822-இல் வெளியிட்டார்.

செந்தமிழ் இலக்கணம் எழுத்துத் தமிழ் வழக்காகிய செந்தமிழை இயேசு சபையினர் அறிந்து கொள்ளும் நோக்கில் இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றது.

தெய்வீகப் பாடல்களும் சமயக் கருத்துக்களும் செந்தமிழ் நடையில் எழுதப்பெற்று, அவ்வப்போது அந்நூல்கள் சமணம், பௌத்தம், சைவம், வைணவம் போன்ற சமயங்களின் பரவலுக்குத் துணையாக அமைந்தன. சமய வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்ற செந்தமிழில் கிறித்துவக் கருத்துக்களை எழுதினால், அது தம் பணி விரைவில் நிறைவேறத் துணை செய்யும் என உணர்ந்த வீரமாமுனிவர், செந்தமிழ் இலக்கணத்தை எழுதி, அதையும் இலத்தீன் அறிந்த பாதிரிமார் பயன்படுத்துமாறு செய்தார்.

நூலமைப்பு

செந்தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், யாப்பு எனும் மூன்று இலக்கணங்களையும் சுருக்கித் தருகிறது.

இந்நூல் உரைநடை, செய்யுள் என்னும் இருவகை எழுத்து மொழி வழக்குகளையும் விளக்குகிறது. இவ்விரு வழக்குகளையும் விளக்குமாறு நூல் இரு பெரும்பகுதிகளாகப் (Parts) பகுக்கப்பெற்றுள்ளது. எழுத்துக்கள், பெயர்ச்சொல், வினைச்சொல் என்னும் மூன்று அதிகாரங்கள் முதற் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

எழுத்திலக்கணம் எழுத்ததிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

வேற்றுமை, பகுபதப்பெயர்கள் (appellative nouns) பெயரடைகள், மாற்றுப்பெயர்கள் ஆகியன பெயர்ச்சொல் அதிகாரத்தில் உள்ளன.

வினைச்சொல் அதிகாரம் முக்கால வினைமுற்றுக்கள், ஏவல்வினைகள், செய வாய்பாட்டு வினையெச்சம், பெயரெச்சங்கள், பிற வினையெச்சங்கள் ஆகியவற்றை விவரிக்கிறது.

இரண்டாம் பகுதி தமிழ்ச்செய்யுள் எனப் பெயரிடப்பெற்றுள்ளது. இதில் செய்யுள் உறுப்புக்கள், பா, இனம், செய்யுட்கலை எனும் நான்கு அதிகாரங்கள் உள்ளன. செய்யுட்கலை என்பதனுள் பாட்டியல் செய்திகள் அடக்கப் பெற்றுள்ளன. அதிகாரந்தோறும் பிற்சேர்க்கை இணைக்கப் பெற்றுள்ளது.

தொன்னூல் விளக்கம்

தமிழ் இலக்கண நூல்களின் கருத்துக்களை மரபினை ஏற்று நூற்பா வடிவில் கி.பி. 1730இல் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல் இது. இந்நூலை எழுதிய வீரமாமுனிவரே உரையும் எழுதியுள்ளார். இதற்குத் தெருட்குரு எனும் பெயரும் உண்டு.

தொன்னூல் விளக்கம் எழுதப்பட்டதன் நோக்கத்தினைப் பொதுப்பாயிரம், ''ஐந்திலக்கணப் பொருட்களைக் கல்லாதவருங் கண்டுணரும்படி தெளிவாக விளக்கத் துணிந்ததைப் பற்றித் தொன்னூல் விளக்கமென விந்நூற் பெயராகி'' என்று கூறுகிறது. மேலும், நூலின் இறுதி நூற்பாவில், 'முந்நூல் விளக்கிய முத்தமிழ்த் தொன்னூல் விளக்கந் துலங்கிய வாறே' என்றும் உரையில் 'முன்னூற் றுளக்கிய வைந்திலக்கணத் தொன்னூல்விளக்கம் முற்றிற்று' என்றும் முனிவர் குறிப்பிடுகிறார்.

இந்நூலின் சிறப்புப் பாயிரத்திற்கு எழுதிய உரையில் முனிவர் பின்வருமாறு விவரிக்கிறார்.

> மூத்தோர் புதைத்த வரும்பயனாகிய பொருளைக் கண்டறிந் தெடுப்பதற் கிலக்கண நூலே விளக்கம். விளக்குத, லால் விளக்கென்னப் பட்டது. ஒளிவிடா மூடின தீபத்தாற் பயனில்லை யென்றது போல முன்னோர் தந்த விலக்கண நூலெலாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக் கிடப்ப விக்காலத் தவ்விளக்கொளியைக் காண்பாரில்லாதற்கொரு பயனுமில்லை. தென்மொழியார்க்கு வடமொழியைத் தானுணர்த்தக் கருதி, அவர் முன்னறிந்த தமிழ்ச்சொற் கொண்டலவோ வடமொழிப் பயனையுரைத்தல் வேண்டுமாகையான் மூத்தோர் புதைத்த நூனலம் விளங்கவுங் கல்லாதவரும் பயன் கொண்டுணரவு நானே யதன்மேற் கவித்த போர்வை நீக்கி யறிஞர் முன் கொளுத்தின தீபமெவர்க்கு மெறிப்பக் கையிலேந்தினாற் போல வவர்முன் செந்தமிழ்மொழியான் மறைத்த விலக்கண நூலை யிளந் தமிழுரையால் வெளிப் பொருளாக்க நினைத்தேனாயினு முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தாலிந்நூலும் பெருகிக் கண்டவரஞ்சித் துணியாரென்று கருதி முணமிகவறிய வேண்டுவதொன்றைத் தெரிந்து தருவேன்.

தொன்னூல் விளக்கத்தில் காணப்படுகிற எடுத்துக்காட்டுகள் முதலியன இலத்தீன் உள்ள **கிலாவிஸிலும்** காணப்படுதலால்

தொன்னூல் விளக்க உரையாசிரியர் வீரமாமுனிவரே என்பது தெளிவாகிறது.

முந்தைய இலக்கண நூல்களின் கருத்துக்கள் புரிதற்குக் கடினமானவையாக உள்ளமையால், அவற்றை எளிமையாக விளக்கும் பொருட்டு இதனைச் சுருக்க நூலாக எழுதுவதாக முனிவர் கூறுகிறார். எனினும் **தொன்னூல் விளக்கம்** எனும் பெயருக்கு **இலக்கண விளக்கம்** உந்துதலாக அமைந்தது எனின் தவறன்று. சமண, சைவ அறிஞர்களின் இலக்கண நூல்களைப் போன்று கிறித்துவ சமயத்திற்கும் ஒன்று தேவை எனும் மனவெழுச்சியும் இந்நூலை முனிவர் எழுதிடக் காரணம் எனலாம்.

நூலமைப்பு

தொன்னூல் விளக்கம் 370 நூற்பாக்களைக் கொண்டது. எழுத்ததிகாரம் (letters), சொல்லதிகாரம் (words), பொருளதிகாரம் (porul), யாப்பதிகாரம் (prosody), அணியதிகாரம் (rhetorical embellishment) எனும் ஐந்து அதிகாரங்களைக் கொண்டது.

இந்நூல் எழுத்து, சொல் இலக்கணங்களை **நன்னூலைத்** தழுவி விவரிக்கிறது. இதன் பொருளிலக்கணம் **நம்பியகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை** ஆகியவற்றைத் தழுவியுள்ளது. **யாப்பிலக்கணம் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, தொல்காப்பியம், இலக்கண விளக்கப் பாட்டியல்** ஆகியவற்றைப் பின்பற்றி அமைந்துள்ளது. அணியிலக்கணத்தில் தண்டியலங்காரத்தின் தாக்கம் மிகுதியாக உள்ளது. இவை தவிர, வீரசோழியம், திருக்குறள், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி எனப் பல நூல்களின் பாடல்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன.

ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதியிலும் அங்கு விவரிக்கப்பட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறும் தொகை நூற்பா ஒன்று இடம்பெற்றுள்ளது.

எழுத்திலக்கணம்

தோற்றம், வகுப்பு, விகாரம் எனும் முப்பிரிவுகளில் எழுத்ததிகாரம் அமைந்துள்ளது. இப்பகுப்பு ஒலிப்பியல், ஒலியனியல், உருபொலியனியல் எனும் இக்கால மொழியியல் முறையில் காணப்படுகிறது.

சொல்லிலக்கணம்

சொல்லிலக்கணம் சொற்பொதுவியல், பெயர், வினைச்சொல்லியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் எனும் ஐந்து ஓத்துக்களில் விவரிக்கப்பெறுகிறது.

சொற்பொதுவியல்

இயற்சொல், திரிசொல், ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி, பகாப்பதம், பகுபதம், ஆகுபெயர், இருதிணை, மூவிடப் பெயர்கள், சாரியைகள் ஆகியன இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

பெயர்

பெயர் ஓத்தில் வேற்றுமையியல், பகுபதப்பெயரியல், தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியல், சுட்டுவினா எனும் நான்கு பிரிவுகள் உள்ளன.

வினைச்சொல்லியல்

இவ்வியலில் முக்கால முற்றுவினை, ஏவல் வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு என நான்கு பகுதிகளாகப் பிரித்து வினைச்சொல் இலக்கணம் விவரிக்கப்படுகிறது.

இடைச்சொல்லியல்

இடைச்சொற்கள் 'ஒட்டுநிலைச்சொற்கள் (particles)' என்று கூறப்படுகின்றன. நன்னூலின் எட்டு வகைகளும் இடைச் சொற்களாக இந்நூலில் ஏற்கப்பெற்றுள்ளன. மேலும், அந்தில், ஆங்க, மா, அம்ம போன்ற தொல்காப்பியம் கூறும் இடைச்சொற்களும் இடம்பெற்றுள்ளன. இவை தவிர, வேறுசில இடைச்சொற்களையும் உரை குறிப்பிடுகிறது.

உரிச்சொல்லியல்

உரிச்சொற்கள் 'அடைமொழிகள்' (attributives) என்று கூறப்பட்டுள்ளன.

பொருளிலக்கணம்

பொருளிலக்கணம் குறித்து இந்நூலாசிரியர் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

> "புலவரானுரைக்கத் தகும் பொருளாவன: அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு. இவற்றுட் பொருணூற்றந்த செந்தமிழுணர்ந்தோர் மற்றை யாவுமொழிய அகப்பொருளெனச் சிற்றின்பமொன்றையும் புறப்பொருளெனப் படைச்சேவகமொன்றையும் விரித் துரைத்தார். அங்ஙனம் பொதுப்படாதுரைத்த நூல் சிறு பான்மையாகையின் இங்ஙனம் அறமுதனான்கிற் கேற்பப் பொது நூலாக விவ்வதிகார முடியுமெனவே கொள்க".

பொருளதிகாரம் பதிகம், காரணம், விரிவு, தொகையும் துணிவும், உரிமை எனும் ஐந்து ஒத்துகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

யாப்பிலக்கணம்

யாப்பதிகாரம் செய்யுளுறுப்பு, செய்யுளியல், செய்யுள் மரபியல் எனும் மூன்று ஒத்துகளில் விவரிக்கப்படுகிறது.

செய்யுளுறுப்பு

வெண்பா, அகவல், கலி, வஞ்சி, மருட்பா எனும் ஐவகைப் பாக்களும் துறை, தாழிசை, விருத்தம் எனும் மூவகைப் பாவினங்களும் இப்பகுதியில் விவரிக்கப்படுகின்றன.

செய்யுள் மரபியல்

பெருங்காப்பிய இலக்கணமும், பிள்ளைத்தமிழ், உலா, பரணி போன்ற சிற்றிலக்கியங்களின் இலக்கணங்களும் இவ்வியலில் விவரிக்கப்படுகின்றன. மேலும், மங்கலம் முதலிய எழுத்துப் பொருத்தங்களும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நால்வகைக் கவிஞர்களின் இலக்கணங்களும் இங்குக் கூறப்படுகின்றன.

அணியிலக்கணம்

இப்பகுதியில் முப்பது சொல்லணிகளும் முப்பது பொருளணிகளும் விவரிக்கப்படுகின்றன. பெரும்பான்மைச் செய்திகள் தண்டியலங்காரத்தைத் தழுவியவை. சில அணிகளின் பெயர்கள் மாறிக் காணப்படுகின்றன. அணியதிகாரத்தில் சொல்லணியியல், பொருளணியியல் ஆகிய இரு ஒத்துகள் உள்ளன.

குட்டித்தொல்காப்பியம்

இலக்கண விளக்கத்தையும், தொன்னூல் விளக்கத்தையும் 'குட்டித்தொல்காப்பியம்' என்று கருதும் வெவ்வேறு கருத்துக்கள் உள்ளன. **வீரசோழியம், நன்னூல்** முதலிய நூல்கள் **தொல்காப்பிய** நெறியிலிருந்து பிறழ்ந்து வடமொழிக்கு முன்னுரிமை தந்து இலக்கணம் கூறுகின்றன. இதற்கு மாற்றாக **இலக்கண விளக்க** ஆசிரியர் மீண்டும் **தொல்காப்பியக்** கருத்துக்களை விவரித்துச் செல்கிறார். ஆனால் வீரமாமுனிவரோ **நன்னூலைப்** பெரிதும் தழுவுகிறார். மேலும், நூலமைப்பும் கருத்துவிவரிப்பும் மேலைநாட்டு முறையில் காணப்படுகின்றன. எனவே **இலக்கண விளக்கத்தைக்** குட்டித் தொல்காப்பியம் எனக் கூறுதலே தகும். (பெ.சுயம்பு, **செந்தமிழ்**, 2002, பக். 440-445).

கிலாவிஸ்

தொன்னூல் விளக்கத்தின் சுருக்கம்

இது மேலைநாட்டு முறையிலானது. வீரமாமுனிவர் இறுதியாக எழுதிய இலக்கணநூல் **கிலாவிஸ்.** இதன் முழுப்பெயர் உயர்தமிழ் மொழியின் இலக்கியத் திறவுகோல் (Clavis Humaniorum Litterarum Sublimioris Tamulici Idiomatis) என்பதாகும். முனிவர் செந்தமிழை உயர்தமிழ் என்கிறார். இந்நூல் **தொன்னூல் விளக்கத்தில்** கூறப்பட்டுள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐவகை இலக்கணங்களையும் சுருக்கி இலத்தீன் மொழியில் விவரிக்கிறது. இது இன்னும் தமிழாக்கம் செய்யப்பெற்றதாகத் தெரியவில்லை. முனிவர் தாம் எழுதிய **தொன்னூல் விளக்கத்தை** மேலை நாட்டவருக்கு அறிமுகம் செய்யும் நோக்கில் இந்நூலை எழுதியுள்ளார். இதனைத் **தொன்னூல் விளக்கத்தின்** சுருக்க நூல் எனலாம்.

நூலமைப்பு

அதிகாரம், இயல், உட்பிரிவுகள் எனும் முறையில் **கிலாவிஸின்** அமைப்பு காணப்படுகிறது.

எழுத்திலக்கணம்

எழுத்ததிகாரம் எழுத்தின் வகை, எழுத்தின் குறுக்கமும் நீட்சியும், எழுத்தின் மாற்றம் (விகாரம்) என மூன்று இயல்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது.

சொல்லிலக்கணம்

சொல்லிலக்கணம் சொல்-பொது, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என ஐந்தாகப் பகுக்கப்பட்டுள்ளது.

பொருளிலக்கணம்

பொருளதிகாரம் ஒரே இயலில் செய்திகளைக் கூறுகிறது. இங்குக் காலவுரிமை, இடவுரிமை, பண்பு உரிமை, சொல்லுரிமை எனும் நால்வகை உரிமைகள் பேசப்படுகின்றன. இவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளுக்கும் உரியவை.

யாப்பிலக்கணம்

யாப்பிலக்கணம் நான்கு இயல்களில் விவரிக்கப்படுகிறது. முதல் இயலில் செய்யுள் உறுப்புக்கள் விவரிக்கப்படுகின்றன. இரண்டாவது

இயலில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகிய பாவகைகள் கூறப்படுகின்றன. மூன்றாவது இயல் துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்களை விவரிக்கிறது. இறுதி இயலில் பெருங்காப்பிய இலக்கணத்துடன் பிள்ளைத் தமிழ், கலம்பகம், உலா, மடல் போன்ற சிற்றிலக்கியங்களும் விவரிக்கப்படுகின்றன. மேலும், மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணா, வருணம், நாள், கதி, கணம் போன்ற பத்துப் பொருத்தங்களும் சுட்டிக் கூறப்படுகின்றன.

அணியிலக்கணம்

சொல்லணி,பொருளணி எனும் இருவகை அணிகளையும் தனித்தனி இயல்களில் இவ்வதிகாரம் விவரிக்கிறது. பொருள்கோள்கள் சொல்லணிகளாக முதல் இயலில் விவரிக்கப்படுகின்றன. பொருளணிப் பகுதியில் தன்மை, உவமை, உருவகம், தீவகம் போன்ற அணிகள் சில விவரிக்கப்படுகின்றன.

3. வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்

சொல்

வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்தில் சொல்லின் வரைவிலக்கணத்தை விவரிக்கிறார்.

எச்சொல்லும் பெயர்வினை யிடையுரி யெனநான்
கிவற்றுட் பொதுவென வியற்சொற் றிரிசொ
லொருமொழி தொடர்மொழி யொருவிலாப் பொதுமொழி
பகாப்பத மென்றா பகுபத மென்றா
வாகுபெய ரிருதிணை யைம்பான் மூவிடஞ்
சாரியை யெனப்பொதுத் தகுதியீ ராறே

(தொன்னூல் விளக்கம், 42)

பெயர், வினை, இடை, உரி எனும் நான்கனுள் ஒரு வகையாகச் சொல் வழங்கும். இத்தகைய சொல் 1. இயற்சொல்லாகவோ, 2. திரிசொல்லாகவோ வழங்குதல், 3. ஒருமொழியாக அமைதல், 4. தொடர்மொழியாக அமைதல், 5. பொதுமொழியாக அமைதல், 6. பகாப்பதமாக அமைதல் அல்லது 7. பகுபதமாக அமைதல், 8. ஆகுபெயராக வழங்குதல், 9. இருதிணையுள் ஒன்றை உணர்த்துதல், 10. ஐம்பால்களுள் ஒன்றை உணர்த்துதல், 11. மூவிடங்களுள் ஒன்றில் வழங்குதல், 12. சாரியையாகச் செயற்படுதல் எனும் பன்னிரு தகுதிகளைக் கொண்டது.

ஒருசொல் பொருளை உணர்த்தும் விதம், அதன் கட்டமைப்பு, அது உணர்த்தும் பொருண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பன்னிரு தகுதிகளைக் கண்டு, அவற்றைப் பெயர், வினை, இடை, உரி எனும் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவான தகுதிகள் ஆகும் என்று முனிவர் சொல்லுக்கு வரைவிலக்கணம் கூறுகிறார்.

இயற்சொல், திரிசொல் இரண்டும் செந்தமிழ்ச் சொற்கள். ஆதலால் அவற்றைத் தமிழ்ச்சொல்லின் வரைவிலக்கணத்தைக் கூறுமிடத்து முனிவர் விவரிக்கிறார். திசைச்சொல்லும் வடசொல்லும் செந்தமிழ்ச் சொற்கள் அல்ல. எனவே, திசைச்சொல், வடசொற்களை இப் பொதுஇலக்கணத்துள் அடக்கவில்லை. அவற்றை அவர் பொருளதிகாரத்தில் சொல்லுரிமை எனும் பகுதியில் விவரிக்கிறார்.

வடசொற்கள் தமிழ் எழுத்துக்களுக்கேற்பத் திரிந்து வழங்குகிற முறையை விவரித்து விட்டு, வடசொற்களைக் கலந்து அமைக்கப்படுகிற செய்யுட்கள் இனிமையானவை என்பதனையும் வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.

உறுப்புச் செய்யுளென் றுரைப்ப தற்பவச்
சிறப்புரை விரைவிச் செப்பிய செய்யுளே

(தொன்னூல் விளக்கம், 192)

இதற்கு முனிவர்,

> தற்பவ மொழிக்குச் சிறப்பு விதியை யுணர்த்தும். தேசிகச் சொல்லொடு வடமொழியிற் றிரிந்த தற்பவச் சொல்லொன்றிரண்டுங் கலந்து வந்த செய்யுள் கேட்போர்க்கின்பமாக வழங்கு முறுப்புச் செய்யுளெனப்படும்.

என்று உரை எழுதுகிறார்.

கருணாம் பரியாயப் பாவாதி வினையிருட் கங்குலற
வருணாம் பரியாக வந்துதித் தாளே யனைத்துயிரா
ரிருணாம் பரிதருஞ் சீலத்து வான்கதி யெய்தவிவ
டெருணாம் பரிதாஞ் சரணாம் புயஞ்சென்னி சேர்த்துகவே

என்பது போன்ற பாடல்களையும் எடுத்துக்காட்டுகிறார்.

வடசொல் இலக்கணத்தைத் தொடர்ந்து, கொங்கணம், மகதம், கோசலம் முதலான பதினெண் மொழிகள் வழங்குகிற நாடுகளையும் வைகை ஆற்றிற்கும் மருதை ஆற்றிற்கும் இடைப்பட்ட செந்தமிழ்நாடு, பாண்டி, குட்டம் முதலிய பன்னிரு கொடுந்தமிழ் நாடுகளையும் தொன்னூல் விளக்கம் (193) விவரிக்கிறது. எனவே வடசொற்களும் திசைச்சொற்களும் செய்யுளில் வழங்குதற்கு உரிய என்று கொண்டு, முனிவர் அவற்றைப் பொருளதிகாரத்தில் விவரிக்கிறார் எனலாம். தொல்காப்பியம் உள்ளிட்ட ஏனைய நூல்கள் இவற்றை இயற்சொல், திரிசொல்லுடன் சேர்த்துச் செய்யுளீட்டச் சொற்கள் என்று கூறுகின்றன.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

(தொல்காப்பியம், எச்சவியல், 1)

அயல்மொழியிலிருந்து இலக்கியங்களைப் பெறுதல் மொழிவாழ்வில் வளம் சேர்க்கிற வழிமுறைகளில் ஒன்றாகும். எனவே அயல்மொழிச்சொற்களைக் கடன் வாங்குதல் தவிர்க்கவியலாததாகும்.

மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலை இலக்கிய வகையாக ஏற்றுக் கொள்கிற *தொல்காப்பியத்திற்கு* இக்கொள்கை எற்புடையதே. எனினும் வடசொலலுக்குத் தனி வகையை அமைத்திருப்பது அம்மொழியின்பால் அக்காலத்திலிருந்த மதிப்பே காரணம் எனின் தவறாகாது.

சொல்லின் பொதுஇலக்கணத்துள் பகாப்பதம், பகுபதம், ஆகுபெயர், சாரியைகளைச் சேர்த்துக் கூறுதல் *நன்னூல், இலக்கண விளக்கம்* முதலிய நூல்களில் இல்லாத புதுநெறியாகும்.

சொல் வகைகள்

சொல்லெனப் படுவ தன்றொகுதி நான்கவற்றுட்
சனுக்கிரகஞ் சங்கதந் தேவர் மொழியே
யவப்பிரஞ் சனமொழி யாமிழி சனர்க்கே
வொவ்வொரு நாட்டிடை யுரைப்பது பாகத
மிதுமூ வகைத்தாய் வடமொழி திரிவன
தற்பவம் பிறவும் பொதுமைய தற்சமஞ்
சிறந்தொன்றற் குரியன தேசிக மென்ப (தொன்னூல் விளக்கம், 191)

சனுக்கிரக மொழிச்சொல், சங்கத மொழிச்சொல், அவப்பிரஞ்சன மொழிச்சொல், பாகத மொழிச்சொல் எனச் சொல் நான்கு வகைப்படும். பாகத மொழிச்சொல் தற்பவச்சொல், தற்சமச்சொல், தேசிகச்சொல் என்று மூவகைப்படும். தேசிகச்சொல்லின் ஒருவகை தமிழ்ச்சொல் என்று பொருளதிகாரத்தில் கூறப்படுகிறது. இத்தமிழ்ச் சொல் இயற்சொல்லாகவோ திரிசொல்லாகவோ பொருளை உணர்த்தும். இதனைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகத் தொன்னூல்விளக்கம் சொற்பொதுவியலில் வகைப்படுத்துகிறது.

சமஸ்கிருத மொழியை முனிவர் சனுக்கிரகம் என்று கூறுகிறார். இதன் திரிபுற்ற பேச்சுவழக்கு பிராகிருதம் எனப்படுகிற பாகதமொழி. இப்பாகத மொழியிலிருந்து பாரதநாட்டு மொழிகள் யாவும் உருவாயின என்பது பண்டைய வடமொழிப் பற்றார்ந்த கொள்கையாகும். இக்கொள்கை முன்னாளில் பாரத நாட்டில் பரவலாக ஏற்கப்பெற்றிருந்தது.

சமஸ்கிருதமொழிக்குப் பாரத நாட்டிலிருந்த செல்வாக்கினை அதன் எதிர்ப்பாளராலும் முற்றிலுமாக ஒதுக்கிட இயலவில்லை. தொல்காப்பியனாரும் செய்யுள் ஈட்டச் சொற்கள் நான்கனுள் ஒன்றாக வடசொல்லைச் சேர்த்துள்ளார். வடசொல்லும் அயல்மொழிச் சொல்லே. எனினும் அயல்மொழிச் சொற்களின் பொது வகையாகிய திசைச்சொல் என்பதனுள் அடக்காது, வடசொல்லைத் தனியொரு வகைச் சொல்லாக்கித் தொல்காப்பியனாரும் சிறப்பித்துள்ளார்.

வீரமாமுனிவர் தமிழ்நாட்டு மொழிமரபிலக்கணங்களைத் தழுவித் **தொன்னூல் விளக்கத்தை** எழுதுகிறார். அவர் வடமொழிமீது பற்றுக்கொண்டவர். வடசொற்களைக் கலந்து எழுதுதலைப் பெருமைக்குரியது எனும் எண்ணம் உடையவர். அவரது இலக்கண நூல்கள் யாவற்றிலும் சமஸ்கிருத வழக்கினை ஒப்பிட்டுக் காட்டுதற்கு அவர் தவறவில்லை. எனவே வடமொழியான பாகதத்திலிருந்து தமிழ்மொழி தோன்றியது எனும் கொள்கையை அவர் தவிர்க்கவில்லை.

தமிழ் மிகப் பழமையும் செழுமையும் நிறைந்த மொழி; திராவிடம் எனும் தனிமொழிக் குடும்பத்திற்குத் தாயைப் போன்றது. இத்திராவிடமொழிகள் இந்தோ-ஆரியக் குடும்பத்தைச் சேர்ந்த வடமொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. எனவே முனிவரின் கொள்கை ஏற்புடையதன்று. திராவிட மொழிகள் தனிமொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்பது இராபர்ட் கால்டுவெல் முதலிய அறிஞர்களால் உறுதி செய்யப்பெற்ற கொள்கை ஆகும்.

நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற நூல்கள் தமிழ்ச் சொல்லின் பொது இலக்கணத்தின் கூறாக இயல்பு, தகுதி எனும் இருவகை வழக்குகளையும் அடக்கிக் கூறுகின்றன. ஆனால் முனிவரோ இவ்வழக்குகளைச் செந்தமிழ் வழக்குகள் எனக் கொண்டு பொருளதிகாரச் சொல்லுரிமையுள் அடக்கியுள்ளார். தவிர, சொல் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருணர்த்தும் முறைகளும் இப்பகுதியிலேயே கூறப்பெற்றுள்ளன.

செந்தமிழ் வழக்குரை செப்புங் காலை
யிலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉ வென்றொரு மூவகைத்தா மியல்பு
மிடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
யெனுமுத் தகுதியோ டிருமூன் றாகும்

(தொன்னூல் விளக்கம், 194)

குறிப்பு மொழிவகைக் கூறின் பொதுச்சொல்
விகாரந் தகுதி வினைக்குறிப் பாகுபெய
ரன்மொழி முதற்றொகைப் பொருட்டொகைக் குறிப்பென
வொன்பதும் பிறவுமிவ் வொழிந்தன வெளிப்படை

(தொன்னூல் விளக்கம், 195)

பொருளெனப்படுவதுதான் விரித்துரைப்பானெடுத்த பொருளைப் பயன்படக் கூறும்படியைக் காட்டு நூலேயெனக் கண்டுணர்க என்று பொருள் என்பதற்கு இந்நூல் (144) விளக்கம் தருகிறது. நூலின் நுவல்

கருத்தாகிய பொருளை உணர்த்துதற்குரியன சொல். ஆதலால் சொல்லுரிமையுள் முனிவர் சொல்லின் வகைகளையும் அவை பொருளை உணர்த்துகிற முறைகளையும் அடக்கியுள்ளார்.

செந்தமிழ் இலக்கணமும் கொடுந்தமிழ் இலக்கணமும் சொல் இலக்கணத்தைப் பெயர், வினை என இரண்டாக வகைப்படுத்துகின்றன. இவை உரிச்சொற்களைப் பெயரடைகள் எனக் கருதுவதோடு, பெயரடைகளைப் பெயர் இலக்கணத்தின் ஒரு பகுதியாக விவரிக்கின்றன. மேலும், இடைச்சொற்கள் சில தொடர் இலக்கணத்துள் அடக்கி இந்நூல்களில் விவரிக்கப்பெற்றுள்ளன.

இடைச்சொற்களுள் சில சொல்லமைப்பில் ஒட்டுக்களாகவும் வேறு சில தொடரமைப்பில் உணர்ச்சிப் பொருளைத் தருகிற துணை உறுப்புக்களாகவும் வருகின்றன. எனவே பெயர், வினை ஆகிய சொற்களின் அமைப்பில் வருகிற விகுதி, கால இடைநிலை, சாரியை, பெயரிலக்ணத்தோடு ஒருங்கிணைந்த வேற்றுமை உருபு முதலியவற்றைப் பெயர், வினை இலக்கணங்களோடு ஒருங்கிணைத்தும் தொடர் அமைப்பில் வருவனவற்றைத் தொகுத்து, அவற்றிற்கு இடையியல் எனும் தனி இயலை அமைத்தும் தமிழ் இலக்கண நூல்கள் விவரிக்கின்றன.

வீரமாமுனிவர் உரிச்சொற்களை அடைமொழிகள் (attributives) எனவும் இடைச்சொற்களுள் சில தொடரமைப்பில் உறுப்புக்களாக வரும் எனவும் கருதும் கொள்கை உடையவர். எனினும் தமிழ் மரபை ஏற்றுத் *தொன்னூல் விளக்கத்தில்* சொற்கள் நான்கு வகைப்படும் என்று கூறுகிறார். ஆனால் அயல்மொழியாளருக்காக எழுதப் பெற்ற செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் இரண்டிலும் பெயர், வினை இரண்டை மட்டுமே கூறி, அவற்றின் உட்பிரிவுகளில் ஏனைய இரண்டையும் அடக்கி விவரிக்கிறார். கிலாவிஸில் தொன்னூல் விளக்கத்தின் கொள்கை காணப்படுகிறது.

தமிழ் மரபிலும் பெயர், வினைகளுக்குக் கொடுக்கப்பெற்ற முதன்மை இடம் இடை, உரிச்சொற்களுக்குத் தரப்படவில்லை. இடை, உரிச்சொற்களைப் புணர்ச்சி இலக்கணத்தில் விரிவாகக் கூறாது, 'பெயர், வினைகளுக்குச் சொல்லப்பெற்ற விதிகளுள் ஏற்பனவற்றை இடை, உரிச்சொற்களுக்கும் இயைபுபடுத்திக் கொள்க' என்றே இலக்கண நூல்கள் கூறுகின்றன.

இடை, உரி எனும் இரண்டும் தனித்து வழங்குகிற ஆற்றல் இன்றி, தனித்து வழங்கவல்ல பெயர், வினைகளைச் சார்ந்து வரும்.

பெயர், வினைகளுக்கு உறுப்புக்களாக வரும். இடை, உரிகள் இலக்கண நூல்களில் சிறப்புப் பெறாமைக்கு இவை போல்வன காரணங்கள் ஆகும்.

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே

(தொல்காப்பியம், பெயரியல், 4)

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப

(தொல்காப்பியம், பெயரியல், 5)

அதுவே,

இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்குமாந் திசைவட சொல்லணு காவழி **(நன்னூல். 270)**

என்பன தமிழ் இலக்கண நூல்களின் விதிகள்.

முத்துவீரியம் பெயர், வினை ஆகிய இரு சொற்களையும் முறையே பெயரியல், வினையியல் எனும் இயல்களை அமைத்தும் இடை, உரி இரண்டையும் ஒழிபியலில் அடக்கியும் கூறுகிறது. எனவே தமிழ் இலக்கண மரபிலும் இடை, உரி எனும் இரண்டிற்கும் பெயர், வினைச்சொற்களுக்கு இணையான இடம் இல்லை என்பது உண்மை.

சொற்களின் வகைகளைத் **தொன்னூல் விளக்கம்** ஈற்றில் வருகிற பால்விகுதி, எச்சவிகுதிகளால் இனம் காட்டி விவரிக்கிறது. செந்தமிழ் இலக்கணத்திலும் கொடுந்தமிழ் இலக்கணத்திலும் கால இடைநிலைகளுடன் இணைத்த விகுதிகளால் சொல் வகைகள் விவரிக்கப்படுகின்றன. வீரமாமுனிவர் தமிழ்மரபு, ஐரோப்பிய மரபு எனும் இருவகை மரபுகளைத் தழுவி இலக்கணம் கூறுதலே இருவேறுபட்ட சொல்லமைப்பு விளக்கத்திற்குக் காரணமாகும்.

பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் வரைவிலக்கணம்

பெயர்ச்சொல்லின் இலக்கணத்தைத் **தொன்னூல் விளக்கம்** வேற்றுமையியலில் வீரமாமுனிவர்,

பெயரே வேற்றுமை பெற்றிடம் பாறிணை
காட்டித் தொழில காலங் காட்டா
மரபு காரண மாக்கங் குறியென்
றவைநாற் றகுதி யாகு மென்ப **(தொன்னூல் விளக்கம், 53)**

என்று கூறுகிறார். சொற்பொதுவியல் உரையில் (42) 'பொருளை விளக்குவது பெயரே' என்ற விளக்கத்தையும் தருகிறார்.

பெயர்ச்சொல்லின் இவ்விளக்கம் **நன்னூல், இலக்கண விளக்கம்** ஆகிய முந்தைய நூல்களின் நூற்பாவைத் தழுவியும் **தொல்காப்பிய, இலக்கண விளக்க** உரைகளைத் தழுவியும் காணப்படுகின்றன.

பெயர்ச்சொல் அமைப்பு

வீரமாமுனிவர் சொல்லின் அமைப்பு அடிப்படையில் பெயர்ச்சொற்களை இரண்டாக வகைப்படுத்துகிறார்.

1. பகாப்பதப் பெயர்கள்
2. பகுபதப் பெயர்கள்

தொன்னூல் விளக்கத்தில் பகாப்பதப் பெயர்கள் என்று குறிக்கப்படுதற்கு இணையான சொல்லாகச் **செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், கிலாவிஸ்** மூன்றிலும் proper nouns எனும் சொல்லைப் பகாப்பதப் பெயர்கள் என்பதை அடுத்து மொழிபெயர்ப்பாக எழுதியுள்ளார்; பகுபதப்பெயர்களுக்கு மொழிபெயர்ப்பாக appellative nouns எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

பகாப்பதப் பெயர்கள் பகுதி மட்டுமே உடையன.

எ-டு. வில்

பகுபதப் பெயர்கள் பகுதி, விகுதி ஆகியவற்றை உடையன. சிலவற்றில் இடைநிலையும் அமையும்.

எ-டு. வில்லான், அறி-ஞ்-அன்

பகுபதம் ஒன்றாய்ப் பலவொருங் குணர்த்தின்
பகாப்பதம் அவற்றுள் பகுதி என்ப **(தொன்னூல் விளக்கம், 83)**

அன்ஆன் அள்ஆள் அர்ஆர் துஐ
அபிறவும் ஐம்பால் பெயர்ப்பகுபத விகுதியே
(தொன்னூல் விளக்கம், 85)

தொன்னூல் விளக்கம் (85) ந், ஞ் எனும் இரண்டும் பகுபதப் பெயர்களில் இடைநிலைகளாக வருதலைக் கூறுகிறது.

நஞவிடைப் பகுபத நண்ணலு நெறியே

எ-டு. கிளைநர், இளைநர், கடைநர், கிளைஞர், இளைஞர், கடைஞர், அறிநர், துணிநர், அறிஞர், துணிஞர்.

மேலும் வலைச்சி, வண்ணாத்தி ஆகிய சொற்களில் சகரமும் தகரமும் இடைநிலைகள் என்றும் முனிவர் உரையில் கூறுகிறார்.

இலக்கண விளக்கம் இவற்றைப் பெயரிடைநிலை என்று கூறுகிறது. முனிவர் முந்தைய நூல்களைத் தழுவிக் கூறுகிறார்.

வீரமாமுனிவர் அஃறிணைப் பன்மைப் பெயர்களில் கள், க்கள் விகுதிகளும் உயர்திணைப் பன்மைப் பெயர்களில் கள், ர்கள், மார் விகுதிகளும் அமைதலையும் குறிப்பிடுகிறார்.

எ-டு. கிளிகள், கண்கள்,
அவர்கள், குருக்கள், அண்ணன்மார்

-க்கள் எனும் விகுதி சந்தியில் வருகிற ஒற்றெழுத்தைச் சேர்த்துப் பிரித்ததாகும். இவ்வாறு பிரிப்பது மொழியியல் நெறியாகும்.

செந்தமிழ் இலக்கணம் பின்வருமாறு பெயர்ச்சொற்களின் அமைப்பினை விவரிக்கிறது.

பகாப்பதப் பெயர்கள் தனிச்சொற்களாக அமைந்து, ஒரு பொருளை மட்டுமே உணர்த்துதலால் பகாப்பதம் எனக் கூறுப்படுகின்றன.

எ-டு. வில். வில் எனும் ஒரு பொருளை மட்டும் குறிக்கிறது.

பகுபதப்பெயர்கள் கூட்டுச்சொற்கள் ஆகும். அவை இரு பொருள்களை உணர்த்துகின்றன; எனவே பகுபதம் எனப்படுகின்றன.

எ-டு. வில்லான். வில் எனும் பொருளையும் வில்லைப் பிடித்திருப்பவனையும் குறிக்கிறது.

பகுபதப்பெயர்கள் பெயர் அல்லது வினையிலிருந்து உருவாக்கப்படுகின்றன. ஆறு வகைப் பகுதிகளிலிருந்து இப்பெயர்கள் அமைகின்றன. இது நன்னூலில், 'பொருளிடங் காலஞ்சினை குணந்தொழிலின் வருபகுபதமே' எனக் கூறப்படுகிறது.

1. பொருள் - வில்லினன் (வில்), முடியினன் (முடி)
2. இடம் - மலையினன் (மலை), தெலுங்கன் (தெலுங்கு)
3. காலம் - இக்காலத்தான், முற்காலத்தான், பரணியான், கேட்டையான்
4. சினை - தொள்ளைக்காதன், நெடுங்கண்ணன்
5. குணம் - கொடியன் (கொடுமை), இனியன் (இனிமை), கூனன் (கூன்), நெடியன் (நெடுமை), குள்ளன் (குள்ளம்).
6. தொழில் - வாணிகன் (வாணிகம்), செலவினன் (செலவு), விரைவினன் (விரைவு)
7. ஓதினன் - ஓதுவான் (ஓதுதல்)
8. காத்தவன் - காப்பான் (காத்தல்)

ஓதுவான், காப்பான் போன்ற சொற்கள் பிற இலக்கணத்தில் கூறப்பட்டிருத்தல் போன்று பகுபதப்பெயர்களாகவும் கருதத் தக்கவை. இவை இரண்டிற்குமிடையே ஒலிப்பு வேறுபாடு உள்ளதை நன்னூல் குறிப்பிடுகிறது. ஓதுவான் எனும் சொல் வினைச்சொல்லாக வருமிடத்தைவிடவும் பகுபதப்பெயராக வருமிடத்து மிகுதியாக வாயைத் திறந்து ஒலிக்கப்படுகிறது.

பகுபதப்பெயர்களின் அமைப்பு ஒருசீராக இல்லாததால், விதிகளை உருவாக்கி அவற்றின்படி விவரிக்கவியலவில்லை.

எ-டு. வில் எனும் சொல்லிலிருந்து வில்லி, வில்லன், வில்லவன், வில்லோன், வில்லான், வில்லினன் எனும் பெயர்களை உருவாக்கலாம். அதே விதிப்படி கண் எனும் சொல்லிலிருந்து கண்ணி எனும் ஆண்பாற் பெயரை உருவாக்க இயலாது. கண்ணி என்பது பெண்பாலுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. மலை எனும் சொல்லிலிருந்து மலையி எனும் சொல்லை உருவாக்கி ஆண்பால், பெண்பால் இரண்டிற்குமே வழங்கிட இயலாது.

ஆறுவகைப் பகுதிகளுடன் விகுதிகள் சேர்ந்து பகுபதப் பெயர்கள் உருவாதலை நன்னூலிலிருந்து அறிகிறோம். ஐந்தாவது வகைப்பெயர்கள் அமையுமிடத்துப் பகுதியாகிய பெயர்கள் மாற்றம்

அடைகின்றன. கொடுமை எனும் பெயர் கொடியன், கருமை என்பது கரியன், நெடுமை என்பது நெடியன், புதுமை என்பது புதியன், பெருமை எனும் பெயர் பெரியன், நன்மை என்பது நல்லன், வெண்மை என்பது வெள்ளன் என மாற்றம் அடைகின்றன.

பகுபதப்பெயர் விகுதிகள்: அன், அவன், ஆன், ஓன்-ஆண்பால் ஒருமை.

அள், ஆள், அவள், இ-பெண்பால் ஒருமை.

அர், ஆர், அவர் - ஆண், பெண் இருபால்களுக்கும் பன்மை.

அது, து-அஃறிணை ஒருமை.

அவை, அன, அ-அஃறிணைப் பன்மை.

அம் ஈற்றுப் பெயர்களின் மகரம் ன் அல்லது ள் அல்லது இ என மாற்றமடைந்து பகுபதப்பெயர்கள் உருவாகின்றன.

எ-டு. தருமன், தருமள், தருமி (தருமம்), காமன், காமள், காமி (காமம்)

ஆனால் ஆங்காரம் எனும் பெயரிலிருந்து உருவாக்கப்படுகிற ஆங்காரி என்பது ஆண், பெண் இரு பாலுக்கும் உரியது.

அறம் என்பது அறன் என்றும் மனம் என்பது மனன் என்றும் செந்தமிழில் (high dialect) வழங்கப்படுகின்றன. எனவே இவை போன்ற இரு குறில்களைக் கொண்ட மகர ஈற்றுப் பெயர்களுக்கு மேற்கண்ட விதி பொருந்தாது.

வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணத்தில் பகுபதப் பெயர்கள் எனும் தனிப்பிரிவை அமைத்து இவ்வாறு விரிவாக விளக்குகிறார்.

பகுபதப்பெயர்களே வினைக்குறிப்புச் சொற்கள் என்பது வீரமாமுனிவரின் கொள்கையாகும்.

ஓதுவான், காப்பான் போன்ற சொற்கள் ஒலிப்பு வேறுபாட்டினால் பெயர்ச்சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் வேறுபடும் என்று *நன்னூல்* குறிப்பிடுகிறது என வீரமாமுனிவர் கூறுகிறார். இச்செய்தியை விவரிக்கிற நூற்பா யாதும் *நன்னூலில்* காணப்படவில்லை. இத்தகைய கருத்து *நன்னூல்* மயிலைநாதருரை முதலிய இலக்கண உரைகளில் இடம்பெற்றுள்ளது.

கொடுந்தமிழ் இலக்கணம் பன்மைப்பெயர்களின் அமைப்பை விரிவாக விளக்குகிறது.

1. நெடில் ஈற்றுப்பெயர்கள் பன்மையில் -க்கள் விகுதியைப் பெறும்.

   எ-டு. கனாக்கள், கிடாக்கள், ஈக்கள், பூக்கள்.

2. இ,உ,ஐ ஈற்றுப் பன்மைப் பெயர்கள் கள் விகுதியைப் பெறும்.

   எ-டு. விழிகள், மணிகள், விருந்துகள், எருதுகள், மாடுகள், மலைகள், ஆலைகள்.

3. உயர்திணைப் பன்மைப் பெயர்கள் மார், கள் விகுதிகளைப் பெறும்.

   எ-டு. சுவாமிகள், சுவாமிமார், செட்டிகள், செட்டிமார், தம்பிகள், தம்பிமார், தமக்கைகள், தமக்கைமார்.

   உகர ஈற்றுப் பெயர்கள் -க்கள் விகுதி பெறும்.

   எ-டு. குருக்கள், சத்துருக்கள், சம்மனசுக்கள், பெண்டுக்கள், தெருக்கள்.

4. மெய்யீற்றுப் பெயர்கள் கள் விகுதி பெறும்.

   எ-டு. கண்கள், முகங்கள், வாய்கள், மயிர்கள், மயில்கள், புகழ்கள், தூள்கள், பலன்கள்.

   னகர ஈற்றுச் சொற்களுள் மகன் மட்டும் விதி விலக்கு. இதற்கான பன்மைப் பெயர் செந்தமிழில் மகர் (sons, daughters) எனவும் கொடுந்தமிழில் மக்கள் எனவும் வழங்கப்படுகிறது.

5. ளகர ஈற்றுப்பெயர்கள் -க்கள் விகுதியைப் பெறும்.

   எ-டு. ஆள்க்கள், நாள்க்கள், வாள்க்கள்.

இவ்வாறு விவரிக்கிற வீரமாமுனிவர், 'தமிழர்கள் அஃறிணையில் ஒருமைப்பெயர்களே பன்மையிலும் வரும் என்று வெளிப்படையாகக் கற்பிக்கின்றனர்' என்பதனையும் கூறுகிறார்.

எ-டு. பத்துக் குதிரை, மரமெல்லாம், பலகறி.

ஆள்கள், நாள்கள், வாள்கள் எனும் சொற்களையே முனிவர் பேச்சுமொழியின் ஒலிப்பை ஏற்று ஆள்க்கள், நாள்க்கள், வாள்க்கள் என வழங்கப்படுவதாகக் கூறுகின்றார்.

காறன் எனும் விகுதி பெயரில் அமைதலைக் கொடுந்தமிழ் இலக்கணம் தொடரியலில் குறிப்பிடுகிறது.

எ-டு. சீட்டுக்காறன், தோட்டக்காறன், கோபக்காறன்

பகாப்பதப்பெயர்களை இயல்புப் பெயர்கள் என்றும் பகுபதப் பெயர்களை ஆக்கப் பெயர்கள் என்றும் குறிப்பிடலாம்.

வீரமாமுனிவர் குறிப்பிடுகிற மகர் எனும் சொல் இலக்கியங்களில் பயின்று வரவில்லை.

பெயர் வகைகள்

வீரமாமுனிவர் பெயர்ச்சொற்களை அவை வழங்குகிற முறை, தொடரில் அவற்றின் பயன்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்தி விவரிக்கிறார். *தொன்னூல் விளக்க* உரையில் இவ்வகைப்பாடு இடம்பெற்றுளது.

> தொழிலின் காரணமாக வரும் பெயர் காலங்காட்டுவதன்றியே, அல்லனவெல்லாங் காலங் காட்டாமல் வருமெனக் கொள்க. அன்றியு மரபுப்பெயரும், காரணப் பெயரும், ஆகுபெயரும், இடுகுறிப்பெயரும் என நால்வகைப்படும் பெயரெல்லாமெனக் கண்டுணர்க. இவையே பொருட் பெயரும், வினையாலணையும் பெயரும், தொழிற்பெயரும், பண்புப் பெயரும் என இந்நால்வகையுள்ளடங்கும். (உ-ம்) பொன்னன்-பொருட்பெயர், உண்டவன்-வினையாலணையும் பெயர், நடத்தல்-தொழிற்பெயர், சண்டை, கூத்து, வேட்டை-முதனிலையில்லாத தொழிற்பெயர்கள் கருமை-பண்புப்பெயர்.

இவ்வாறு முனிவர் உரையின்வழிப் (53) பெயரின் வகைகளைச் சுட்டுகிறார்.

எல்லாப் பெயர்களையும் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் எனும் ஆறுவகையுள் அடக்குதலும் **தொன்னூல் விளக்கத்தில்** (47) காணப்படுகிறது.

> **...பொருளிடங் காலஞ்**
> **சினைகுணந் தொழிலாறுஞ் சேர்ந்த பெயருமாம்**

அறுவகைப்பெயர் எனும் வகைப்பாடு **நன்னூல், இலக்கண விளக்கம்** முதலிய முந்தைய தமிழ் இலக்கண நூல்களின் கொள்கையைத் தழுவியதாகும்.

தொன்னூல் விளக்கத்தில் பெயர்ச்சொல்லின் வரை விலக்கணத்தைக் கூறுமிடத்து இடம்பெற்றுள்ள வகைப் பாட்டுமுறை தமிழ் மரபிலக்கண நூல்களைத் தழுவியது. ஆனால் முனிவர் அந்நூலில் தலைப்புக்களை அமைத்து விளக்குமிடத்து வேறுமுறை காணப்படுகிறது. பகுபதப்பெயர், தொகைப்பெயர், சுட்டு வினாப்பெயர்கள் ஆகிய

வகைகள் விளக்கப்பெறுகின்றன. மூவிடப்பெயர்கள் சொற்பொது வியலில் குறிக்கப்பெற்றுள்ளன.

தொகைநிலை வகைப்படின் றொகும்வேற் றுமைவினை
யுவமைபண் பும்மையோ டன்மொழி யாறே

(தொன்னூல் விளக்கம், 89)

எனக் கூறும் முனிவர் பொற்குடம், வாழ்குடி, பொன்மேனி, ஆனித்திங்கள், பூங்குழல் முதலிய சான்றுகளைக் காட்டுகிறார். இவற்றைப் பிற நூல்கள் ஒரு சொல் நீர்மைய என்று கருதினாலும் பெயர்கள் எனக் கூறவில்லை. ஆனால் வீரமாமுனிவர் தொகைநிலைத் தொடர்மொழிப் பெயர் எனக் கூறுகிறார்.

செந்தமிழ் இலக்கணத்திலும் கிலாவிஸிலும் தொன்னூல் விளக்கச் செய்திகள் குறிப்புக்களாக இடம் பெற்றுள்ளன. எனினும் **செந்தமிழ் இலக்கணத்தில்** பகுபதப் பெயர், மாற்றுப்பெயர் எனும் வகைகளே தலைப்புக்களில் விவரிக்கப்பெற்றுள்ளன. மூவிடப் பெயர்களும் சுட்டுப் பெயர்கள், வினாப்பெயர்களும் மாற்றுப்பெயர்களின் வகைகளாக இடம்பெற்றுள்ளன.

கொடுந்தமிழ் இலக்கணம் இயல்புப்பெயர்கள், மாற்றுப் பெயர்கள் ஆகிய வகைகளை விவரிக்கிறது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறுவகைப் பெயர்களுடன் பால் விகுதிகள் சேர்ந்து பகுபதப் பெயர்கள் (appellative nouns) அமைகின்றன என்பது எழுத்துத் தமிழ் இலக்கணத்தை விவரிக்கிற மூன்று நூல்களின் கருத்து.

பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின் வருபகுபதமே

எனும் நன்னூல் (132) நூற்பாவை மேற்கோள் காட்டி முனிவர், இப்பகுபதப்பெயர்களைச் **செந்தமிழ் இலக்கணத்தில்** விளக்குகிறார்.

பகுதிகளுடன் பல்வேறு விகுதிகள் சேர்ந்து உருவாக்கப்பெறுகிற ஆக்கப் பெயர்களையே வீரமாமுனிவர் பகுபதப் பெயர்கள் என்று கூறுகிறார்.

இந்நூலில் மூவிடப்பெயர்கள், சுட்டுப்பெயர்கள், வினாப்பெயர்கள், தொழிற்பெயர்கள், வினையாலணையும் பெயர்கள், சிலபெயர்கள் எனப் பெயர்ச்சொற்கள் பகுத்து விளக்கப்படுகின்றன.

மூவிடப் பெயர்கள்

மொழிகளில் பெயர்ச்சொல்லின் வகைகளுள் மூவிடப்பெயர்கள், சுட்டுப்பெயர்கள், வினாப்பெயர்கள் ஆகிய மாற்றுப்பெயர்கள் (Pronouns)

பெருவழக்கின. எனவே, வீரமாமுனிவர் இவற்றை நான்கு நூல்களிலும் சிறப்பாக விவரிக்கிறார். மேலும், மேலைநாட்டு இலக்கணங்களில் மாற்றுப்பெயர்கள் தனியொரு சொல் வகையாகக் (parts of speech) கருதப்படுகின்றன.

தொன்னூல் விளக்கத்தில் (51) நான், யான் எனும் தன்மை ஒருமைப் பெயர்கள் ; நாம், யாம் எனும் தன்மைப் பன்மைப் பெயர்கள்; நீ எனும் முன்னிலை ஒருமைப்பெயர்; நீர், நீயிர், நீவிர், எல்லீர் எனும் முன்னிலைப் பன்மைப் பெயர்கள்; தான், அவன், அவள் எனும் படர்க்கை ஒருமைப்பெயர்கள்; தாம், அவர்கள் எனும் படர்க்கைப் பன்மைப் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன. எல்லாம் என்பது மூவிடங்களுக்கும் பொதுவான பெயர் என்பதும் கூறப்பெற்றுள்ளது.

மூவிடப்பெயர்கள் வேற்றுமை ஏற்குமிடத்துப் பின்வருமாறு திரியும் (**தொன்னூல் விளக்கம்** , 68).

யான் - என். யாம் - எம். நாம் - நம் - தன்மை

நீ - நின். நீர் - நும் - முன்னிலை

தான் - தன் தாம்- தம் - படர்க்கை.

தான், தாம் இரண்டையும் படர்க்கைப் பெயர்கள் என்று நூற்பாவில் கூறுகிற முனிவர் இவற்றை உரையில் காட்டவில்லை. அவற்றுக்குப் பதிலியாக அவன், அவள், அவர்கள் எனும் பெயர்களைப் படர்க்கைக்கு எடுத்துக் காட்டுகிறார். அவன், அவள், அவர், அவர்கள் என்பன நூற்பாவில் இடம்பெறவில்லை. இப்பெயர்கள் சுட்டுப் பெயர்களாகவும் கூறப்பெற்றுள்ளன.

எல்லாம், எல்லீரும், எல்லாரும் என்பன உளப்படுத்தும் முழுமைப் பெயர்கள் ஆகும். எல்லீரும் எனும் பெயர் எல்லீர் என்று கூறப்பெற்றுள்ளது. **நன்னூலில்** (246, 287) எல்லீர், எல்லீரும் இரண்டும் காணப்படுகின்றன. இவற்றில் உம் விகுதியே முற்றும்மையாகி உளப்படுத்துகிறது என்பது குறிக்கத்தக்கது.

வீரமாமுனிவர் மாற்றுப்பெயர்களை வகைப்படுத்துதலில் இருவேறு மொழிமரபுகளைப் பின்பற்றுகிறார். **தொன்னூல் விளக்கத்தில்** மூவிடப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள், வினாப்பெயர்கள் எனும் வகைப்பாடு தமிழைப் பின்பற்றிக் காணப்படுகிறது. ஆனால் **செந்தமிழ் இலக்கணத்தில்** வேறுநெறி இடம்பெற்றுள்ளது.

செந்தமிழ் இலக்கணத்தில் (பக்கம் 63-70) வீரமாமுனிவர்,

> மாற்றுப்பெயர்கள் இலத்தீன் இலக்கணத்தில் முதன்மை மாற்றுப்பெயர்கள் (primitives), ஆக்க மாற்றுப்பெயர்கள் (derivitives), சுட்டுப் பெயர்கள் (demonstratives), உரிமை மாற்றுப் பெயர்கள் (relatives), உடைமை மாற்றுப் பெயர்கள் (possessives) என வகைப்படுத்தப் பெற்றுள்ளன. நான் அந்த முறைக்கேற்ப விவரிக்கிறேன். நான், யான், நீ, நாம், யாம், நாங்கள், யாங்கள், நீர், நீயிர், நீவிர், நீங்கள், எல்லீர் என்பன செந்தமிழில் முதன்மை மாற்றுப்பெயர்கள் ஆகும். இப்பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது பின்வருமாறு மாற்றம் பெறும்.

என்று குறிப்பிடுகிறார்.

நான், யான் - என்	யாம் - எம், நாம் - நம்	தன்மை
யாங்கள் - எங்கள்	நாங்கள் - நங்கள்	
நீ - உன், நின், நுன்	நீர், நீவிர் - நும், உம்	முன்னிலை
நீங்கள் - உங்கள்	எல்லீர்	

தான் - தன், தாம் - தம் - படர்க்கை

வேற்றுமை உருபேற்கிற பன்மை முதன்மை மாற்றுப் பெயர்கள் நம், எம், உம், நும், தம் ஆகியவற்றிலிருந்து நமன், எமன், நமள், எமள், நமர், எமர், உமன், உமள், உமர், நுமன், நுமள், நுமர், தமன், தமள், தமர், எனும் ஆக்க மாற்றுப்பெயர்கள் உருவாக்கப்படுதலைச் செந்தமிழ் இலக்கணம் குறிப்பிடுகிறது.

தொன்னூல் விளக்கம் (79) பலர்பால் பெயர்களாகத் தமர், நமர், நுமர், எமர் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறது. எனினும் இவற்றை ஆக்க மாற்றுப்பெயர்கள் என்று குறிப்பிடவில்லை.

தமிழில் உரிமை மாற்றுப்பெயர் இல்லை. இதில் காணப்படுகிற எவன், யாவன், எவர், யாவர், ஆர், எது, யாது ஆகியன இவன், இவள், இவர், இது, இவை எனும் பெயர்களைப் போன்று பால் விகுதிகள் இணைக்கப் பெற்றவை ஆகும். தமிழர் மொழியில் உடைமை மாற்றுப்பெயர்கள் இல்லை. எனது, நமது முதலியன ஆறாம் வேற்றுமை உருபு இணைக்கப்பெற்றவை ஆகும். இவ்வாறு **செந்தமிழ் இலக்கணத்தில்** காணப்படுகிறது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் நாம், நாங்கள் எனும் சொற்களுக்கிடையே பொருள் வேறுபாடு இருத்தல் கூறப்பட்டுள்ளது. நாம் எனும் சொல் மரியாதை ஒருமையில் மட்டுமன்றி, பன்மையாகவும்

வருகிறது. நாங்கள் என்பது பேசுகிறவரையும் அவர் பேச்சு நிகழும் சூழலுக்கு ஏற்ப உட்படுத்திட விரும்புகிறவரையும் சேர்த்துக் கொள்கிறது. ஆனால் நாம் எனும் சொல் கேட்பாரையும் பேசுகிறவரையும் அடக்கிக் கொள்கிறது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் நாம் என்பதற்கும் நாங்கள் என்பதற்கும் இடையே காணப்படுகிற பொருள் வேறுபாடு **செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், கிலாவிஸில்** காணப்படவில்லை. செந்தமிழ் இலக்கணத்தில் நாங்கள், நீங்கள், அவர்கள் எனும் சொற்களே மிகவும் பயின்று வருகின்றன என்று முனிவர் கூறுகிறார். மேலும், நீர், அவர் என்பன மரியாதை ஒருமையில் வருதலையும் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தில் நான், நாங்கள், யாங்கள், நீர், நீவிர், நீங்கள், உன், நுன், எங்கள், நங்கள் ஆகிய பெயர்கள் கூறப்பெறவில்லை. நன்னூல் நாங்கள், யாங்கள், நீங்கள், உன், நுன், எங்கள், நங்கள் ஆகியவற்றைச் சுட்டவில்லை. **இலக்கண விளக்கம்** நாங்கள், யாங்கள், நீங்கள், நுன், எங்கள், நங்கள் ஆகிய பெயர்களை இலக்கணத்தில் சேர்க்கவில்லை. எனினும் **நன்னூலுக்கு** முந்தைய நூலான **வீரசோழியத்தில்** (37) இவற்றோடு நீர்கள், நீயிர்கள், நீவிர்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன. **வீரசோழிய** உரையாசிரியர் (79) நாம் எனும் தன்மைப்பெயர் முன்னிலையில் சிறப்புப் பெயராக (மரியாதை ஒருமையாக) வருதலையும் கூறுகிறார்.

வீரசோழியம் சிறப்பு எனும் வகையையும் ஒருமையில் குறிப்பிடுகிறது.

ஒருவன் ஒருத்தி ஒன்றாம் சிறப்போடு பல்லோர் பலவை (30)

ஒருவன் ஒருத்தி பலர்ஒன்றொடு பலவும் சிறப்பின (31)

இக்காலத்தும் 'இது நம்ம வீடா?' என்பது போன்ற வழக்குகள் பேச்சுத்தமிழில் காணப்படுகின்றன.

செந்தமிழ் இலக்கணத்தில் கூறப்பெற்றுள்ள மூவிடப் பெயர்களுள் நான் (பரிபாடல்), உம், உன் (அகநானூறு) ஆகியன சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. நுன் என்பது **சீவகசிந்தாமணியில்** இடம்பெற்றுள்ளது. இப்பெயர்கள் யாவும் இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை ஏற்று முனிவர் இலக்கணம் கூறியுள்ளார்.

நீ எனும் பெயரின் வேற்றுமை வடிவமாக நுன் என்பதனைத் **தொன்னூல் விளக்கம்** கூறவில்லை. ஆனால் ஆறாம் வேற்றுமைப் பன்மை உருபுக்கு எடுத்துக்காட்டுகிற **சீவகசிந்தாமணிப்** பாடல் 'நுன

சீறடி நோவ' என்பதில் நுன் எனும் பெயர் காணப்படுகிறது. இச்சான்று **செந்தமிழ் இலக்கணத்திலும்** இடம்பெற்றுளது.

நுனசீ றடிநோ வநடந் துசெலே
லெனதா வியகத் துறைவா யெனுநீ
புனைதா ரவனே பொய்யுரைத் தனையால்
வினையே னொழியத் தனியே கினையே

(சிந்தாமணி, கேமசரியாரிலம்பகம்)

யாம் எனும் பன்மைப்பெயரின் ஒருமைப்பெயர் யான். இதன் ஒப்புமையாக்கமாக நாம் எனும் பெயருக்கு ஒருமைப் பெயர் நான் தோன்றியுள்ளது. நீயிர் என்பதன் சுருக்க வடிவமே நீர் எனும் பெயர். நீம் என்பதே பழைய வடிவம். இதனுடன் முன்னிலைப் பன்மை விகுதி ஈர் சேர்ந்து நீமிர் என்றானது. இச்சொல் பின்னாளில் நீவிர், நீயிர், நீர் என்று ஒலி மாற்றம் பெறலாயிற்று. நீமிர் எனும் பெயர் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டச் சிற்றூர்களில் சில சமூகத்தவரின் பேச்சு வழக்கில் காணப்படுகிறது.

யாங்கள், நாங்கள், நீங்கள் மூன்றும் இரட்டைப் பன்மை விகுதியைப் (ம்கள்) பெற்றவை. யாம், நாம், நீவிர், நீர், அவர் முதலிய பெயர்கள் மரியாதை ஒருமையில் வழங்கிய நிலையில், பன்மையை உணர்த்திடக் 'கள்' விகுதி சேர்ந்த இப்பெயர்கள் உருவாகியுள்ளன.

நுன், நும் எனும் பெயர்கள் நகர மெய் இழப்புற்று, உன், உம் என்று ஆகியுள்ளன. **தொல்காப்பியத்தில்** மொழி முதற் குற்றியலுகரத்திற்குக் குறிக்கப்பெற்றுள்ள நுந்தை எனும் சொல்லிலேயே நகர இழப்பைக் (உந்தை) காணமுடிகிறது. இவ்வொலி மாற்றம் **தொல்காப்பியக்காலத்தே** அருகிய வழக்காக இருந்தது.

நாங்கள் எனும் பெயரின் வேற்றுமை வடிவமாக எங்கள் என்பதே பெருவழக்கில் உள்ளது. இப்பெயர் யாங்கள் என்பதன் வேற்றுமை வடிவம். நங்கள் என்பது பக்தி இலக்கியங்களில் காணப்படுகிறது.

எ-டு. அடிப்போது நங்கட் கரண் (**திவ்வியப் பிரபந்தம்**, 2358)

யாங்கள் - எங்கள் என்பதன் ஒப்புமையாக்கமாக நாங்கள் என்பதன் வேற்றுமை வடிவம் நங்கள் தோன்றியுள்ளது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் மூவிடப்பெயர்கள் வருமாறு:

ஒருமை	மரியாதை ஒருமை	பன்மை
நான், என்	நாம், நம்	நாங்கள், எங்கள்

நீய், உன்	நீர், உம்	நீங்கள், உங்கள்
தான், தன்	தாம், தம்	தாங்கள், தங்கள்
இவன், இவள்	இவர்	இவர்கள்
அவன், அவள்	அவர்	அவர்கள்
இது, அது	அது, இது	இதுகள், அதுகள்

இவன், அவன், அது, இதுகள் முதலியன சுட்டுப்பெயர்கள் ஆகும். தான், தாம் எனும் படர்க்கைப்பெயர்கள் தற்சுட்டுப் பொருளிலும் அழுத்தப் பொருளிலும் வழங்கிய நிலையில் இச்சுட்டுப்பெயர்கள் படர்க்கையில் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

மாற்றுப்பெயர்கள் அல்லது வினைமுற்றுக்கள் மரியாதை ஒருமையில் வழங்கும் என்று கூறும் முனிவர் நீர், அவர், என்றார், சொன்னார் ஆகிய சொற்களை எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறு வருதலை **வீரசோழியமும்** சிறப்பு என்று கூறுகிறது. இந்த வழக்கு சங்க இலக்கியத்தும் காணப்படுகிறது.

நாம் எனும் பெயர் முன்னிலையில் மரியாதை ஒருமையில் வருதலையும் **கொடுந்தமிழ் இலக்கணம்** குறிப்பிடுகிறது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் நாங் கட்டளை யிட்டோம், நாங்கள் கிறிஸ்தவர்கள் என்பன போன்ற சான்றுகளையும் முனிவர் காட்டுகிறார். இங்கு 'நாம்' என்பது 'நாங்' என்று எழுதப்பெற்றுள்ளது. பேச்சுவழக்கில் மகர வீறு நலிவடைந்து, அதற்கு முன்னுள்ள உயிர் மூக்கின உயிராக (nasalised vowel) மாறுதல் தமிழில் உண்டு. இம்மூக்கின உயிரை 'ங்' என்று முனிவர் குறிப்பிட்டுள்ளார்.

நீ எனும் முன்னிலைப் பெயர் நீய், நீயி, நிய்யி என்று மதுரை மாவட்டப் பகுதி வழக்குகளில் பேசப்படுகிறது. அவ்வழக்கினை ஏற்று முனிவர் இங்கு விவரித்துள்ளார்.

சுட்டுப் பெயர்கள்

தொன்னூல் விளக்கம் சுட்டு, வினாப்பெயர்களுக்காகத் தனிப்பிரிவை உருவாக்கி விவரிக்கிறது. அ, இ, உ எனும் மூன்று சுட்டுக்களையும் முதனிலைகளாகக் கொண்டு ஐம்பால் விகுதிகளை இணைத்துச் சுட்டுப் பெயர்கள் அமைகின்றன (**தொன்னூல் விளக்கம்,** 101).

அவன், இவன், உவன், அவள், இவள், உவள்

அவர், இவர், உவர்

அது, இது, உது, அஃது, இஃது, உஃது

அவை, இவை, உவை, அவ், இவ், உவ்

இவன், இவள், இது அல்லது இதன், இவர், இவை, அவன், அவள், அது அல்லது அதன் அவர், அவை, உவன், உவள், உது, உவர், உவை ஆகியன சுட்டுப்பெயர்கள் ஆகும்; இவற்றுள் இவன் என்பது அண்மையில் உள்ளவனையும், அவன் என்பது சேய்மையில் உள்ளவனையும் உவன் எனும் பெயர் இடையில் உள்ளவனையும் உணர்த்தும் பெயர்கள் என்பது **செந்தமிழ் இலக்கணத்தில்** முனிவரது கூற்று. மேலும், தான் himself, herself, itself எனும் சொல்லைச் சுட்டுப்பெயர் என்று கூறி, இதன் பன்மைப் பெயர் தாம் அல்லது தாங்கள் என்றும் இவை தன், தம், தங்கள் என்று வேற்றுமையில் ஆகும் என்றும் விவரிக்கிறார்.

தான் , தாம் என்பவற்றைத் தற்சுட்டுப் பெயர்கள் (reflexive pronouns) என்று கூறுவர். இவை சுட்டுப்பெயர்கள் (demonstrative pronouns) அல்ல.

தான், தாம் எனும் படர்க்கைப் பெயர்கள் தற்சுட்டுப் பொருளில் (himself, herself, itself, themselves) வருதலை உட்கொண்டு, இந்நூல் இவற்றையும் சுட்டுப்பெயர்களோடு சேர்த்துக் கூறுகிறது (பெ.சுயம்பு, **செந்தமிழ் இலக்கணம்,** மொழியியல்,1989 ப.174).

அதன், இதன் என்பன அது, இது எனும் பெயர்களுடன் அன் சாரியை சேர்ந்த வேற்றுமை வடிவங்களாகும். இவை எழுவாயில் வருகிற தனிவடிவங்கள் அல்ல.

கொடுந்தமிழ் இலக்கணம் இவன், இவர்கள், அவன், அவர்கள், இது, இதுகள், அது, அதுகள் ஆகிய சுட்டுப் பெயர்களைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் அது, இது என்பன பெண்பாலைக் குறித்து வழங்குதலையும் முனிவர் குறிப்பிடுகிறார்.

இதுகள், அதுகள் என்பன கள் எனும் பன்மை விகுதியுடன் இணைந்து பன்மையில் வழங்குகின்றன. இவை, அவை, இவ், அவ் ஆகிய அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர்கள் வழக்கிறந்த நிலையில் அவர்கள், இவர்கள் எனும் உயர்திணைப் பெயர்களின் ஒப்புமையாக்கத்தினால் இதுகள், அதுகள் ஆகிய பெயர்கள் உருவாகியுள்ளன. அது எனும் சுட்டுப்பெயர் மரியாதை ஒருமையில் வழங்குதலையும் அவாள், இவாள் எனும் பெயர்கள் பிராமணர் பேச்சு வழக்கில் இடம்பெற்றிருத்தலையும் முனிவர் குறிப்பிடுகிறார்.

அவாள், இவாள் என்பன அவர்கள், இவர்கள் எனும் சொற்களின் ஒலிமாற்ற வடிவங்கள் ஆகும்.

வினாப் பெயர்கள்

எ, யா ஆகிய முதனிலைகளுடன் பால் விகுதிகள் சேர்ந்து எவன், எவள், எவர், யாவன், யாவள், யாவர், எது, எவை, யாது, யாவை எனும் வினாப்பெயர்கள் உருவாதலைத் **தொன்னூல் விளக்கம்** (102) கூறுகிறது.

எயா முதலும் ஆஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே
யெவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

தொன்னூல் விளக்கப் பெயர்களுடன் யார், ஆர், ஆகிய வினாப் பெயர்களையும் சேர்த்துச் **செந்தமிழ் இலக்கணம்** (ப.66) குறிப்பிடுகிறது.

யார் எனும் சொல்லின் மொழிமுதல் யகரம் கெட்டு ஆர் எனும் பெயர் அமைந்துள்ளது. மொழிமுதல் யகர இழப்பு தமிழில் தொன்று தொட்டுக் காணப்படுகிற ஓர் இயல்பு ஆகும்.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் எவன், எவள், எது எனும் வினாப்பெயர்கள் காணப்படுகின்றன.

தொழிற்பெயர்கள்

வீரமாமுனிவர் **தொன்னூல் விளக்கத்தில்** (53, 103, 105) தொழிற்பெயர்களைப் பெயரியலிலும் வினையியலிலும் குறிப்பிடுகிறார்.

தொழிற்பெயர்களும் வினையாலணையும் பெயர்களும் வினையடியிலிருந்து அமைதலால் முனிவர் இவற்றையும் வினைச்சொற்களுடன் விவரிக்கிறார். இவ்விருவகைப் பெயர்களையும் வினைச்சொற்களின் வகைகளாகக் கூறுதல் **இலக்கணக்கொத்திலும்** (67, 69) காணப்படுகிறது.

தொழிற்பெயர்களின் அமைப்பினை முனிவர் **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** விவரிக்கிறார். நிகழ்கால ஒன்றன்பால் வினைமுற்றின் விகுதி 'க்கிறது' என்பது த்தல், ப்பு விகுதிகளாகத் திரிந்து, படித்தல், படிப்பு முதலிய தொழிற்பெயர்கள் உருவாகின்றன. 'கிறது' எனும் விகுதி 'தல்' விகுதியாகத் திரிந்து ஆதல், செய்தல் முதலிய தொழிற் பெயர்கள் உருவாகின்றன. 'இருக்க' என்பது போன்ற வினையெச்சங்களுடன் லகர ஒற்று இணைந்து இருக்கல் என்பது போன்ற தொழிற்

பெயர்கள் உருவாகின்றன. இவ்வாறு வினைமுற்றுகளிலிருந்தும், வினையெச்சங்களிலிருந்தும் தொழிற்பெயர்கள் உருவாகின்றன என்பது வீரமாமுனிவர் கொள்கையாகும்.

வீரமாமுனிவர் **தொன்னூல் விளக்கத்தில்** (53) தொழிற் பெயர்களை இரு வகைப்படுத்துகிறார்.

தொழிற்பெயர் - நடத்தல்.

முதனிலை இல்லாத தொழிற்பெயர் - சண்டை, கூத்து, வேட்டை.

முதலாவது பிரிவை விகுதி பெற்ற தொழிற்பெயர் என்பது வழக்கம். இதில் முதனிலையும் (பகுதியும்) விகுதியும் வெளிப்படையாகத் தனித்தனியே காணப்படுகின்றன. இரண்டாவது பிரிவில் அவை தனித்தனியே காணப்படவில்லை. எனவே அவற்றை முதனிலை இல்லாத தொழிற்பெயர்கள் என்று குறிப்பிடுகிறார். உண்மையில் அவற்றிலும் பகுதி, விகுதிகள் உள்ளன. சண்டை என்பதில் சண்ணு (சண்), கூத்து எனும் சொல்லில் குதி, வேட்டை என்பதில் வேள் என்பன முதனிலைகள் ஆகும். குதி எனும் முதனிலை கூத்து என்று திரிந்துள்ளது. ஏனைய இரண்டு சொற்களிலும் 'தை' விகுதி காணப்படுகிறது. இது புணர்ச்சியில் 'டை' என்று ஓரினமாகியுள்ளது. முதனிலையும் விகுதியும் புணர்ச்சிக் காரணமாக ஒருங்கிணைந் துள்ளமையால், இவற்றில் முதனிலையும் விகுதியும் இல்லை என்று இலக்கணிகள் கருதுகின்றனர். வைத்தியநாத தேசிகரின் கருத்து இங்கு முனிவருக்குப் பயன்பட்டுள்ளது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் தொழிற்பெயர்களின் அமைப்புப்பற்றி முனிவர் குறிப்பிடுகிறார்.

1. வினைமுற்றின் இறுதி -கிறது என்பது கை என்று ஆதல்.

   எ-டு. செய்கை (செய்கிறது) இருக்கை (இருக்கிறது). ஆகை ஆகிறது

2. வினையெச்சத்துடன் ல் சேர்ந்து தொழிற்பெயர் ஆதல்.

   எ-டு. இருக்கல், செய்யல், வரல்

3. வினைமுற்றின் இறுதி க்கிறது என்பது த்தல் என்று ஆதல்.

   எ-டு. படித்தல் (படிக்கிறது)

4. வினைமுற்றின் இறுதி ப்பு என்று ஆதல்.

   எ-டு. இருப்பு (இருக்கிறது) படிப்பு (படிக்கிறது)

செயல் வேண்டும், வருதல் நன்று என்பன போன்று தொழிற்பெயர்கள் செய வாய்பாட்டு வினையெச்சமாகப்

பயன்படுத்தப்படுதலையும் முனிவர் **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** குறிப்பிடுகிறார்.

வினையாலணையும் பெயர்கள்

வீரமாமுனிவர் **தொன்னூல் விளக்கத்தில்** வினையாலணையும் பெயர்கள் காலம் காட்டுதலையும் வினைவிகுதிகள் யாவற்றையும் பெற்று அமைதலையும் விவரிக்கிறார்.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் தொடரியலில் வேறொரு அமைப்பு முறையை விவரிக்கிறார். அகர ஈற்று நிகழ்காலம், இறந்தகாலப் பெயரெச்சங்களுடனும் அகர ஈற்று எதிர்மறைப் பெயரெச்சங்களுடனும் அவன், அவள் எனும் மாற்றுப் பெயர்கள் சேர்ந்து செய்கிறவன், செய்தவன், செய்யாதவன், செய்கிறவள், செய்தவள் போன்ற வினையாலணையும் பெயர்கள் உருவாகின்றன. இவ்வாறு ஆகும்போது பெயரெச்சத்தின் இறுதியிலுள்ள அகரம் கெட்டு விடும். எதிர்காலச் சொற்கள் எதிர்காலத் தன்மை வினைமுற்றிலிருந்து உருவாக்கப் படுகின்றன. ப்பேன், பேன், ஏன் விகுதிகள் நீக்கப்பெற்று, அவன், அவள் சேர்க்கப்படுகின்றன. இருப்பேன் என்பதிலிருந்து இருப்பவன் எனும் பெயரும் காண்பேன் எனும் சொல்லிலிருந்து காண்பவன் எனும் பெயரும் உருவாக்கப்படுகின்றன. ஆனால் வேன் விகுதியிலுள்ள ணகர எழுத்துப் பகரமாக மாறுகிறது. செய்வேன் என்பதிலிருந்து செய்பவன், செய்பவள் எனும் பெயர்கள் உருவாக்கப்பெறுகின்றன. இவ்வாறு முனிவர் வினையாலணையும் பெயருக்கு விளக்கம் தருகிறார்.

சில பெயர்கள்

கொடுந்தமிழ் இலக்கணம் தொடரியலில் பெயர்கள் எனும் பிரிவில் உறவுமுறைப்பெயர்கள், இளமைப்பெயர்கள், ஆண்மைப் பெயர்கள், பெண்மைப்பெயர்கள், தாவர உறுப்புப்பெயர்கள் முதலிய பெயர்கள் பலவற்றைக் குறிப்பிடுகிறது.

தமிழ்மொழி மனிதர்கள், விலங்குகள், மரங்கள் முதலியவற்றிற்கான இளமைப் (infancy) பெயர்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. மனிதர்களுக்குக் குழந்தை, பிள்ளை ஆகிய பெயர்கள் உள்ளன. இவற்றுள் பிள்ளை என்பது தென்னம்பிள்ளை என மரத்திற்கும் வழங்கப்படுகிறது.

பறவைகள், எலிகள், மீன்கள், பூச்சிகளுக்குக் குஞ்சு எனும் பெயர் வழங்கப்படுகிறது.

எ-டு. புறாக்குஞ்சு, கோழிக்குஞ்சு, எலிக்குஞ்சு, மீன் குஞ்சு.

குட்டி எனும் பெயர் விலங்குகள், பாம்புகள், பெரிய மீன்களுக்கு வழங்கப்படுகிறது.

எ-டு. சிங்கக்குட்டி, குதிரைக்குட்டி, நாய்க்குட்டி, பாம்புக் குட்டி, சுறாக்குட்டி.

பசு, எருமைகளுக்குக் கன்று, கன்றுக்குட்டி இரண்டும் வழங்கப்படுகின்றன.

எ-டு. பசுவின் கன்று, பசுவின் கன்றுக்குட்டி, எருமைக்கன்று, எருமைக்கன்றுக் குட்டி.

குதிரை, கழுதை ஆகியவற்றுக்குக் குட்டி தவிர, மறி எனும் பெயரும் உள்ளது.

எ-டு. குதிரை மறி, கழுதை மறி.

மான், ஒட்டகம், யானைகளுக்குக் குட்டி தவிர, கன்று எனும் பெயரும் உள்ளது.

எ-டு. மான் கன்று, ஒட்டகக்கன்று, யானைக்கன்று.

எல்லாத் தாவரங்களுக்கும் கன்று எனும் பெயர் வழங்கப்படுகிறது.

எ-டு. மாங்கன்று, வேப்பங்கன்று, புளியங்கன்று, முருங்கைக்கன்று.

பறவைகளில் பெண்ணுக்குப் பெட்டை என்றும் ஆணுக்குச் சேவல் என்றும் பெயர்.

எ-டு. சாவற்கோழி, கோழிச் சாவல். பெட்டைக்கோழி, கோழிப்பெட்டை. சாவற்புறா, பெட்டைப் புறா.

மாடுகளில் ஆண் காளைக்கன்று என்றும் பெண் கிடாரிக் கன்று என்றும் சொல்லப்படுகின்றது.

குதிரை, கழுதைகளில் ஆண் குண்டு என்றும் பெண் கோளிகை என்றும் கூறப்படுகின்றது.

எ-டு. குண்டுக் குதிரை, குண்டுக் கழுதை, கோளிகைக் குதிரை, கோளிகைக் கழுதை.

நாய், பூனை, ஓநாய், குரங்குளில் ஆண் 'கடுவன்' என்று கூறப்படுகிறது. ஆண்மான் 'கலை' என்றும் ஆண் செம்மறியாடும் வெள்ளாடும் 'கிடாய்' என்றும் சொல்லப்படுகின்றன.

தாவரங்களின் உறுப்பு 'இலை' என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. எனினும் பனை வகை மரங்களுக்குப் பனையோலை,

கூந்தற் பனையோலை, தென்னோலை என்று ஓலை எனும் சொல்லையே தமிழர்கள் வழங்குகின்றனர்.

ஏடு எனும் பெயர் கமுகேடு, பூவினேடு என்று கூறப்படுகிறது. பயறு வகைச் செடிகளின் இளங்காய்கள் பிஞ்சு அல்லது புனல் என்றும் கூறப்படும்.

உலர்ந்த பழம் அல்லது கனி நெற்று எனப்படுகிறது. பழத்தின் தொகுதி குலை அல்லது தாறு என்று சொல்லப்படுகிறது.

எ-டு. கமுகங்குலை, கமுகந்தாறு; பேரீச்சங்குலை, பேரீச்சந்தாறு; வாழைக்குலை, வாழைத்தாறு.

தகப்பன், அப்பன், பெரியப்பன், சிற்றப்பன், தாய், ஆயி, அம்மாள், பெரியாயி, சின்னாயி, பாட்டன், பாட்டி, அப்பாயி, அம்மாயி, அத்தை, அம்மாள், தாய்மாமன், கூடப்பிறந்தவர்கள், சகோதரர்கள், அண்ணன், தமையன், தம்பி, அக்காள், தமக்கை, ஆச்சி, தங்கச்சி, நாத்தனார், புருஷன், பத்தா, ஆம்புடையான், பெண்சாதி, பெண்டாட்டி, இஸ்த்திரீ, சகலன், ஓய்ப்பிடியார், ஓரகத்தி, சக்களத்தி, மாமன், மாமி, மருமகன், மருமகள், மகன், மகள், பேரன், பேத்தி, பங்காளி, தகப்பனார், தாயார், மாமனார், மாமியார், தமையானார், தமக்கையார் முதலிய உறவுமுறைப் பெயர்களையும் அவற்றுக்கு இணையான பொருளையும் முனிவர் குறிப்பிடுகிறார்.

கொடுந்தமிழ் இலக்கணத்தின் ஐந்தாம் அதிகாரத்தில் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படுகிற எண்ணுப் பெயர்கள், அளவைப் பெயர்கள், உறவு முறைப்பெயர்கள், நாட்பெயர்கள், மாதப்பெயர்கள், ஆண்டுப் பெயர்கள், திசைப்பெயர்கள், திதிப்பெயர்கள் ஆகியன விவரிக்கப்பெற்றுள்ளன.

எண்ணுப்பெயர்கள் தமிழ் எண்களோடு தற்கால வழக்கிலுள்ள எண்களும் தந்து விளக்கப்பெற்றுள்ளன. முந்திரிகை (1/320), அரைக்காணி (1/160), காணி (1/80), அரைமா (1/40), மா அல்லது ஒருமா (1/20), மாகாணி அல்லது வீசம் (1/16), இரண்டுமா அல்லது இருமா (1/10), அரைக்கால் அல்லது இரண்டுமா (1/8), மும்மா அல்லது மூன்றுமா (3/20), நாலுமா (1/5), கால் (1/4), அரை (1/2), முக்கால் (3/4) என்பன பகுதி எண்ணுப்பெயர்களாகும்.

அளவைப் பெயர்களும் அவற்றிற்கான குறியீடுகளும் கொடுந்தமிழ் இலக்கணத்தில் காணப்படுகின்றன.

ஆழாக்கு = 5 சுவடு. உரி = 4 ஆழாக்கு. நாழி = 8 ஆழாக்கு. குறுணி = 8 நாழி. பதக்கு = 2 குறுணி. கலம் = 12 குறுணி.

வேற்றுமைகள்

வேற்றுமைகள் மொழியில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. இவற்றின் இன்றியமையாமை கருதி, வீரமாமுனிவர் 'வேற்றுமையியல்' என்று உட்பிரிவு அமைத்ததோடு, வேற்றுமைகளைப் பெயர் ஓத்தின் தொடக்கத்திலேயே பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம், வகைகளைக் கூறியவுடன் மூன்றாம் நூற்பாவிலிருந்து விளக்கியுள்ளார்.

> வேற்றுமைப் படுத்தலின் வேற்றுமை யாமிவை
> பெயர்ஐ ஆல்குஇன் அதுகண்விளி யெட்டே.

என்று வேற்றுமையின் வரைவிலக்கணமும் அதன் வகைகளும் **தொன்னூல் விளக்கத்தில்** (55) கூறப்படுகின்றன.

> பெயர்க்குரிய வேற்றுமையா மாறுணர்த்துதும். எவ்வகைப் பொருளும் வேறுபட அதன் பெயரீறாக வரும் உருபெல்லாம் வேற்றுமை எனப்படும். இவற்றை வடநூலார் பிரத்தியமென்பர். அவையே பெயர் முதற் சூத்திரத்திற் காட்டிய எட்டெனக் கொள்க. எ-று.

என்பது முனிவர் வேற்றுமைக்குத் தருகிற விளக்கம்.

எழுவாய் முதல் விளி ஈறாக உள்ள எட்டு வேற்றுமைகளும் ஒவ்வொரு நூற்பாவில் விவரிக்கப்படுகின்றன.

செந்தமிழ் இலக்கணத்தில் தமிழ் மரபைப் பின்பற்றி உருபு, பொருளுடன் எட்டு வேற்றுமைகளையும் **நன்னூல்** நூற்பாக்களோடு முனிவர் சுருக்கமாக விவரிக்கிறார்.

> பவணந்தி தம் நன்னூலில் வேற்றுமைகளைக் கீழ்க் காணும் வரிசைப்படி விவரிக்கிறார்.
>
> *பெயரே-ஐ-ஆல்*
> *கு-ன்-அது-கண்*
> *விளி-யென்றாகும்*
> *அவற்றின் பெயர்முறை*
>
> (சொல்லதி. பெயரியல் உரு, சூத்.)
>
> இவ்வரிசை ஐரோப்பிய மொழிகளிலிருந்து வேறுபடுகிறது. தமிழ் இலக்கண ஆசிரியர்கள் வேற்றுமைகளை முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என எண்களால் வேறுபடுத்துகின்றனர். இந்த வரிசையைப் புரிந்துகொள்ளாவிடில், வேற்றுமைகளையும்

> புரிந்துகொள்ளவியலாது. எனவே தமிழ் வரிசையைப் பின்பற்றுவதே சிறந்தது.''

இவ்வாறு செந்தமிழ் இலக்கணத்தில் முனிவர் விவரிக்கிறார்.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் வேற்றுமைகளின் வரிசை ஐரோப்பிய முறையில் வேற்றுமைப்பொருள் அடிப்படையில் தரப்பெற்றுள்ளது. எழுவாய், உடைமை, கொடை, செயப்படுபொருள், விளி, இடம், கருவி அல்லது காரணம், உடனிகழ்ச்சி எனும் வரிசை பின்பற்றப்பட்டுள்ளது. **கொடுந்தமிழ் இலக்கண** வரிசைக்கு இணையான தமிழ்இலக்கண வரிசை முதல், ஆறாம், நான்காம், இரண்டாம், எட்டாம், ஏழாம், மூன்றாம் வேற்றுமை என்பது ஆகும்.

கொடுந்தமிழ் இலக்கணம் உருபுகள் சேரும்போது பெயர்ச்சொற்கள் *இன், அத்துச்*சாரியைகளைப் பெற்று வடிவம் மாறுதலை விவரிக்கிறது.

முதல் வேற்றுமை

> **எழுவாயுருபா மியல்பிற் பெயரே**
> **மீண்டதன் பொருளாம் வினைபெயர் வினாவே**

என்பது தொன்னூல் விளக்க விதி (56) ''முதல் வேற்றுமைக்கு உருபாவது, திரிபின்றித் தன்னியல்பாக நிற்கும் பெயர்தானேயாம்'' இதற்குப் பொருள்களாவன: வினையைக் கொள்ளலும், பெயரைக் கொள்ளலும், வினாவைக் கொள்ளலும், இதற்குப் பொருள்களாம்'' என்று கூறும் முனிவர் (தொன்னூல்விளக்கம் 56),

> இம்முதல் வேற்றுமைக்கு ஐம்முதலிய உருபுகளின் றாயினுஞ் சிறுபான்மை ஆனவன், ஆகின்றவன், ஆவான் முதலாக ஐம்பாலிலும் வருகிற சொல்லுருபுகளுண்டு (உ-ம்) கொற்றனானவன், கொற்றியானவள், கொற்றரானவர், கோவானது, கோக்களானவை எனச் சிலவிடங்களில் வரும். அன்றியுஞ் சாத்தனென்பவன் என வருதலுமறிக.

என்றும் உரைக்கிறார்.

ஆனவன், என்பவன் முதலியவற்றை வீரமாமுனிவர் முதல் வேற்றுமையின் சொல்லுருபுகள் என்று கூறுகிறார். **வீரசோழியம், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து** முதலிய வடமொழி சார்ந்த இலக்கண நூல்களிலும் இக்கருத்து இடம்பெற்றுள்ளது.

கொற்றனானவன், சாத்தனென்பவன் என்பவற்றிலுள்ள ஆனவன், என்பவன் ஆகியன இணைப்புச் சொற்களே அன்றி, உருபுகளல்ல. இவை ஆகு, என் எனும் வினைகளினடியாக அமைந்தவை. வடமொழி அமைப்பைத் தமிழில் இணைக்கும் முயற்சி இது எனலாம் (பெ.சுயம்பு, தொன்னூல் விளக்கம், செந்தமிழ், மார்ச்சு 1991, ப.15).

வீரமாமுனிவரும் தமிழகத்தில் வாழ்ந்த சிலரைப் போன்று தமிழ் மொழியும் வடமொழியிலிருந்து உருவான மொழியே எனும் கருத்து உடையவரே. தமிழ் இலக்கணக் கருத்துக்களை விவரிக்கும் இடங்களில் வாய்க்குந்தோறும் வடமொழியோடு ஒப்பிட்டுக் கூறுதலையும் தமிழ் இலக்கணக் கலைச்சொற்களுக்கு இணையான வடமொழிச் சொற்களை, "தன்மைக்கு உத்தமன், எ-ம், முன்னிலைக்கு மத்தியமன், எ-ம், படர்க்கைக்குப் பிரதமன், எ-ம், வடநூலார் கூறுவர்," "வடநூலார் எழுவாய்க் கருத்தனை அபியித கருத்தன், எ-ம் மூன்றனுருபின் கருத்தனை அநபியித கருத்தன், எ-ம்... கூறுவர்" என்பன போன்று கூறுதலையும் விவரிப்புக் கொள்கையாகக் கொண்டவர்.

இரண்டாம் வேற்றுமை

இதன் *உருபு ஐ*. இவ்வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை எனும் பொருள்களிலான செயப்படுபொருளில் வரும் (தொன்னூல் விளக்கம், 57).

1. ஆக்கல் - குடத்தை வனைந்தான்
2. அழித்தல் - மரத்தையறுத்தான்
3. அடைதல் - நாட்டை நண்ணினான்
4. நீத்தல் - ஆசையைத் துறந்தான்
5. ஒத்தல் - புலியைப் போன்றான்
6. உடைமை - அருளையுடையான்

வீரமாமுனிவர் செயப்படுபொருளை மூன்றாக வகைப் படுத்துகிறார்.

1. கருத்துண்டாய்ச் செயப்படுவது - சோற்றையுண்டான்
2. கருத்தின்றிச் செயப்படுவது - சோற்றைக் குழைத்தான்
3. இருமையுமாய்ச் செயப்படுவது - பதரையும் நெல்லையும் பணத்திற்காக் கொண்டான்.

இத்தகைய பகுப்பு வடமொழிச் சார்பு தமிழ் இலக்கண நூல்களிலும் காணப்படுகிறது.

செந்தமிழ் இலக்கணம், **கொடுந்தமிழ் இலக்கணம்**, **கிலாவிஸ்** மூன்றும் இரண்டாம் வேற்றுமை செயப்படு பொருளில் (accusative) வரும் என்று கூறுகின்றன.

மூன்றாம் வேற்றுமை

மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்

(தொன்னூல் விளக்கம், 58)

மூன்றாம் வேற்றுமை உருபுகள் *ஆல், ஆன், ஓடு, ஒடு* ஆகியன. இவ்வேற்றுமை கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி ஆகிய பொருள்களில் வரும். *ஆல், ஆன்* ஆகியன கருத்தா, காரணப்பொருள்களிலும் ஓடு, ஒடு ஆகியன உடனிகழ்ச்சிப் பொருளிலும் வருதலைச் சிறப்பு என்று முனிவர் குறிப்பிடுகிறார். மேலும், *ஆல், ஆன்* உருபுகளுக்குப் பதிலாகக் *'கொண்டு'* எனும் சொல்லும் *ஓடு, ஒடு* ஆகியவற்றுக்குப் பதிலாக 'உடன்' எனும் சொல்லும் வரும் என்ற கருத்தும் **தொன்னூல் விளக்கத்தில்** (58) இடம்பெற்றுள்ளது.

வீரமாமுனிவர் உரையில் கருவிப் பொருளை முதற்கருவி, துணைக் கருவி என்றும் கருத்தாவை ஏவுதற் கருத்தா, இயற்றுதற்கருத்தா என்றும் வகைப்படுத்தி விவரிக்கிறார்.

எ-டு.	முதற்கருவி	-	கண்ணாற் கண்டான்
	துணைக்கருவி	-	நாழியாலளந்தான், வாள்கொண்டு வெட்டினான்
	ஏவுதற் கருத்தா	-	அரசனாற் கோயிற் கட்டுவிக்கப்பட்டது
	இயற்றுதற் கருத்தா	-	தச்சனாலாகிய கோயில்
	உடனிகழ்ச்சி	-	உலகத் தொடொப்பவொழுகல், மகளுடன் மருமகன் வந்தான்

ஆல், ஆன் உருபுகள் *'தோறு'* எனும் பொருளைத் தருதலையும் முனிவர் குறிப்பிடுகிறார். ஊர்தோறு மொவ்வோ ராலயம்.

செந்தமிழ் இலக்கணம் மூன்றாம் வேற்றுமை கருவி, காரணம், கருத்தா, உடனிகழ்வு எனும் பொருள்களில் வருதலைக் குறிப்பிடுகிறது. இந்நூல் *ஆல், ஆன், ஓடு, ஒடு* நான்கையும் உருபுகளாகக் கூறுகிறது.

கொடுந்தமிழ் இலக்கணம் கருவி அல்லது காரணப்பொருளில் வரும் வேற்றுமைக்கு *ஆல், இனால்* இரண்டும்

உருபுகள் என்றும் உடனிகழ்ச்சிப் பொருளுக்கு ஓடு, இனோடு என்பன உருபுகள் என்றும் கூறுகிறது.

எ-டு. மலையால், மலையினால், மலையோடு, மலையினோடு.

முனிவர் *இன்* சாரியையும் வேற்றுமை உருபுகளோடு சேர்த்து *'இனால்'* என்று பிறழப் பிரித்துள்ளார். மொழியைப் பயிற்றுகிற முறைகளுள் இதுவும் ஒன்று.

ஆக, குறித்து, கொண்டு எனும் சொற்களும் வேற்றுமை உருபுகளாக வருதலை முனிவர் **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** குறிப்பிடுகிறார். இவற்றுள் *ஆக* நான்காம் வேற்றுமையிலும் (கொடை), *குறித்து* இரண்டாம் வேற்றுமையிலும் (செயப்படு பொருள்), *கொண்டு* மூன்றாம் வேற்றுமையிலும் (கருவி) வருகின்றன.

எ-டு. மலைக்காக, மலையைக்குறித்து, மலையைக் கொண்டு.

ஆகிறது என்ற வினையிலிருந்து *ஆக* என்பதும் *குறிக்கிறது* எனும் வினையிலிருந்து *குறித்து* எனும் உருபும் *கொள்கிறது* எனும் வினையிலிருந்து *கொண்டு* எனும் உருபும் உண்டாகின்றன என்பது முனிவர் கருத்து **(கொடுந்தமிழ் இலக்கணம், ப.26).**

ஆக, குறித்து, கொண்டு என்பவற்றைத் தமிழ் இலக்கணிகள் சொல்லுருபுகள் என்பர்.

ஆக, குறித்து, கொண்டு எனும் மூன்றும் வினையெச்சங்கள் ஆகும். வினைமுற்றுகளிலிருந்து வினையெச்சங்கள் அமைகின்றன என்பது வீரமாமுனிவரின் கொள்கை. இது மொழிப்பயிற்சியை எளிமையாக்குகிற அவர்தம் நெறியாகும்.

நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமைக்கு உருபு *கு*. இது கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு முறை முதலிய பொருள்களில் வரும் என்பது **தொன்னூல் விளக்கத்தின்** (59) விதி.

நான்கா வ தற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே

கொடை - தாய் தந்தைக்குத் திவசங் கொடுத்தான்
பகை - மக்கட்குப் பகை வெகுளி
நேர்ச்சி - விளக்கிற்கு நெய்
தகுதி - அறத்திற்குத் தக்கதருள்

அதுவாதல் - ஆடைக்கு நூல்
பொருட்டு - கூலிக்குழைத்தான்
முறை - எனக்குத் தாய்

செந்தமிழ் இலக்கணம் நான்காம் வேற்றுமைக்கு உருபு கு; பொருள் *'கொடை'* எனக் குறிப்பிடுகிறது. **கொடுந்தமிழ் இலக்கணம்** நான்காம் வேற்றுமை உருபு 'க்கு' என்றும் பொருள் *'கொடை'* என்றும் கூறுகிறது. ஐரோப்பிய மொழியியல் முறையைப் பின்பற்றி முனிவர் சந்தியில் வருகிற எழுத்தை உருபுடன் சேர்த்துப் (க்கு) பிரித்துள்ளார்.

ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமைக்கு *இல், இன்* இரண்டும் உருபுகள்; *நீங்கல், ஒப்பு, எல்லை,* ஏதுப்பொருள்களில் இவ்வேற்றுமை வரும் என்பது **தொன்னூல் விளக்கச்** (60) செய்தி.

ஐந்தா வதனுரு பில்லு மின்னு
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே

சிறுபான்மை *இல், இன்* இவ்வுருபுகளோடு *உம்* சேர்ந்து வரும். *இல், இன்* எல்லைப் பொருளில் ஐயுருபோடு *காட்டிலும் பார்க்கிலும்* சேர்ந்து சொல்லுருபுகளாக வரும். நீக்கப்பொருளில் *இல், இன்* உருபுகளின்மேல் நின்று இருந்து தனித்தும் *உம்* பெற்றுஞ் சொல்லுருபுகளாக வரும்.

என்னும் விளக்கத்தை முனிவர் உரையில் தருகிறார்.

எ-டு. *நீங்கல் - தலையினிழிந்த மயிரனையர்*
ஒப்பு - காக்கையிற் கரிது களம்பழம்
எல்லை - மதுரையின் வடக்குச் சிதம்பரம்
ஏது - அறிவிற் பெரியன்
அவனிலும் பாமரன், இவனினும் பெரியன்
அவனைக் காட்டிலும் வல்லவனிவன்
இவனைப் பார்க்கினும் மூடனவன்
ஊரினின்று நீங்கினான், ஊரிலிருந்து போனான்
ஊரினின்று வந்தான், ஊரிலிருந்து போனான்

ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமைக்கு *அது, ஆது, அ* மூன்றும் உருபுகள் ஆகும் இவற்றுள் *அ* பன்மைக்கும் *அது, ஆது* இரண்டும் ஒருமைக்கும் வரும்

பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் எனும் ஐந்தும் அடங்கிய *தற்கிழமை, பிரிதின் கிழமை* எனும் இருவகைக் கிழமையும் இவ்வேற்றுமைக்கான பொருள் ஆகும் **(தொன்னூல் விளக்கம் 61).**

> *ஆற னொருமைக் கதுவுமா துவும்*
> *பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்*
> *பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்*
> *திரிபி னாக்கஞ் சேர்ந்த தற்கிழமையும்*
> *பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே*

> சிறுபான்மை உடையவென்னுஞ் சொல்லுருபாயினும் குவ்வுருபாயினும் வரும். (உ-ம்) சாத்தனுடைய மகன், சாத்தனுக்கு மகள், எ-ம், வரும். ஒரோவிடத்து அவனது மனையாள், அரனது தோழன், என உயர்திணையில் அதுவுருபும் வரும். வடநூலார் சம்பந்தப் பொருளை சேஷார்த்தம் என்பர்... தன்னோடொற்றுமையுடைய பொருள் தற்கிழமை, தன்னின் வேறாகிய பொருள் பிறிதின் கிழமை. கிழமை எ-து. உரிமை.

என்பது உரைதரும் விளக்கம்.

எ-டு. *எனது கை, எனாது கை, என கைகள்*
பண்பு - காக்கையது கருமை
உறுப்பு - சாத்தனது கை
ஒன்றன் கூட்டம் - நெல்லது குப்பை
திரிபினாக்கம் - மஞ்சளது பொடி

பலவின் ஈட்டத்திற்கு உரையில் சான்று தரப்பட வில்லை

பிறிதின் கிழமையை முனிவர் மூன்று வகைப்படுத்துகிறார்.

1. → பொருட் பிறிதின் கிழமை - அரசனதாடை
2. → இடப்பிறிதின் கிழமை - சாத்தனது வீடு
3. → காலப்பிறிதின் கிழமை - புதனது வாரம்

நான்காம் வேற்றுமை உருபு கு ஆறாம் வேற்றுமைப் பொருளில் வருதலை உருபு மயக்கம் என்று பிற தமிழ் நூல்கள் கூறுகின்றன.

> செந்தமிழில் உடைய என்பதனைப் பயன்படுத்தக் கூடாது. இச்சொல் உடை எனும் சொல்லிலிருந்து உருவானது. இது வேற்றுமை உருபு அன்று; ஒரு பெயரடை. **(செந்தமிழ் இலக்கணம்,** ப.371)

பன்மை உருபு '*அ*' என்பதோடு தொடர்புடைய பெயர் ஒருமை வடிவில் இருப்பினும் அப்பெயர் பன்மையாகவே பொருள்படும் என்று **செந்தமிழ் இலக்கணத்தில்** கூறும் முனிவர் அதற்குச் சீவகசிந்தாமணிப் பாடலைக் காட்டுகிறார்.

நுனசீ ரடிநோ வநடந் துசெலே
லெனதர் வியகத் துறைவா யெனுநீ
(சிந்தாமணி, கேமசரியாரிலம்பகம் கவி)

கொடுந்தமிழ் இலக்கணத்தில் ஆறாம் வேற்றுமை உருபுகளாக *இன், இனுடைய, உடைய* என்பன காணப்படுகின்றன.

இன் என்பது சாரியை. *இன், உடைய* ஆகியவற்றின் கூட்டு வடிவம் *இனுடைய* என்பதாகும்.

ஏழாம் வேற்றுமை

ஏழன் உருபு கண்ணாதி யாகும்
பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்பின் இதன்பொருள் என்ப.

என்பது **தொன்னூல் விளக்க** நூற்பா (62).

கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் எனும் இருபத்தெட்டும் ஏழாம் வேற்றுமை உருபுகள் ஆகும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறன் அடிப்படையிலாகும் தற்கிழமை, பிறிதின் கிழமை எனும் இருவகைக் கிழமையாலும் அமையும் இடம் இவ்வேற்றுமைக்குப் பொருள் ஆகும்.

எ-டு. மணியின்கண்ணொளி - தற்கிழமைப் பொருள்
திணையின்கண்கிளி - பிறிதின் கிழமைப் பொருள்
கடலின்கண் திரை - தற்கிழமை இடம்
ஆகாயத்தின்கண் பறவை - பிறிதின் கிழமை இடம்
நாளின்கண் நாழிகை - தற்கிழமைக் காலம்
காரின்கண் முல்லை - பிறிதின்கிழமைக் காலம்
கையின்கண் விரல் - தற்கிழமைச் சினை
நிறத்தின்கண் எழில் - தற்கிழமைக் குணம்
இளமைக்கண் செல்வம் - பிறிதின் கிழமைக் குணம்
ஆடற்கண் சதி - தற்கிழமைத் தொழில்
ஆடற்கண் பாட்டு - பிறிதின் கிழமைத் தொழில்

தொன்னூல் விளக்கத்திலுள்ள உருபுகள் யாவும் **செந்தமிழ் இலக்கணத்திலும்** காணப்படுகின்றன. மேலும், மகர ஈற்றுப் பெயர்களில் *'அத்து'ச்* சாரியை இடப்பொருளில் வருதலையும் கொடுந்தமிழில் *'கிட்ட'* எனும் சொல் ஏழாம் வேற்றுமையில் வருதலையும் முனிவர் **செந்தமிழ் இலக்கணத்தில்** (பக்கம் 38) குறிப்பிடுகிறார்.

எ-டு. காட்டகத்து.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் *இல், இடத்தில்* எனும் இரு உருபுகள் கூறப்படுகின்றன.

எ-டு. என்னில், என்னிடத்தில்.

இடத்தில் என்பது *இடம், அத்து, இல்* எனும் மூன்றும் இணைந்த கூட்டு வடிவம் ஆகும். *இடம்*-பெயர்ச்சொல். *அத்து* - சாரியை. *இல்* - ஏழாம் வேற்றுமை உருபு.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பவணந்தி மூவரும் *கண்* முதலியவற்றை வேற்றுமை உருபுகள் என்று கூறுகின்றனர். சேனாவரையர் இவற்றை வெவ்வேறு பொருள்களை உணர்த்தும் சொற்கள் என்கின்றார். தெய்வச்சிலையாரும் கல்லாடனாரும் இவை பெயராகவும் உருபாகவும் வருவன எனக் குறிப்பிடுகின்றனர்.

தெ.பொ. மீனாட்சிசுந்தரன் (**தமிழ்மொழி வரலாறு**, பக்கம் 143), ஆண்டிரீ எஃப் ஜோபர்கு (Evidence for a Locative Case in Telugu, p.59) ஆகியோர் *கண், கால்* முதலியவற்றைப் பெயர்கள் எனக் கருதுகின்றனர். இப்பெயர்ச்சொற்கள் ஏழாம் வேற்றுமை உருபுகளாகவும் வழங்குகின்றன (பெ. சுயம்பு, **இலக்கணநூல்களில் கருத்து வளர்ச்சி**, ப.78).

எட்டாம் வேற்றுமை

தொன்னூல் விளக்கம் பத்து நூற்பாக்களில் விளி வேற்றுமையை விரிவாக விளக்குகிறது.

எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே

என்பது எட்டாம் வேற்றுமையாகிய விளியின் இலக்கணம் ஆகும் (**தொன்னூல் விளக்கம்**, 69).

'எட்டாம் வேற்றுமையின் பொருள் அழைப்பது. அழைத்தலும் விளித்தலும் ஒக்கும்' என்பது முனிவர் தரும் உரை விளக்கம்.

1. பெயரின் ஈறு திரிதல் - நம்பீ
2. பெயரின் ஈறு கெடுதல் - மன்ன
3. பெயரின் ஈற்றில் மிகுதல் - மன்னனே
4. பெயர் இயல்பாக அமைதல் - ஐயன்
5. பெயர் ஈற்றயல் திரிதல் - ஊரீர்
6. பெயர் ஈறு கெட்டு, ஈற்றயல் திரிதல் - ஐயா
7. பெயர் ஈறு கெட்டு ஈற்றயல் திரிந்து ஏ மிகுதல் - கண்ணாவே

இயல்பு, குன்றல், மிகுதல், ஈற்றின் திரிபு, ஈற்றயல் திரிபு எனும் ஐந்து அமைப்பில் பெயர்ச்சொல் விளி வேற்றுமையாக வருதலைச் **செந்தமிழ் இலக்கணம்** (ப.39) கூறுகிறது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் பெயர்ச்சொல்லோடு ஏகாரம் சேர்ந்து விளி வேற்றுமை வருதல் கூறப்பெற்றுள்ளது.

எ-டு. முகமே மாதாவே.

சாரியைகள்

வீரமாமுனிவர் **தொன்னூல் விளக்கத்தில்** சாரியைகளைச் சொல்லின் பொதுத் தகுதிகள் பன்னிரண்டனுள் ஒன்றாகக் கருதுகிறார். இச்சாரியைகள் பதப்புணர்ச்சி, விகுதிப் புணர்ச்சி, வேற்றுமை யுருபு புணர்ச்சி எனும் மூவகைப் புணர்ச்சிகளிலும் எழுத்து அல்லது சொல் வடிவில் இடையில் வரும் என்று கூறும் **தொன்னூல் விளக்கம்** (52) பதினேழு சாரியைகளைக் கூறுகிறது.

சாரியை யென்ப சார்பத மெழுத்தென
பதத்தொடு விகுதியும் பதமு முருபும்
புணர்புளி யிடையிற் புணர்வன வற்றுள்
அஎஉ ஐகுன் அன்னா னின்னல்
அற்றிற் றத்தந் தம்நம் நும்மெனப்
பதினே ழுன்றிப் பிறவு மாம்பொதுச்
சாரியை யவற்றோர்வழி யன்றாகும் விகற்பமே

1. அ - தனக்கு
2. ஏ - கலனே தூணி
3. உ - சாத்தனுக்கு
4. ஐ - மற்றையவர்
5. கு - மொழிகுவான்
6. ன் - ஆன்கன்று
7. அன் - ஒன்றன் கூட்டம்
10. அல் - நறுந்தொடையல் சூடி
11. அற்று - பலவற்றை
12. இற்று - பதிற்றுப்பத்து
13. அத்து - நிலத்தியல்பு
14. அம் - புளியங்காய்
15. தம் - எல்லார் தம்மையும்
16. நம் - எல்லா நம்மையும்

8. ஆன் - இருபான் *17. நும் - எல்லீர் நும்மையும்*

9. இன் - வண்டினை

தொன்னூல் விளக்கச் செய்தி நன்னூலை வழிமொழிகிறது. முனிவர் உரையில் நன்னூல் நூற்பாவை மேற்கோள் காட்டுகிறார்.

இச்சாரியைகளுள் *அல்* என்பது பிறழ்பிரிப்பு வடிவமாகும். தொடையல் என்பதில் *அல்* ஒரு சொல்லாக்க உருபாகும். *தொடை* எனும் சொல் மலர்மாலையை உணர்த்தியது. அச்சொல் காலின் மேற்பகுதியை உணர்த்தியபோது, *அல்* விகுதி இணைந்து *தொடையல்* என்று மாலையைக் குறிக்கலாயிற்று. *ஆன், ஒருபான்* என்பவற்றில் *னகரம்* அச்சொற்களின் உறுப்பாகும். பிறழ் பிரிப்பினால் சாரியை எனப் பிழையாகக் கொள்ளப் பெற்றுள்ளது. *தம், நம், நும்* மூன்றும் முறையே *தாம், நாம், நீயிர்* எனும் மூவிடப்பெயர்களின் வேற்றுமை வடிவங்கள் ஆகும்.

செந்தமிழ் இலக்கணம் (பக்கம் 28) சாரியைகள் பெயர்களை வேற்றுமை உருபுகளை ஏற்கும் வடிவமாக்குதலைக் கூறுகிறது. இந்நூல் *இன், அத்து* ஆகிய சாரியைகளின் வருமிடங்கள், பயன்பாடுகளை விவரிக்கிறது.

அம் ஈற்றுப்பெயர்களும் சில உகர ஈற்றுப்பெயர்களும் அல்லாத ஏனைய பெயர்கள் *இன்* சாரியை பெறும். வல்லெழுத்தை முதலாகக் கொண்ட சொற்களோடு புணருங்கால் சாரியையின் *னகரம் றகரம்* ஆகும்.

எ-டு. அழகிய கண்ணிற் குழவி.

அம் ஈற்றுப் பெயர்களோடு வேற்றுமை உருபு புணரும்போது *அத்துச் சாரியை* வரும். எ-டு. இடத்து.

அத்துச் சாரியை இடம், ஒப்புப் பொருள்களில் வருதலைச் **செந்தமிழ் இலக்கணம்** இலக்கியச் சான்றுகளுடன் கூறுகிறது.

எ-டு. அந்தரத்து வாழ்கின்றேம் - இடப்பொருள்
அறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும் (சிலப்பதிகாரம்)
- ஒப்புமைப்பொருள்.
மாலைத் தாமத்து மணிநிரைத்து - ஒப்புமைப் பொருள்

வினைச்சொல்

வீரமாமுனிவர் தம் இலக்கண நூல்கள் யாவற்றிலும் தனி இயலை அமைத்து வினைச்சொல் இலக்கணத்தை விரிவாக விளக்குகிறார்.

வினைச்சொல் அமைப்பு

ஏவல் ஒருமை வினையைப் பகாப்பதம் என்றும் ஏனைய வினைகளைப் பகுபதம் என்றும் முனிவர் கூறுகிறார். பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனும் ஆறு உறுப்புக்களுள் ஏற்பனவற்றைப் பெற்றுப் பகுபதங்கள் அமையும் எனத் தொன்னூல் விளக்கச் சொற்பொதுவியலின் உரையில் தெரிவிக்கிறார். ஆனால் வினைச்சொல்லியலில் வினைப்பகுதி, விகுதிகள், கால இடைநிலைகள் ஆகிய மூன்றை மட்டுமே விவரிக்கிறார்.

பகுபத உறுப்புக்களுள் சாரியை, சந்தி, விகாரம் மூன்றும் புணர்ச்சியில் ஒலி இயைபுக்காக வருகின்றன. இவை வினைச்சொல்லின் வகைகளை உருவாக்குகிற ஆக்க உருபுகள் அல்ல. எனவே வீரமாமுனிவர் வினைச்சொற்களை உருவாக்கப் பயன்படுகிற ஆக்க உருபுகளை மட்டுமே வினைச்சொல்லின் உறுப்புக்களாக விவரிக்கிறார்.

தொன்னூல் விளக்கம் வினைச்சொல்லில் உள்ள கால இடைநிலையினையும் விகுதியையும் தனித்தனியே பிரித்துக் கூறுகிறது.

இறந்த காலத் திடைநிலை தடறவொற்று
இன்னே மூவிடத்து ஐம்பாற்கு ஏற்பன.

நிகழ்பொழுது ஆநின்று கின்று கிறுவென
ஐம்பால் மூவிடத் தாம்இடை நிலையே.

எதிர்வரும் காலத்து இடைநிலைப் பவ்வ
ஐம்பால் மூவிடத் தாம்இவை சிலஇல

(தொன்னூல் விளக்கம், 108-110)

வினைச்சொற்கள் சில கால இடைநிலைகளை ஏற்றல் இல்லை. ஆனால் அவற்றில் விகுதிகள் காலத்தையும் ஒருங்கிணைத்துக் காட்டும் என்பதையும் இந்நூல் (111) கூறுகிறது.

எதிர்கால விகுதியுள் ஒருமைத் தன்மை
குடுதுறு என்னும் குற்றிய லுகரமோடு
அல்அன் என்ஏன் ஆமெண் ஈறே
பலர்பாற் காகும் பமார் மரும்மனார்

உண்ணாக்கிடந்தான், *உண்ணாவிருந்தான்* எனும் சொற்களையும் **தொன்னூல் விளக்கம்** நிகழ்காலத்திற்கு உரியனவாகக் கூறுகிறது. இவற்றில் உள்ள *கிட, இரு* ஆகியவற்றை நிகழ்கால இடைநிலைகள் என்று *தொல்காப்பிய* உரையாசிரியர்களும் வைத்திய நாததேசிகரும் கூறுவர்.

செந்தமிழ் இலக்கணம் மூவிட வினைகளுக்குரிய ஒருமை விகுதிகளையும் பன்மை விகுதிகளையும் தொகுத்துக் கூறுகிறது. எனினும் இந்நூல் முக்காலங்களுக்கும் உரிய வினை வகைகளை விவரிக்குமிடத்து, *கிறேன், கின்றேன், நின்றேன், குவேன், வன (செய்யாவன)* என்பன போன்று காலஇடைநிலையையும் விகுதியையும் ஒரே கூறாகச் சேர்த்துள்ளது. *நின்றேன்* என்பது எதிர்மறைவினையுடன் சேர்க்கப்பட்டு நிகழ்காலம் உணர்த்துகிறது என்று இந்நூல் குறிப்பிடுகிறது (ப.77).

முனிவர் கூறும் *நின்றேன்* எனும் சொல் தமிழ் இலக்கணிகள் கூறும் *ஆநின்று* எனும் நிகழ்கால இடைச்சொல்லோடு தொடர்புடையது. *செய்யா* எனும் வாய்பாட்டுச் சொல்லிலுள்ள *ஆகாரத்துடன் நின்று* எனும் வினைச்சொல்லைச் சேர்த்துப் பிறழப் பிரித்த வடிவமே *ஆநின்று* ஆகும். *ஆகிட, ஆஇரு* என்பனவும் இத்தகைய பிறழ்பிரிப்பு வடிவங்களே.

கொடுந்தமிழ் இலக்கணம் நிகழ்காலத்தை நெகிழ்காலம் என்று குறிப்பிடுகிறது. இந்நூல் வினைச்சொல்லைப் பகுதி + காலஇடைநிலை விகுதி என இரு பகுதிகளாகப் பிரித்து விவரிக்கிறது. *கிறது, கிறேன், கிறாய், கிறீர், கிறீர்கள், தேன், தாய், தோம், தார்கள், ப்பேன், பேன், வேன்* என்பன போன்று இந்நூலில் முக்கால வினைகளின் விகுதிகளும் காணப்படுகின்றன.

நிகழ்கால, எதிர்கால வினைச்சொற்களின் அமைப்புக்கள் கடினமானவை அல்ல என்று கூறும் **கொடுந்தமிழ் இலக்கணம்** (பக்.41, 43, 49), இறந்தகாலச் சொற்களின் அமைப்பு மிகவும் கடினமானது என்று குறிப்பிடுகிறது. மேலும், இந்நூல் இறந்தகால வினைச் சொற்களின் அமைப்புக்களை விதிகள் சிலவற்றின்வழி விளக்குகிறது.

'க்கிறது' எனும் நிகழ்கால விகுதிகளைக்கொண்ட வினைச்சொற்களுக்கு ஏற்ற இறந்தகால வினைச்சொற்கள் கீழ்க்காணும் விதிகளுக்கேற்ப அமையும்.

1. ய், ர், இ, உ, ஐ ஈறுகளை அடுத்து, 'த்தேன்' விகுதி வரும்.
எ-டு. மேய்த்தேன், பார்த்தேன், படித்தேன், கொடுத்தேன், படைத்தேன்.
2. அகர ஈற்றை அடுத்து 'ந்தேன்" விகுதி வரும்.
எ-டு. மணந்தேன், பிறந்தேன்.
3. நெடில்களை அடுத்து 'க்கினேன்" விகுதி வரும்.
எ-டு. ஆக்கினேன், நீக்கினேன், தூக்கினேன், தேக்கினேன், நோக்கினேன்.

'கிறது' எனும் நிகழ்கால விகுதிகளைக்கொண்ட வினைச் சொற்களுக்கு ஏற்ற இறந்தகால வினைச்சொற்கள் கீழ்க்காணும் விதிகளின்படி அமையும்.

1. ஙகார ஒற்றை அடுத்துக் 'கினேன்' விகுதி வரும்.
எ-டு. வணங்கினேன், அடங்கினேன்.
2. ணகர ஒற்றை அடுத்து 'டேன்' விகுதி வரும்.
எ-டு. உண்டேன், கண்டேன்
3. னகர ஒற்றை அடுத்து 'றேன்' விகுதி வரும்.
எ-டு. தின்றேன், என்றேன்.
4. உகரத்தை அடுத்து 'இனேன்' விகுதி வரும்.
எ-டு. எழுதினேன், தும்மினேன், தேடினேன், திருடினேன்.
5. ளு, ரு, லு ஆகியவற்றை அடுத்து 'டேன், தேன், றேன்' விகுதிகள் வரும்.
எ-டு. ஆண்டேன், தீர்ந்தேன், சேர்ந்தேன், வென்றேன்.
6. ய், இ, ஐ ஆகியவற்றை அடுத்து 'ந்தேன்' விகுதி வரும்.

"அடைந்தேன், அறிந்தேன், வைதேன், பெய்தேன், செய்தேன், நெய்தேன் என்பன விதிவிலக்கானவை. இவற்றில் சிலவேளைகளில் தாழ்ந்த இனமக்கள் ஞகர ஒற்றைச் சேர்த்துக் கூறுவர். நெடில்கள் சிலவற்றை அடுத்தும் இவ்விகுதி வரும்.

எ-டு. வெந்தேன் (வேகிறது). நொந்தேன் (நோகிறது). செய்தது எனும் சொல் செய்துது என்றும் வழங்கப்படுகிறது. ந்தேன் என்பது (அறிஞ்சேன்) என்றும், 'த்தேன்' என்பது 'ச்சேன்' (படிச்சேன்) என்றும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்குதல் நாகரிக

> வளர்ச்சியற்ற கொச்சை (barbarous and vulgar) வழக்கு ஆகும். 'இனது' (அடங்கினது) விகுதி இற்று (அடங்கிற்று) என்றும் நேர்த்தியாகப் பேசப்படுகிறது. இவ்விகுதி 'இச்சு' என்று (அடங்கிச்சு, சொல்லிச்சு, பண்ணிச்சு) தாழ்ந்த இனமக்களால் சொல்லப்படுகிறது. இத்தகைய கொச்சை வழக்கினை நாம் இங்குப் பயன்படுத்தவில்லை.

என்று முனிவர் (பக். 48, 49) கூறுகிறார்.

எதிர்கால வினைகள் *குவேன், ப்பேன், வேன், பேன்* விகுதிகளைக் கொண்டு அமைதலைக் **கொடுந்தமிழ் இலக்கணம்** விவரிக்கிறது.

'கினேன்' விகுதி பெற்ற இறந்தகால வினைச்சொற்களுக்கு ஏற்ற எதிர்கால வினைகள் *'குவேன்'* விகுதி பெறும்.

எ-டு. வணங்குவேன். அடக்குவேன்.

'க்கிறது' விகுதி பெற்ற நிகழ்கால வினைச் சொற்களுக்கு ஏற்ற எதிர்கால வினைகள் ப்பேன் விகுதி பெறும்.

எ-டு. இருப்பேன், கேள்ப்பேன், கேட்பேன்.

'கிறது' விகுதி பெற்ற நிகழ்கால வினைச்சொற்களுக்கு ஏற்ற எதிர்கால வினைகள் *'வேன்'* விகுதி பெறும். ஆனால் *ண், ன், வ, ழ, ளு* ஆகியவற்றை அடுத்துப் *'பேன்'* விகுதி பெறும்.

எ-டு. ஆவேன், பெறுவேன், எழுதுவேன்
தின்பேன், என்பேன், காண்பேன்
சொல்லுவேன், சொல்வேன், வாழுவேன்
வாழ்வேன், ஆளுவேன், ஆள்வேன்.

கேட்பேன் எனும் சொல்லைக் *கேள்ப்பேன்* என்றும் *கேட்க* என்பதனைக் *கேள்க்க* என்றும் வல்லொற்றை மிகுத்துப் பேசுதலைச் சிலர் உயர் நாகரிகமாகக் கருதுகின்றனர். வீரமாமுனிவர் காலத்தும் இத்தகைய வழக்கு இருந்திருக்கிறது.

வினைவகைகள்

வீரமாமுனிவர் தம் நூல்தோறும் வெவ்வேறு வகைப்பாட்டினை வினைச்சொற்களில் செய்துள்ளார்.

தொன்னூல் விளக்கத்தில் முக்கால முற்றுவினை, ஏவல் வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு என நான்காக வினை வகைப்படுத்தப்பட்டுள்ளது.

வினைமுற் றொருமூன் றெச்ச மிரண்டு
வினைக்குறிப் பெனவிவை வினையின் வகுப்பே (103)

செந்தமிழ் இலக்கணத்தில் முக்கால முற்று வினை, ஏவல், செய வாய்பாட்டுவினையெச்சம், பெயரெச்சம், வினையெச்சம் எனும் ஐந்து வகைகள் விளக்கப்பெற்றுள்ளன.

கொடுந்தமிழ் இலக்கணம் நிகழ்கால வினைமுற்று, இறந்தகால வினைமுற்று, எதிர்கால வினைமுற்று, ஏவல், செய வாய்பாட்டு வினையெச்சம், வினையெச்சமும் பெயரெச்சமும், எதிர்மறைவினை, செயப்பாட்டுவினை, குறை வினை எனும் ஒன்பது வகைகளாக வினைச் சொல்லைப் பகுத்து விவரிக்கிறது.

வீரமாமுனிவரின் வினைச்சொல் இலக்கணம் மூவிட வினைகள், செய்யும் வினைமுற்று, ஏவல் வினை, வியங்கோள் வினை, செயப்பாட்டுவினை, பெயரெச்சம், வினையெச்சம், வினைக்குறிப்பு, எதிர்மறைவினை என வகைப்படுத்தி விளக்கப்படுகிறது.

மூவிட வினைகள்

தன்மை வினைகள்

என், ஏன், அன், அல், கு, டு, து, று எனும் எட்டும் தன்மை ஒருமை வினை விகுதிகள் ஆகும். *எம், ஏம், ஓம், அம், ஆம், கும், டும், தும், றும்* ஆகிய ஒன்பதும் தன்மைப் பன்மை வினை விகுதிகள் ஆகும். *எம், ஏம், ஓம், அம், ஆம்* எனும் பன்மை விகுதிகளுடன் *கள்* விகுதி பெற்று வரவும்பெறும் *அம், ஆம் விகுதி* பெற்ற சொற்கள் முன்னிலையாரை உளப்படுத்தி வழங்கும். *எம், ஏம், ஓம்* மூன்றும் படர்க்கையாரை உளப்படுத்தும். *கும், டும், தும், றும்* நான்கும் முன்னிலை, படர்க்கை ஆகிய இருபாலாரையும் உளப்படுத்தி வரும். இவை **தொன்னூல் விளக்கச்** செய்திகள் (105, 106,111).

செந்தமிழ் இலக்கணம் *ஏன், என்* ஆகிய இரண்டும் தன்மை ஒருமை வினையிலும் *ஆம், அம், ஏம், எம், ஓம்,* நான்கும் தன்மைப் பன்மை வினையிலும் வரும் என்றும் பன்மை விகுதிகளுடன் *கள்* விகுதி இணைந்து வருதல் அருகிய வழக்கு எனவும் கூறுகிறது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் தன்மை வினைச் சொற்கள் *ஒருமை, மரியாதை ஒருமை, பன்மை* என மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. *ஏன்* ஒருமையிலும் *ஓம்* மரியாதை ஒருமை, பன்மை ஆகியவற்றிலும் தன்மை வினை விகுதிகளாகக் காணப்படுகின்றன.

எ-டு. செய் - தேன் - ஒருமை

செய் - தோம் - மரியாதை ஒருமை

செய் - தோம் - பன்மை

ஏன், ஓம் ஆகிய விகுதிகள் பெருவழக்குப்பற்றி எல்லா நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

கு, டு, து, று என்பவற்றில் *க், ட், த், ற்* ஆகியன கால இடைநிலைகள்; *உம்* பன்மை விகுதி.

தன்மையுடன் முன்னிலையாரை உளப்படுத்துதலை உளப்படுத்தும் தன்மைப் பன்மை என்றும் ஏனை இரு வகைகளையும் உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்றும் மொழியியலார் கூறுவர். ஆனால் தமிழ் இலக்கணப் பகுப்பு **தொன்னூல் விளக்கத்தில்** உள்ளதைப் போன்றது.

தன்மை விகுதிகளுள் *கு, டு, து, று; கும், டும், தும், றும்* என்பன *க், ட், த், ற்* என்னும் இறவாக் காலக் குறியீடுகளுடன் முறையே தன்மை ஒருமை விகுதி *உகரமும்* தன்மைப் பன்மை விகுதி *உம்மும்* இணைந்த கூட்டு வடிவங்களாகும் (Yuri, Y.Glasov, `Non-Past Tense Morpheme in Ancient Tamil, page 107).

தன்மைப் பன்மையில் *கள்* விகுதி இரட்டைப் பன்மையாக இணைந்து வருதலுக்கு *நடந்தேங்கள், நடந்தனங்கள், நடப்பேங்கள், நடப்பனங்கள்* எனும் சொற்களைச் **செந்தமிழ் இலக்கணத்திலும் கிலாவிஸிலும்** முனிவர் சான்று காட்டுகிறார். படர்க்கை, முன்னிலை வினைகளின் ஒப்புமையாக்கத்தினால் இவ்விரட்டைப் பன்மைச் சொற்கள் அமைந்துள்ளன. இத்தகைய வழக்கினை இலக்கியங்களில் காண வியலவில்லை. முனிவரும் இவற்றை அருகிய வழக்கு என்றே குறிப்பிடுகிறார்.

வந்தோங்க, பேசினோங்க எனும் வழக்கினைப் பேச்சு மொழியில் காணமுடிகிறது. இச்சொற்களில் *'க'* என்பது *கள்* விகுதியின் உறுப்பாகும். இந்தக் *'கள்'* விகுதி பேசுகிறவர்களைக் (தன்மைப் பன்மையைக்) குறிக்கவில்லை. கேட்போரைச் சிறப்பிக்கும் பொருட்டுப் பயன்படுத்தப் படுகிறது.

முன்னிலை வினைகள்

தொன்னூல் விளக்கத்திலும் (105) **செந்தமிழ் இலக்கணம், கிலாவிஸ்** ஆகியவற்றிலும் *ஐ, ஆய், இ* மூன்றும் ஒருமை விகுதிகளாகவும்; *இர், ஈர்* இரண்டும் பன்மை விகுதிகளாகவும்

முன்னிலையில் வருதல் கூறப்பெற்றுள்ளது. வீரமாமுனிவர் பன்மை விகுதியுடன் *'கள்'* விகுதி இணைந்து வருதலையும் **தொன்னூல் விளக்க** உரையில் குறிப்பிடுகிறார்.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் *ஆய்* விகுதி ஒருமையிலும் *ஈர்* விகுதி மரியாதை ஒருமையிலும் *ஈர்கள்* விகுதி பன்மையிலும் முன்னிலையில் வருதலைக் காணமுடிகிறது.

எ-டு. *செய்-தாய் - ஒருமை*
செய்-தீர் - மரியாதை ஒருமை
செய்-தீர்கள் - பன்மை.

படர்க்கை வினைகள்

தொன்னூல் விளக்கம் (105) ஐம்பால் விகுதிகளையும் விவரிக்கிறது. *அன், ஆன்* ஆண்பாலையும்; *அள், ஆள்* பெண்பாலையும்; *அர், ஆர்* பலர் பாலையும்; *'உ'* ஒன்றன் பாலையும்; *'அ'* பலவின் பாலையும் உணர்த்தும். *அர், ஆர்* விகுதிகளோடு *கள்* விகுதி இணைந்து பலர் பால் விகுதியாக வருதலும் உண்டு. இவை தவிர, *ப, மார், மர், மனார்* என்பன பலர் விகுதியாக வருதலையும் வீரமாமுனிவர் கூறுகிறார்.

எ-டு. *வந்தனர்கள், வந்தார்கள்.*

ஆன், அன் ஆண்பாலையும்; *ஆள், அள்* பெண்பாலையும் உணர்த்தும் விகுதிகள் ஆகும். *அர், ஆர்* விகுதிகள் பலர்பாலை உணர்த்தும். மேலும், இவ்விகுதிகளுடன் *கள்* விகுதி பெற்று வருதலும் உண்டு. *து, ற்று, உம்* மூன்றும் ஒன்றன்பால் விகுதிகள் ஆகும். *'அ'* விகுதி பலவின் பாலை உணர்த்தும். *உம்* விகுதி எதிர்காலத்தில் மட்டும் வரும். ற்று விகுதி இகரத்தை அடுத்து வரும். *அ* விகுதி *அன்* சாரியை இன்றிஅருகி வருதலும் உண்டு. இவ்வாறு செந்தமிழ் இலக்கணம் படர்க்கை வினை விகுதிகளைக் கூறுகிறது.

'அன்' சாரியை இன்றி அகர விகுதியுடன் பலவின்பால் வினைச்சொல் வருதலுக்கு முனிவர் *நைடதத்திலிருந்து* சான்று காட்டுகிறார்.

உருக்கொடு மீண்ட, பொன்னின் குன்றின் மேலவன்
கொடை போன்மெனப் பொழிந்த

செய்த வாய்பாட்டில் பலவின்பால் முற்றுக்கள் வருதல் பழந்தமிழ் இலக்கியங்களிலும் அருகிய வழக்காகக் காணப்படுகிறது.

கிலாவிஸில் தொன்னூல் விளக்கச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

தொன்னூல் விளக்கம் *'து'* எனும் ஒன்றன்பால் விகுதியை, *த் +* *உ* என்று பிரித்துக் கூறுகிறது. அந்நூல் கருத்துப்படி *'த்'* எழுத்துப்பேறு எனலாம். ஆனால் **செந்தமிழ் இலக்கணம்** *'து'* என்று விகுதியைக் கூறுகிறது.

கொடுந்தமிழ் இலக்கணம் *ஆன்* எனும் ஆண்பால் விகுதி, *ஆள்* எனும் பெஃ.பால் விகுதி, *ஆர்* எனும் மரியாதை ஒருமை விகுதி, *ஆர்கள்* எனும் பலர்பால் விகுதி ஆகியவற்றைக் கூறுகிறது. மேலும், இந்நூல் *'து'* எனும் விகுதி ஒன்றன்பாலிலும் பலவின் பாலிலும் வருதலையும் கூறுகிறது.

வீரமாமுனிவர் **கொடுந்தமிழ் இலக்கணம்** தவிர்த்த நூல்களில் தன்மைப் பன்மை, முன்னிலைப் பன்மை, பலர்பால் விகுதிகளுடன் *'கள்'* விகுதி இணைந்து அருகிய வழக்கில் வருதலைக் கூறுகிறார். அவர் எடுத்துக் காட்டுகிற *வந்தனங்கள், வந்தாங்கள், வந்தனெங்கள், வந்தோங்கள்; வந்தனீர்கள், வந்தீர்கள்; வந்தனர்கள், வந்தார்கள்* எனும் சான்றுகளுள் *வந்தீர்கள், வந்தார்கள்* இரண்டும் ஒழிந்தவை மொழிவழக்கில் பயின்றதற்குச் சான்று காண்பது அரிது. பொதுமைப்படுத்தி விதி கூறுதல் என்னும் நெறி காரணமாக முனிவர் இவ்வாறு கூறியுள்ளார் (பெ.சுயம்பு, **இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி**, ப.96).

வந்தாங்க என்பது போன்ற சொற்கள் தற்காலப் பேச்சு வழக்கில் மரியாதை ஒருமையிலும் பலர்பாலிலும் படர்க்கையில் வழங்குகிறது.

செய்யும் வினைமுற்று

செய்யும் வாய்பாட்டு வினைமுற்று பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலைகளில் வராது. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனும் நான்கு பால்களில் மட்டும் வரும். பலவின் பாலில் வருமிடத்துக் *கள்* விகுதி இணைந்து வருதலும் உண்டு. இவ்வாறு **தொன்னூல் விளக்கம்** (107) கூறுகிறது.

செய்யுமென் முற்றே சேரும் பலரொழி
மற்றைப் படர்க்கையு மற்றத னீற்றய
லுயிரு முயிர்மெய்யு மொழிந்தே யஃகலும்
பலவின்பாற் கள்ளெனப் பற்றி மிகலுமாம்

எ-டு. அவை உண்ணுங்கள், இடுங்கள்.

சீவகசிந்தாமணியிலிருந்து முனிவர் சான்று எடுத்துரைக்கிறார்.

அல்லித் தாளற்ற போதும் அறாத நூலதனைப் போல
தொல்லைத் தம்முடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்காப்
புல்லிக் கொண்டுயிரைச் சூழ்ந்து புக்குழி புக்கு பின்னின்
றெல்லை யிறுன்ப வெந்தீச் சுட்டெ ரித்திடுங் களன்றே

செய்யும் வாய்பாடு நாளடைவில் முன்னிலையிலும் படர்க்கைப் பலர்பாலிலும் வழங்கலாயிற்று. *செய்யும்* வாய்பாட்டு ஏவறபன்மை, *கேண்மின், கேண்மோ, கேண்மியா* போன்ற சொற்கள் முன்னிலைக்கு உரியன. *கேளும் + இன் > கேள்ம் + இன் > கேண்மின். கேளும் + ஓ > கேள்ம் + ஓ > கேண்மோ. கேளும் + யா > கேள்ம் + யா > கேண்மியா. செய்யும்* வாய்பாட்டுச் சொற்கள் முன்னிலையில் வருதல் இல்லை எனும் பழைய விதியை மீறத் துணியாத இலக்கணிகள் *இன், ஓ, யா* எனும் அசைச்சொற்களைச் செய்யும் என்பதன் மகரத்துடன் சேர்த்துப் பிறழப் பிரித்தமையால், *மோ, மியா, மின்* என்பவற்றை அசைச்சொற்கள் என்று இலக்கணம் கூறலாயினர். (மோ.இசரயேல், **The Treatment of Morphology in Tolkappiyam**, page 152-156) இவ்வாறே கருதுகிறார்.

மார், மர், மனார் எனும் பலர்பால் விகுதிகளும் *செய்யும்* வாய்பாட்டுச் சொல்லைப் பிறழப் பிரித்த விகுதிகளே. *ம் + ஆர், ம் + அர் > மர், ம் + அன் + ஆர் > மனார்* என இவ்விகுதிகள் அமைந்துள்ளன. இவற்றில் *'ம்'* கால இடைநிலை. *அர், ஆர்* இரண்டும் பலர்பால் விகுதிகள். *அன்* என்பது சாரியை.

ஏவல் வினை

வீரமாமுனிவர் **தொன்னூல் விளக்கத்தில்** ஏவல்-வியங்கோள் எனும் ஒரே பிரிவில் ஒருங்கிணைத்து ஏவல், வியங்கோள் இரண்டையும் விவரிக்கிறார்.

தொன்னூல் விளக்கம் (105, 113) வினைப்பகுதிகளும் *ஆய், தி, மோ* ஆகியனவும் ஏவல் ஒருமை வினைக்கும் *ஈர், தீர், மின், மினீர்* ஆகியன ஏவல் பன்மை வினைக்கும் விகுதிகள் ஆகும் என்று கூறுகிறது. மேலும், *கு விகுதி* ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக உரியது என்றும் கூறுகிறது.

ஏவ லொருமைக் கியலு மாய்திமோ
வேவற் பன்மைக் கீர்தீர் மின்மினீ
ரிருமைக் கொரோவிடத் தாகுங் குவ்வே (113)

எ-டு. *உரையாய், உரைதி, உரைமோ,*
உரையீர், போதீர், உரைமின், உரைமினீர்

அன்னையே யனையார்க்கிவ்வா றருளு கென்றான் (கம்பன்)

நீயிங்கிருக்கென்றேகி (சிலப்பதிகாரம்)

எற்றியல் காண நாமிவட் டருகென்னவே (சிந்தாமணி)

எந்தைமார்களெழு கென்றாளென (சிந்தாமணி)

தி, தீர் என்பவற்றில் *தகர* ஒற்று எதிர்கால இடைநிலை, *இ, ஈர்,* இரண்டும் விகுதிகள்.

மின், மியா, மோ, மே என்பவற்றைத் **தொல்காப்பியம்** முன்னிலை அசைச்சொல் எனக் கூறுகிறது. இவை **செய்யும்** வாய்பாட்டு ஏவல் பன்மைச் சொற்களுடன் *இன், இயா, ஓ, ஏ* என்னும் அசைநிலைகள் சேர்ந்த அமைப்பிலிருந்து பிறழப் பிரித்தவையாகும். *செய்யும்* வாய்பாட்டு முற்றுக்கள் தன்மை, முன்னிலைகளில் வாரா எனக் கொண்டதே இப்பிறழ் பிரிப்புக்குக் காரணமாகும் (பெ.சுயம்பு, **தமிழ்மொழி அமைப்பும் வரலாறும்**, ப.173).

அருளுக, இருக்க, தருக, எழுக என்பனவே உண்மையானவை. *அருளுக + என்றான், இருக்க + என்று, தருக + என்னவே, எழுக + என்றாள்* என்பவற்றில் நிலைமொழி *அகர ஈறு* மறைந்துள்ளது. இத்தகைய புணர்ச்சி தமிழ் இலக்கண நூல்களில் இடம்பெறாததால், *அருளுகு, இருக்கு, தருகு, எழுகு* என்று *குகர* ஈறாக வீரமாமுனிவர் கருதுகிறார். ஆனால் *ககர* விகுதி பெற்ற வியங்கோள் வினையே இங்கு இடம்பெற்றுளது.

தொன்னூல் விளக்கம் கூறியவற்றுடன் *மினோ (உண்மினோ)* எனும் விகுதியைச் சேர்த்துச் **செந்தமிழ் இலக்கணம்** கூறுகிறது. இதில் *(இன்+ஓ) 'ஓ'* நயத்தல் உணர்வைத் தருகிறது.

தொன்னூல் விளக்கம் (115) **தொல்காப்பியத்தை** ஏற்று *ஈ, தா, கொடு* எனும் ஏவல் வினைச்சொற்கள் வழங்கப்பெறுதற்கான இடங்களைக் கூறுகிறது.

ஈதா கொடுவெனு மூன்று முறையே
யிழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை

கொடுந்தமிழ் இலக்கணம் *சொல்லு, செய்* போன்ற வினைப் பகுதிகள் ஏவல் ஒருமையை உணர்த்தும் என்றும் *உம்* விகுதி மரியாதை ஒருமை ஏவலையும் *கொள்* விகுதி பன்மை ஏவலையும் உணர்த்தும் என்றும் கூறுகிறது. மேலும், இந்நூலில் *சொல்லுகிறது, செய்கிறது* போன்ற முற்றுக்களிலிருந்து *சொல்லு, செய்* போன்ற சொற்கள் உருவாகின்றன என்பதையும் முனிவர் குறிப்பிடுகிறார்.

சொல்லும், வாங்கும் - மரியாதை ஒருமை ஏவல்
சொல்லுங்கொள், படியுங்கொள் - பன்மை ஏவல்

உம் விகுதி பன்மைக்கு உரியது. இது மரியாதை ஒருமையில் வழங்கிய நிலையில், பன்மை விகுதி *கள்* இணைக்கப்பெற்றுப் பன்மையில் வழங்கலாயிற்று. *கள்* என்பதிலுள்ள அகரம் மகரத்தின் செல்வாக்கினால் *ஒகரம்* ஆகியுள்ளது.

வியங்கோள் வினை

தொன்னூல் விளக்கம் (116) *க, ய, ர்* மூன்று விகுதிகளையும் பெற்று வியங்கோள் வினை அமைதலைக் கூறுகிறது. மேலும், வாழிய எனும் வியங்கோள் வினையிலுள்ள யகரம் கெட்டு வருதலையும் குறிப்பிடுகிறது.

வியங்கோ ளியலும் விகுதிக் கவ்விய
யவ்வொடு ரவ்வொற்று மிவையெங்கு மேற்பன
வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
யேகலு முரித்தஃ தேகினு மியல்பே *(116)*

''வாழியென்னும் வியங்கோளீற்று யகரங்கெட்டு வாழியென வரின் வல்லின மிரட்டா'' என முனிவர் உரைவிளக்கம் தருகிறார்.

வீரமாமுனிவர் உரையில்,

> ''ஒரோவிடத்திவ்விகுதி வியங்கோள் வினைக்குமாம்'', என்று கூறி, **சீவகசிந்தாமணி, கம்பராமாயணம்** ஆகியவற்றிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். ''கம்பன்- ஆயிர மாதர்க்குள்ள வறிகுறி யுனக்குண்டா கென்றேகினன். **சிலப்பதிகாரம்** - பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி என்பதில், *உண்டாகு - சுரக்கு,* இவை உண்டாக சுரக்க என வியங்கோளாய் வந்தவாறு காண்க.

என்று உரைக்கிறார்.

வாழ்க, சிறக்க, எழுக, துணிக, செய்க, வாழிய, காணிய, வாழியர், காணியர், வாழி எனும் சொற்களை எடுத்துக்காட்டி, *க, ய, இ, இய, இயர்* ஆகியவற்றை வியங்கோள் விகுதிகள் என்று முனிவர் **கிலாவிஸில்** கூறுகிறார். மேலும், '*வசியும் வளனுஞ் சுரக்கென் றேகினான்*' எனும் **சிலப்பதிகார** அடியை எடுத்துக்காட்டி, இதில் *குகரம்* வியங்கோள் விகுதியாக வருகிறது என்கிறார். *கு* விகுதி உடன்பாட்டிலும் *அற்க* விகுதி எதிர்மறையிலும் வியங்கோள்வினையில் அமைதலையும் சுட்டுகிறார்.

'அருளுகு, இருக்கு, தருகு என்பன ஒருமைக்கேவலாம். *எழுகு* பன்மைக் கேவலாம்' என வீரமாமுனிவர் *குகர* விகுதியை எடுத்துக்காட்டுடன் **கிலாவிஸில்** விளக்குகிறார்.

முனிவர் **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** ஏவல் வினைக்குள் வியங்கோளை (optative) அடக்கியுள்ளார்.

> தமிழர்கள் குறிப்பிட்ட தொடர்களைக் கொண்டு வியங்கோள் கருத்துக்களைச் சிறப்பாக விவரிக்கின்றனர். எனினும் அவர்களுக்குச் சரியான வியங்கோள் வினைகள் இல்லை.

என்று கூறும் வீரமாமுனிவர்

> வியங்கோள் வினைச்சொற்கள் தொடரில் பயன்படுதலால் அவற்றைத் தொடரியலில் விளக்குவேன்.

என்றும் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிட்டவாறே வியங்கோள் வினைச்சொற்களின் விளக்கம் பின்னர்த் தொடரியலில் அடக்கப்பட்டுள்ளது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் வியங்கோள் வினையைத் தொடரியலில் தனித்தலைப்பில் விவரிக்கிறார்.

தமிழர்கள் *ஆகிறது* எனும் வினையிலிருந்து தோன்றிய *ஆக* எனும் வினையெச்சத்தை *ஆக* அல்லது *கடவது* அல்லது *ஆகக் கடவது* அல்லது *கடவதாக* எனும் சொற்களைச் சேர்த்துப் பயன்படுத்துகின்றனர்.

1. எதிர்கால வினையுடன் மேற்கண்ட சொற்களைச் சேர்க்கின்றனர்.

   எ-டு. செய்வேனாக, செய்வாயாக, செய்வேனாகக் கடவது.

   செய்வது, செய்ய எனும் சொற்களுடன் இச்சொற்களை இணைத்துக் கூறுகின்றனர்.

   எ-டு. செய்வதாக, செய்யதாகக் கடவது, செய்யக் கடவது, செய்யக் கடவதாக.

2. இருக்க எனும் வினையெச்சத்துடன் இச்சொற்களைச் சேர்க்கின்றனர்.

   எ-டு. செய்திருக்கக் கடவதாக.

செய்தது எனும் இறந்தகால வினைமுற்றுடன் இச்சொற்களைச் சேர்க்கின்றனர்.

எ-டு. செய்ததாகக் கடவது.

இருந்தது எனும் இறந்தகால வினைமுற்றுடன் இச்சொற்களைச் சேர்க்கின்றனர்.

எ-டு. நீயதைக் கேட்கும்போது நானுங் கூடக் கேட்டிருந்ததாகக் கடவது.

இவ்வாறு **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** வீரமாமுனிவர் வியங்கோள் வினையை விவரிக்கிறார்.

செயப்பாட்டு வினை

'எழுத்தெனப்படுப,' 'வினையெனப்படுவது' என்பன போன்ற *படுவிகுதி* பெற்ற செயப்பாட்டு வினைச்சொற்கள் **தொல்காப்பிய** மொழியில் இடம்பெற்றபோதிலும் அந்நூல் செயப்பாட்டு வினைக்கென்று தனி அமைப்பு இருத்தலை விவரிக்கவில்லை. பிற்கால நூல்களுள் **இலக்கணக்கொத்து** விவரிக்கிறது. பிற நூல்கள் **தொல்காப்பியத்தை** வழிமொழிகின்றன. தற்காலத்தமிழிலும் பேச்சுவழக்கில் செய்வினையே செயப்பாட்டுவினையாகவும் பயன்படுத்தப் பெறுகிறது. மொழிவழக்கில் பயின்று வராமைபற்றி இலக்கண நூல்கள் தனிச் சொல்லமைப்பை விவரிக்க வில்லை.

செய்வினைச் சொற்கள் செயப்பாட்டு வினையாக வரும் என்பதனைத் **தொல்காப்பியம்** வினையியலில் (46),

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே

என்று கூறுகிறது. பிற தமிழ் இலக்கண நூல்களும் **தொல்காப்பியத்தை** வழிமொழிகின்றன.

தொன்னூல் விளக்கத்தில் வினைச்சொல்லின் வகைகளைக் கூறுமிடத்து, *'தின்னப்பட்டான்-செயப்பாட்டுவினை'* எனும் செய்தியை உரையில் முனிவர் குறிப்பிடுகிறார்.

> இம்மொழியில் செயப்பாட்டுவினைக்கென்று வினைகள் இல்லை. படுகிறது (suffer) எனும் சொல் சேர்க்கப்பட்டுச் செயப்பாட்டுவினைச் சொற்கள் உருவாக்கப் பெறுகின்றன. தமிழர்கள் செய்வினைச் சொற்களையே செயப்பாட்டு வினைகளாக வழங்குகின்றனர்.

என்று **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** (பக்கம் 59) கூறும் முனிவர், *'என்னா லிது முகிக்கப்பட்டது, சொன்னது போதும், அறிந்த ஞாயம், செய்த*

வேலை என்பன போன்றவற்றைச் சான்று காட்டுகிறார். முடிக்கப்பட்டது என்பதனை அவர் முகிக்கப்பட்டது என்று கூறுகிறார்.

தமிழர்கள் *பெறுகிறது* எனும் சொல்லிலிருந்து *தோன்றிய பெறு, உண்கிறது* எனும் சொல்லிலிருந்து தோன்றிய *உண்* ஆகிய வினைகளைச் சேர்த்துச் செயப்பாட்டுவினைகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் முனிவர் குறிப்பிடுகிறார்.

எ-டு. *அறியப்பெற்ற காரியம், அறையுண்டேன், அறையுண்டாய், அறையுண்டான்.*

படு, பெறு இரண்டும் *செய* வாய்பாட்டுச் சொற்களுக்குப் பின்னும் *உண்* என்பது முதனிலைத் தொழிற் பெயர்ச் சொற்களுக்குப் பின்னும் வருகின்றன.

எ-டு. படிக்கப்படுகிறது, படிக்கப்பெறுகிறது. கொலையுண்ட.

பெயரெச்சம்

செயலும் காலமும் தோன்றி இடமும் பாலும் தோன்றாது, அறுவகைப் பெயர்களோடு பொருந்துவது பெயரெச்சம். இப்பெயரெச்சம் *செய்த, செய்கிற, செய்யும்* எனும் வாய்பாடுகளில் முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வுக் காலங்களில் வரும் என்பது **தொன்னூல் விளக்கச்** (117) செய்தி.

செய்து செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரு
மெஞ்ச நிற்பது பெயரெச் சம்மே **(நன்னூல், 340)**

காலமும் வினையுந் தோன்றிப் பாறோன்றாது
வினைகொள் ளுமது வினையெச் சம்மே **(அகத்தியம்)**

எனும் *நன்னூல், அகத்திய* நூற்பாக்களை மேற்கோளாகக் காட்டும் முனிவர் பெயரெச்ச வாய்பாடுகளை நூற்பாவில் அமைக்கவில்லை.

எச்சமே தொழில்பொழு தென்றிவை தோன்றி
யிடம்பா றோன்றா தெஞ்சிய வினையென
விவற்றுட் பெயர்சேர்ந் தியலும்பெய ரெச்சம்
வினையொடு புணர்வது வினையெச் சம்மே
(தொன்னூல் விளக்கம், 117)

செய்யும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் *செய்யு, செய்ம்* எனவும் வரும் என்றும் *செய்யுந்து* எனச் செய்யுளில் வரும் என்றும் **தொன்னூல் விளக்கம்** (118) கூறுகிறது.

உம்மீற்ற எச்சத் திறு மீற்றய
லுயிரு முயிர்மெய்யு மொழிதலாஞ் செய்யுட்கு
உம்முந் தாகலு மொக்கு மென்ப

தொன்னூல் விளக்கச் செய்தியுடன், *இய விகுதி* பெற்ற சொற்கள் இறந்தகாலப் பெயரெச்சமாக வருதலையும் *அறிபொருள், புரிதயை* என்பன போன்று வினைப் பகுதிகள் பெயரெச்சமாக வருதலையும் **செந்தமிழ் இலக்கணம்** கூறுகிறது. இவ்வகைச் சொற்கள் *இனேன்* எனும் ஈற்று இறந்தகால வினைமுற்றுக்களிலிருந்து தோன்றுகின்றன. என்பது முனிவர் கருத்து.

கிறது அல்லது *க்கிறது* எனும் நிகழ்கால விகுதிகளைப் பெற்ற வினைமுற்றுக்களிலிருந்து *'து'* என்பதை நீக்கி *ஆகிற, போகிற, போற* என்பன போன்ற நிகழ்காலப் பெயரெச்சங்கள் ஆக்கப்படுகின்றன. *ஆனேன், போனேன், பட்டேன், படித்தேன்* என்பன போன்ற வினை முற்றுக்களிலிருந்து *ஏன்* விகுதியை நீக்கி, அகரத்தைச் சேர்த்து *ஆன, போன, பட்ட, படித்த* என்பன போன்ற இறந்தகாலப் பெயரெச்சங்கள் ஆக்கப்படுகின்றன. அஃறிணைப் படர்க்கை வினைமுற்றுக்கள் (செய்யும், இருக்கும்) எதிர்காலப் பெயரெச்சங்களாகவும் வழங்கு கின்றன. இவ்வாறு வீரமாமுனிவர் **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** கூறுகிறார்.

வினைமுற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு வகை வினைச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன என்பது முனிவரது கொள்கை.

வினையெச்சம்

வீரமாமுனிவர் **செந்தமிழ் இலக்கணத்திலும் கொடுந்தமிழ் இலக்கணத்திலும்** செய வாய்பாட்டு வினை யெச்சத்தையும் செய்து முதலிய பிற எச்சங்களையும் வேறுபடுத்தி விவரிக்கிறார். செய வாய்பாட்டுச் சொற்களை infinitive என்றும் ஏனையவற்றை gerund என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் **தொன்னூல் விளக்கத்தில்** வினையெச்சம் எனும் ஒருவகையே கூறப்பட்டுளது. **கிலாவிஸிலும் தொன்னூல் விளக்கத்தில்** போன்றே காணப்படுகிறது.

செயலும் காலமும் தோன்றி இடமும் பாலும் தோன்றாது, வினைமுற்றுக்களோடு பொருந்துவது வினையெச்சம் எனப்படும் (**தொன்னூல் விளக்கம்**, 117).

தொன்னூல் விளக்கம் வினையெச்ச விகுதிகளைப் பட்டியலிடுகிறது.

வினையெச் சங்கொள் விகுதி இஉ
உவ்வோ டெனவும் ஊபுஆ விறப்பே
அஇரு கருத்தா வணையி னிகழ்வே
யொருகருத் தாவு மோரிடத் திரண்டு
மியைஅ வன்றி இல்இன் இயஇயர்
வான்பான் பாக்கு வரும்பொழு தாம்பிற

(தொன்னூல் விளக்கம் 119)

வினையெச்சம் *இ, உ, என, ஊ, பு, ஆ, ய், அ, இல், இன், இய, இயர், வான், பான், பாக்கு* ஆகிய விகுதிகளைப் பெற்று அமையும். மேலும், தொழிற்பெயருடன் *உம்* விகுதி பெறுதல் (*செய்தலும்*), செய வாய்பாட்டுடன் *கு* விகுதி பெறுதல் (*செயற்கு*), *ஆல், கால், ஏல், ஏனும்* ஆகிய விகுதிகள் இணைந்து வினையெச்சங்கள் அமைதல் அவை வருகிற காலம் ஆகியவற்றையும் **தொன்னூல் விளக்க** உரையில் (119) முனிவர் விவரிக்கிறார்.

முந்தைய தமிழ் நூல்கள் வினையெச்சங்களைச் சொல் அமைப்பாகிய வாய்பாடுகளாகக் கூறுகின்றன. ஆனால் வீரமாமுனிவர் விகுதிகளின் அடிப்படையில் விவரிக்கிறார். தொல்காப்பிய, பிற்கால இலக்கண உரையாசிரியர்களும் விகுதிகளைப் பிரித்துக்காட்டுகின்றனர்.

வான், பான், பாக்கு ஆகியவற்றில் *வ், ப்* இரண்டும் எதிர்கால இடைநிலைகள்; *ஆன், ஆக்கு* என்பன வினையெச்ச விகுதிகள்.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கு வினையெச் சம்பிற
வைந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்

எனும் நன்னூல் (340) நூற்பாவைச் **சொந்தமிழ் இலக்கணம்** எடுத்துக் காட்டி வினையெச்சத்தை விவரிக்கிறது.

வினையெச்ச வாய்பாடுகளுள் *செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென* எனும் ஐந்தும் இறந்தகாலத்தை உணர்த்தும்; *செய* நிகழ்காலத்தை உணர்த்தும். *செயின், செய்யிய, செய்யியர். வான், பான், பாக்கு* ஆகியன எதிர் காலத்தை உணர்த்தும் என்று கூறுகிறார்.

வருதல், தருதல் எனும் வினைச்சொற்களின் ஏவல் வடிவமான *வா, தா* என்பனவற்றிலிருந்து *செய்பு* வாய்பாட்டுச் சொற்கள் அமையா; ஆனால் *வரு, தரு* என்பனவற்றிலிருந்து அமையும். *செய்யா* வாய்பாடு எதிர்மறை வடிவம். இது உடன்பாட்டில் பயன்படுத்தப்படுகிறது. *எழா-எழுந்து, உண்ணா-உண்டு, கூறா-கூறி.*

செய்து வாய்பாட்டிற்குப் பதிலாகச் *செய்யூ* பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இது நேர்த்தியானது அன்று. *செய்தென* வாய்பாடு *செய்து* வாய்பாட்டின் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் *என எனும்* சொல் ஒப்புமைப் பொருளில் வருகிறது.

எ-டு. *வந்தென-வந்ததுபோல; படித்தென-படித்தது போல.*

லகர ஈற்றுத் தொழிற்பெயருடன் *உம்* சேர்ந்து *சொல்லலும், செய்யலும், படித்தலும்* போன்ற இறந்தகால வினைச்சங்களை உருவாக்குகின்றன.

செய்து, செய்பு எனும் *உகர* ஈற்றுச் சொற்களுடன் *உளி, உழி* எனும் சொற்கள் சேர்ந்து *செய்துளி, செய்துழி, செய்புளி, வந்துளி* போன்ற கூட்டு வினையெச்சங்கள் உருவாகின்றன. இவை *செய்தபோது, வந்தபோது* எனும் பொருளை உணர்த்துகின்றன.

செய்து வாய்பாட்டுச் சொற்களுடன் *அற்று* எனும் இடைச்சொல் சேர்ந்து "போல்" எனும் பொருளில் வருகிறது. *ஆடியற்று ஆடினது* போன்றது. வந்தற்று-வந்தது போன்றது. இவ்வாறு செந்தமிழ் இலக்கணத்தில் வினையெச்சங்களை விவரிக்கிற வீரமாமுனிவர்,

தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று (குறள்.208)

எனும் குறளை எடுத்துக்காட்டுகிறார். இதில் *உறைந்தற்று* என்பது *உறைந்ததுபோல* எனும் பொருளில் வருகிறது என்கிறார். *உறைந்து* எனும் சொல் *செய்து* வாய்பாட்டு வினையெச்சம் என்பது முனிவரது கருத்து. ஆனால், இச்சொல் *செய்து* வாய்பாட்டில் உள்ள வினைமுற்றாகும். இத்தகைய சொற்களைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாம்.

செயின் வாய்பாட்டு வினையெச்சங்கள் நிபந்தனைப் பொருளில் எதிர்காலத்தில் வருகின்றன. *என்றால், என்னில், எனில், எனின், செய்தால், செய்யின்* எனப் பல வடிவங்கள் நிபந்தனை எச்சமாக வருகின்றன. இவற்றுள் *இல்* அல்லது *இன்* (*செய்யில், செய்யின்*) பரவலாகப் பயின்று வருகின்றன. *ஆல்* அல்லது *ஏல்* என்பனவும் நிபந்தனைப் பொருளில் வருகின்றன.

எ-டு. *செய்கின்றேனால், செய்கின்றேனேல், செய்தனையேல், செய்குவனேல், செய்கின்றவால், செய்தவால்.*

நிபந்தனைக்குரிய *செயல்* எதிர்காலத்தில் நிகழுதலால் இவற்றை எதிர்கால வினை என்று கூறுகின்றனர். *வான், பான்* என்பனவற்றிலுள்ள *ஆன்* என்பது *பால்* விகுதியாகும். இது மூவிடங்களிலும் வந்து

எச்சமாகிறது. இவ்வாறு வீரமாமுனிவர் வினையெச்சங்களை விரிவாகச் **செந்தமிழ் இலக்கணத்தில்** விவரிக்கிறார்.

செய்வான், செய்பான் வாய்பாட்டுச் சொற்கள் மலையாளத்தில் வழக்கிலுள்ளன.

செய வாய்பாட்டு வினையெச்சங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் வருதலை **நன்னூலில்** படிக்கிறோம் என்று கூறும் முனிவர், 'பின்பதைக் காண வம்மின்' என்பதனை எடுத்துக்காட்டுகிறார்.

செய வாய்பாட்டு வினையெச்சம் கட்டளையாக அன்றி வேண்டுதல் பொருளில் ஏவலாகச் செந்தமிழில் வருகிறது; இச்சொல் ஐம்பால் மூவிடங்களிலும் வரும் என்று பவணந்தி **நன்னூலில்** கூறுகிறார் என்று வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார். எ-டு.

> *பொறுக்க தீயை நான், நீ பெறுக, நான் வாழ்க, நீ வாழ்க, நின்றந்தை வாழ்க, சிறக்க நின் புகழே, நீரே பொலிய. செயவாய்பாட்டு வினையெச்சங்களுடன் 'ர்' சேர்ந்து வாழியர் போன்ற ஏவல் சொற்கள் அமைதலையும் முனிவர் குறிப்பிடுகிறார்.*

வீரமாமுனிவர் வியங்கோள் வினை வடிவங்களும் **செய** வாய்ப்பாட்டு வினையெச்ச வடிவங்களும் ஒத்து இருத்தல்பற்றி இரண்டையும் ஒன்றெனக் கருதுகிறார். தமிழ் வியங்கோள் சொற்கள் இலத்தீன் முதலிய மேலைநாட்டுச் சொற்களிலிருந்து வேறுபடுதலால் இவ்வாறு கருதுகிறார்.

வியங்கோள் வினையும் ஏவலில் ஒரு வகையே. இவ்வினை ஏவலைப் போன்று கட்டளையாக அன்றி, வேண்டுதல் (அன்பாக ஏவுதல்) பொருளில் வருகிறது.

தொல்காப்பியம் வியங்கோளை 'ஏவல் கண்ணிய வியங்கோள்' என்று ஒருங்கிணைத்தே கூறுகிறது.

செந்தமிழ் இலக்கணம், நன்னூல் நூற்பாவை மேற்கோள் காட்டி, **நன்னூலின்** வினையெச்சங்கள் யாவற்றையும் விளக்குகிறது.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் (பக்.54-55) முனிவர் *வணங்கினேன், உண்டேன்* போன்ற முற்றுக்களிலிருந்து *வணங்கி, உண்டு* என்பன போன்ற வினையெச்சங்கள் உருவாதலைக் கூறுகிறார்.

வினைக்குறிப்பு

> *வினைக்குறிப் பென்ப வினைபோல் விகுதி*
> *பெற்றிடம் பாற்கும் பெயர்ப்பகு பதமே*

(தொன்னூல் விளக்கம் 123)

> வினைக்குறிப்பாமாறுணர்த்துதும். மேலே பெயர்ப்பகு பதங்களை விளக்கியவிடத்தில் அவையெலா மற்றைப் பெயர்களைப் போலே வேற்றுமை யுருபு பெறுவனவன்றியே வினையைப் போல நடப்பனவாமெண்பதாயிற்று; அங்ஙன நடப்புழி வினைக்குறிப்பெனப்படும். இவையே பெயரிய லிசைத்த சொல்லாயினும் வினையின் றொழிலைக் குறிப்பனவும் வினையைப் போல நடப்பனவுமாகையில் வினையை விளக்கிய முறையெனக் கொள்க. வினைக் குறிப்பெல்லா மூவிடத்தைம்பால் வினைச்சொல் விகுதியைப் பெற்று முடியும். (உ-ம்) பூணினேன்-யான், பூணினேம் - யாம், பூணினை - நீ, பூணினார் - அவர், பூணிற்று - அது, பூணின - அவை, என வரும். பொருள் முதலாறு காரணங்களால் வரும் பெயர்ப்பகுபதமெல்லாம் வினைக்குறிப்பாக நடப்பனவா மெனக் கொள்க. அன்றியும், வினைக்குறிப்பு வினையைப் போலப் பெயர் முதலாயின வேற்று மற்றொன்றை வேண்டாது நிற்பது வினைக்குறிப்பு முற்றெனப்படும்.

இவ்வாறு **தொன்னூல் விளக்கத்தில்** உரைக்கும் வீரமாமுனிவர் வினைக்குறிப்புச் சொற்களுக்குக் குறைவினைகள் (defective verbs) என்று தலைப்பிட்டுள்ளார்.

செந்தமிழ் இலக்கணத்தில் வினைக்குறிப்புச் சொற்களை முனிவர் பகுபதப்பெயர்கள் (appellative nouns) என்று கூறுவதோடு, பெயர் இலக்கணத்துள் அடக்கி விவரிக்கிறார். *வில்* எனும் சொல் ஒரு பொருளை (object) உணர்த்துவதனால் பகாப்பதம். ஆனால் *வில்லான்* எனும் சொல் *வில், வில்லை உடையவன்* எனும் இரு பொருள்களை (objects) உணர்த்துவதனால் பகுபதம் எனப்படுகிறது. வினைக்குறிப்புச் சொற்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் அறுவகைப் பெயர்களிலிருந்து உருவாகின்றன என்று விளக்குகிற வீரமாமுனிவர் ‘பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின் வருபகு பதமே’ எனும் **நன்னூல்** நூற்பாவை மேற்கோள் காட்டி, இவ்வகைச் சொற்கள் தமிழ்மொழிக்கே சிறப்பாக உரியவை; வேறு எம்மொழியிலும் காணப்படாதவை என்று கூறுகிறார்.

வினைக்குறிப்புச் சொற்கள் அமைப்பளவில் பெயர்ச்சொற்களாகவும் பயன்பாட்டளவில் வினைச் சொற்களாகவும் இருத்தலால், அவற்றைப் பகுபதப் பெயரிலிலும் வினைக்குறிப்புப் பகுதியிலும் முனிவர் கூறுகிறார் (பெ.சுயம்பு, **இலக்கண நூற் களஞ்சியம்**, ப.217)

குறிப்புவினைச் சொற்கள் வினையியல்புகளை விடவும் பெயரியல்புகளையே மிகுதியாகப் பெற்றுள்ளன. இச்சொற்கள் கால இடைநிலைகளையும் எதிர்மறைக் குறியீடுகளையும் ஏற்கா; இவை ஏவலாகவும் வியங்கோளாகவும் அமையா; பிறவினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் வருதல் இல்லை. பெரும்பான்மையான குறிப்பு வினைச் சொற்கள் வினையெச்சம், வினையடைகளைத் தழுவுதல் இல்லை; ஆனால் அவை வேற்றுமை உருபுகளை ஏற்றுப் பெயரடைகளையும் பெயரெச்சங்களையும் தழுவுகின்றன. எனினும் பயனிலையாக வருதல், பால் - எண் விகுதிகளைப் பெறுதல் ஆகிய இயல்புகளைப் பெற்றிருப்பதனால் குறிப்பு வினைச் சொற்களாகக் கருதப்படுகின்றன (பெ. சுயம்பு, **இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி**, ப.106).

தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்கள் இவ்வகைச் சொற்களில் வினைகளுக்குரிய குறிப்புக்கள் சில உள்ளமையால் வினைக் குறிப்பு என்று சுட்டுகின்றன.

எதிர்மறை வினை

எதிர்மறை வினைகளில் இடைநிலை இன்றி விகுதிகளே எதிர்மறையைக் காட்டுகின்றன. *ஏன், ஏம், ஓம், ஆய், ஈர், ஆன், ஆள், ஆர், ஆ, ஆது, அ* எனும் மூவிட ஐம்பால் விகுதிகளும் எதிர்மறையை உணர்த்துதலைத் **தொன்னூல் விளக்கம்** (112) கூறுகிறது. வீரமாமுனிவர் இவ்வகைச் சொற்கள் பகுதி + விகுதி என அமைதலைக் குறிப்பிடுகிறார்.

எ-டு. *நடவேன், நடவேம், நடவோம், நடவாய், நடவீர், நடவான், நடவாள், நடவார், நடவா, நடவாது, நடவாவன.*

ஆது என்பதில் ஆ எதிர்மறை இடைநிலை; து விகுதி.

நடவாவன என்பதில் ஆ எதிர்மறை; அன் சாரியை; அ விகுதி. நட - ஆ - அன் - அ.

நடவாவன எனும் சொல் வினையாலணையும் பெயராக வருகிறது. இதில் *நடவா* எதிர்மறை வினை. இவ்வினைச் சொல்லிலிருந்து பெயர் ஆக்கப்பெற்றுள்ளது.

தமிழில் நெடில் விகுதிகள் எதிர்மறையையும் உணர்த்துகின்றன. இவை இடம்பெறும் சொற்களில் எதிர்மறையை உணர்த்தும் வடிவம் காணப்படவில்லை. எனவே இவற்றில் உருவிலி உருபன் (zero morph)

உள்ளது எனலாம் (பெ.சுயம்பு, **தமிழ்மொழி அமைப்பும் வரலாறும்,** ப.203).

ஏல், அல், அன்மோ, அற்க என்பன ஒருமை ஏவலிலும் *ஆமின், அன்மின், அற்பீர்* என்பன பன்மை ஏவலிலும் எதிர்மறை விகுதிகளாகத் **தொன்னூல் விளக்கத்தில்** (114) காணலாம்.

எதிர்மறை யேவற் கேலே அல்லே
அன்மோ அற்க வாகு மொருமை
ஆமின் அன்மின் அற்பீர் பன்மை

எ-டு. *செய்யேல், செய்யல், செய்யன்மோ, செய்யற்க.*
செய்யாமின், செய்யன்மின், செய்யற்பீர்.

ஆமல், ஆது, ஆமை, ஆ எனும் விகுதிகள் எதிர்மறை வினையெச்ச விகுதிகள் ஆகும் (**தொன்னூல் விளக்கம்** 121).

எ-டு. செய்யாமல், செய்யாது, செய்யாமை, செய்யா.

இடைச்சொல்

வீரமாமுனிவர் **தொன்னூல் விளக்கத்தில்** இடைச்சொல்லியல் எனும் இயலை அமைத்து எட்டு நூற்பாக்களில் இடைச்சொற்களை விவரிக்கிறார்.

இடைச்சொற் றனிநிலை யின்றி முன்பின்
வினைபெயர் சேர்ந்து வேற்றுமை சாரியை
வினையொப் புருபுகளும் விளங்குதம் பொருளவு
மிசைநிறைப் பனவு மசைநிறைப் பனவுங்
குறிப்பு மெனவெண் கூற்றவை யென்ப
(தொன்னூல் விளக்கம், 130)

இடைச்சொல் எட்டு வகைப்படும் என்பது நன்னூலைத் தழுவிய கொள்கையாகும். வீரமாமுனிவர் உரையில்,

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுக
டத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்

எனும் நன்னூல் நூற்பாவைத் தம் கொள்கைக்கு அரணாகச் சுட்டுகிறார்.

வீரமாமுனிவர் *ஏ, ஓ, என, உம்* ஆகியவற்றை ஒவ்வொரு நூற்பாவில் விவரித்துவிட்டு, ஏனையவற்றை நூற்பாவிலும் உரையிலுமாக விளக்குகிறார். *அத்து, அந்தில், அன்று, அம்ம, ஆங்கு, அரோ, ஆம், ஆல், இட்டு, இகும், குரை, கா, இருந்து, இன்று, ஒரும், சின், தம், தான், நின்று, தில், பிற, பிறக்கு, மன், மா, மன்னோ, மாது, யா, மாதோ, போலும், போம், இத்தை, அத்தை, யாழ, இக, மதி, மான், ஆர், மோ, மியா, வாழிய, அன்னோ, கொல்லோ, ஓஒ, ஐயோ, ஏஎ, சீசீ, கூகூ, ஐயையோ, ஆஅ, அம்மம்மா* ஆகிய இடைச்சொற்கள் **தொன்னூல் விளக்கத்தில்** (137) விவரிக்கப்படுகின்றன.

இச்சொற்களுள் *அத்து* முதல் *போம்* ஈறாக உள்ளவை மூவிடங்களிலும் பொதுவாக வரும் அசைச்சொற்கள் எனவும், இத்தை முதல் வாழிய ஈறானவை முன்னிலையில் மட்டும் வரும் அசைச்சொற்கள்

எனவும் கூறப்பெற்றுள்ளன. அன்னோ முதலாயின வெவ்வேறு குறிப்புப் பொருளில் வருகின்றன.

எ-டு. அம்மருங்கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ
ஐயோவென் செய்வேன்
ஓஒ, ஐயோ
} இரக்கம்

ஏஎயிவளொருத்தி பேடியோ வென்றார்
சீசீயவன் கெட்டான்
} இகழ்ச்சி

கூகூ கொன்றான்
ஐயையோ திருடன் வந்தான்
} அச்சம்

ஆஅவிதனை யெப்படி யறிந்தான்
ஓஒ நன்றாய்ச் சொன்னான்
அம்மம்மா வெப்படிப்பட்ட கூத்து
} அதிசயம்

தொல்காப்பிய, நன்னூல் நூற்பாக்களை மேற்கோள்காட்டும் முனிவர், முந்தைய இலக்கண உரையாசிரியர்களைத் தழுவிச் சான்றுகளை எடுத்துக்காட்டுகிறார்.

செந்தமிழ் இலக்கணம் இடைச்சொற்களை நிலைச்சொற்கள் அல்லது உணர்ச்சிமொழிகள் (particles or interjections) என்று கூறி, *ந, ஆல், ஒரும், ஏ, அரோ, அம்ம* எனும் சொற்களையும் சுட்டுகிறது. *நக்குடம், நப்பொருள், நவ்வமிர்தம்* எனும் சொற்களிலுள்ள நகரத்தை இந்நூல் இடைச்சொல் எனக் கூறுகிறது. *நக்குடம், நப்பொருள், நவ்வமிர்தம்* என்பவற்றிலுள்ள *நகரம் நல்* எனும் பெயரடையின் ஒலிமாற்ற வடிவமாகும். இஃது இடைச்சொல் அன்று.

செந்தமிழில் பல வகை இடைச்சொற்கள் (particles or interjections) உள்ளன. அவற்றுள் சில பொருள் உடையன. அவற்றுள் ஒன்று *ந*. இதற்கு *நல்லது* என்பது பொருள் என்று முனிவர் கூறுகிறார்.

எ-டு. *நன்னூல், நக்குடம், நப்பொருள், நவ்வகை, நவ்வமர்தம்.*

பொருளில்லாத இடைச்சொற்கள் அசைச்சொல் அல்லது உரையசை எனப்படுகின்றன.

ஆல் எனும் இடைச்சொல் ஓசையை நிறைப்பதாக வருகிறது.

எ-டு. *அவனாலோவெனில், வருமாலோவெனில், கேட்டியால்*

ஒரும் எனும் இடைச்சொல்லும் செய்யுளை நிறைவு செய்கிற அசையாக வருகிறது.

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா. *(குறள்.366)*

ஏ, அரோ, அம்ம, அம்மா, அன்னோ, அன்றே, மாதோ, மன்னோ என்பனவும் பொருளின்றி அசையாக வருகின்றன.

இவ்வாறு **செந்தமிழ் இலக்கணத்தில்** இடைச்சொற்கள் விளக்கப்படுகின்றன.

அசைச்சொற்கள் பெரும்பான்மையும் தமக்குரிய அகராதிப் பொருளை இழந்து உணர்ச்சி மொழிகளாக வந்து நுண்ணிய பொருள் வேறுபாட்டினைத் தருகின்றன. **'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே'** எனும் தொல்காப்பியனார் கருத்து இவ்வுணர்ச்சிப்பொருள் வேறுபாட்டையும், சொல்லாக்க உருபுகளாக அமைந்து சொற்களின் இலக்கணப் பொருளை வேறுபடுத்துதலையும் உணர்த்துகிறது.

உரிச்சொல்

வீரமாமுனிவர் உரிச்சொற்களை அடைமொழிகள் (attributives) என்று கருதுகிறார்.

தொன்னூல் விளக்க உரிச்சொல்லியலில் நான்கு நூற்பாக்களில் உரிச்சொல் இலக்கணம் விவரிக்கப்படுகிறது.

உரிச்சொல் லென்ப வுரியபற் குணசொல்
லாகிப் பெயர்வினை யணைந்து வருமே

(தொன்னூல் விளக்கம், 138)

என உரிச்சொல்லின் வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

உரியெனப்படுவன பலவகைக் குணங்களை யறிவிக்கும் பெயர்ச்சொற்களாம்.

என்பது உரிச்சொல்லுக்குத் **தொன்னூல் விளக்கத்தில்** முனிவர் தருகிற உரை விளக்கம்.

வீரமாமுனிவர் **தொல்காப்பியத்திலும் நன்னூலிலும்** உள்ள உரிச்சொற்களைக் குறிப்பு உரிச்சொற்கள், பண்பு உரிச்சொற்கள், இசை உரிச்சொற்கள் என வகைப்படுத்தி உரையில் விவரிக்கிறார்.

செந்தமிழ் இலக்கணம் இச்சொல்லை 'உரிச்சொல் (a word of property i.e. adjective)' என்று கூறுகிறது. முனிவர், இந்நூலில் உரிசொற்களைப் பின்வருமாறு விவரிக்கிறார்.

> மற்ற இலக்கண நூலில் சில, பல முதலிய பெயரடைகள் உரிச்சொல் எனக் கூறப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் தமிழர்கள் உரிச்சொல் என்பதனைப் பெயரடைகளுக்கும் வினையடைகளுக்கும் பொதுவான சொல்லாகக் கூறுகின்றனர்.
>
> நனி, தவ, சால, உறு, கழி, கூர் எனும் சொற்கள் நனி தவத்தோன், உறுதுணை, நனிச்சொன்னான், சாலக்கொண்டான் எனப் பெயரோடும் வினையோடும் வருகின்றன.

கம்பனுடைய இராமாயணத்தில், 'கல்லும் புல்லுங் கண்டுருகப் பெண் கனிநின்றாள்' எனக் கனி எனும் சொல் 'இனிமையாக' எனும் பொருளில் வினையடையாக வருகிறது.

மற்றொரு புலவர் *கடி* எனும் சொல்லைப் பெயரடையாகவும் வினையடையாகவும் ஒரே அடியில் பயன்படுத்தியுள்ளார்.

கடி நுனை பட கழிமாரி
கடிவிட விரைவின் மாய்ந்தார்

பெயரடைகள் பெரும்பான்மையும் இடுகுறிப் பெயர்களிலிருந்து (substantive) உருவாக்கப்படுகின்றன.

என்று கூறுகிற வீரமாமுனிவர் சில அமைப்பு முறைகளை விவரிக்கிறார்.

1. வேற்றுமை உருபேற்கும் வடிவங்கள் - நிழலிற்சோலை, பேராச் சிறப்பிற் புகார் நகரத்துக் கோவலன்

2. *மை* ஈற்றுப் பண்புப் பெயர்கள் - அரும்பொருள், அரிய பொருள் (அருமை)

பசுங்கிளி, பசியகிளி, பாசிலை, (பசுமை)

சிறுபொருள், சிறியபொருள், சீரடி, சிற்றடி (சிறுமை)

காரெலி, கரும்பூனை, கரியமுகம் (கருமை)

அரும்பொருள், அரியபொருள், ஆரெழில் (அருமை)

புதுக்கலம், புதியகலம், புத்தரிசி (புதுமை)

நெடுந்தெரு, நெடிய தெரு (நெடுமை)

கொடுங்கோல், கொடிய மனம் (கொடுமை)

பண்புப்பெயர்கள் பற்றிய இச்செய்திகளுக்கு விதிகள் அமைக்க இயலாது. முந்தைய ஆசிரியர்கள் வழங்கிய முறையைப் பின்பற்றவேண்டும் என்று பவணந்தி நன்னூலில் கூறுகிறார் எனக் குறிப்பிடும் முனிவர், சொற்களின் பிறப்பு, அவற்றின் பொருளை உணர்ந்து, அவற்றிற்கேற்ப வழங்கவேண்டும். இத்தகைய பெயரடைகள் தனியாக அன்றிப் பெயர்களுடன் சேர்த்தே எழுதப்படுதலால், இவை பற்றி அகராதியிலும் அறிதல் இயலாது எனக் கூறுகிறார்.

தமிழர்கள் பெயரடையை உரிச்சொல் எனக் கூறுகின்றனர் என்று **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** எழுதும் வீரமாமுனிவர் *பல, சில, நல், புது, பொது- அரிய, பெரிய, சிறிய, உரிய, இனிய* எனும் பெயரடைகளை

எடுத்துக்காட்டுகிறார். மேலும், அவர் பெயர்ச்சொற்கள் சில மாற்றங்களுடனும் மாற்றமின்றியும் பெயரடைகளாக அமைதலையும் விவரிக்கிறார்.

1. பெயர்ச் சொற்களின் மகர ஈறு கெடுதல் -

   எ-டு. *ஞானப் போசனம், சுத்தமனசு*
   பெயர்களின் மகர ஈறு 'த்து' என்றும் திரிதல் -

   எ-டு. *புறப்பொருள், புறத்துப்பொருள், முகச்சாயல், முகத்துச்சாயல் சுரப்பாதை, சுரத்துப்பாதை.*

2. பெயர்ச்சொற்களின் *மை* ஈறு கெட்டு *இய* எனும் சொல்லைச் சேர்த்தல் - கொடிய மனசு, அரிய கற்பனை.

3. *து,டு,று* ஈற்றுப் பெயர்களின் மெய் இரட்டுதல்

   எ-டு. *எருத்துப்பாரம், காட்டுவழி, வயற்றுவலி, ஆற்றுமணல்*

4. பெயர்ச்சொற்கள் எவ்வித மாற்றமுமின்றிப் பெயரடைகள் ஆதல்-

   எ-டு. *குளிர்காற்று, கல்வீடு*

5. பெயர்ச்சொற்களோடு ஆன, உள்ள எனும் எச்சங்களைச் சேர்த்தல்-

   எ-டு. *சுத்தமான மனசு, சுத்தமுள்ள மனசு.*

4. வீரமாமுனிவரின் இலக்கணக் கோட்பாடு

வீரமாமுனிவரின் சொல்லிலக்கணக் கோட்பாடு ஏனைய தமிழ் இலக்கணப் புலவர்களின் கோட்பாடுகளிலிருந்து வேறுபடுகிறது. இலக்கணக் கருத்துக்கள் அவற்றை விவரிக்கிற முறை, பின்பற்றுகிற இலக்கண மரபுகள் ஆகியவற்றில் தனித்தன்மையும் புதுமையும் காணப்படுகின்றன.

வீரமாமுனிவர் செய்திகளை விவரிக்கிற முறை முந்தைய தமிழ் இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள முறைகளிலிருந்து மட்டுமன்றி, அவர் இயற்றியுள்ள நூல்களுக்கிடையேயும் வேறுபடுகிறது. அதிகாரம் (பெரும்பிரிவு), இயல் (உட்பிரிவு) ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றுள் அடக்கப்பெற்றுள்ள செய்திகள் முதலியன ஒத்தநிலையில் இல்லை.

அ) கொடுந்தமிழ் இலக்கணமும் செந்தமிழ் இலக்கணமும்

தமிழக மக்களிடம் பழகி, அவர்களைக் கவர்தற்குப் பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ் இரண்டிலும் புலமை பெற்றிருத்தல் மிக இன்றியமையாதது என்பதை வீரமாமுனிவர் மிகச் சரியாகவே உணர்ந்திருந்தார். இதனை அவர் எழுதிய கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் இரண்டின் முகவுரைகள் வெளிப்படையாகவே தெரிவிக்கின்றன.

> கடந்த ஆண்டு உங்கள் சமயப் பிரச்சார ஊழியங்களுக்கு உதவும்பொருட்டுப் பேச்சுத் தமிழ் இலக்கணத்தை வழங்கினேன். இந்த எழுத்துத் தமிழ் இலக்கணமும் அப்பணிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று உறுதி கூறுகிறேன் எழுத்துத் தமிழ் இலக்கணத்தைப் பயிலுதல் ஒரு கடினமான வேலை என்று கூறுதலை நான் மறுத்துரைத்தால் அது போலி நடிப்பாகும். ஆனால் ஊழியம் அதற்கான பரிசினை விரும்புதல் இல்லை. தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களுக்குள்ளேயே மிகச் சிலரே எழுத்துத் தமிழ் (செந்தமிழ்) இலக்கணத்தில் வல்லுநராக உள்ளனர். தமிழில் பக்தி, இயற்கை சார்ந்த

> செழுமையான (richest) இலக்கியங்கள் உள்ளன. தமிழ் நூல்கள் பெரும்பான்மையும் செய்யுள் வடிவங்களிலேயே எழுதப்பெற்றுள்ளன. செய்யுள்களை எழுதவல்ல புலவர்களையும் இலக்கியங்களைக் கற்றவர்களையும் தமிழர்கள் மிகவும் மதித்துப் போற்றுகின்றனர். செய்யுட் கலையில் வல்லுநராதலின்வழி, அவர்களது ஆயுதத்தையே அவர் களுக்கு எதிராகப் பயன்படுத்தி நம் குறிக்கோளில் வெற்றியை அடைய முடியும்.

இவ்வாறு முனிவர் **செந்தமிழ் இலக்கண** முகவுரையில் குறிப்பிடுகிறார்.

புதியவனாக ஒரு நாட்டிற்குச் செல்லும்போது அந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது சீன நாட்டுப் பேரறிஞர் கன்பியூசியஸின் அனுபவமொழி. உரோமாபுரியில் வாழும் போது உரோமாபுரிக்காரனாகவே மாறிவிட வேண்டும் என்பர். எந்த நாட்டில் சென்று தங்குகிறோமோ, அந்த நாட்டுக்காரனாக மாறினால் மட்டுமே அந்நாட்டு மக்களின் அன்பைப் பெற முடியும்; அவர்களும் தானும் வெவ்வேறு இனத்தவர் அல்லர் என்ற நம்பிக்கையை உருவாக்கிட முடியும். இந்த அணுகுமுறை அனைத்து மாந்தருக்கும் பொதுவாக ஏற்புடையது. எனினும் ஒரு கொள்கையை, நம்பிக்கையைப் பரப்பிட விரும்புகிறவர்களுக்கு இத்தகைய அணுகுமுறை மிகவும் இன்றியமையாதது; தவிர்த்து ஒதுக்கிட இயலாதது.

பேச்சுத் தமிழின் அமைப்பினையும் பயன்பாட்டினையும் **கொடுந்தமிழ் இலக்கணம்** விவரிக்கின்றது. இங்கு விவரிக்கப்படுகின்ற பேச்சுத் தமிழ் ஒரு குறிப்பிட்ட கிளை மொழியினரால் பேசப்படுகின்ற *செய்துது (செய்தது), அறிஞ்சேன் (அறிந்தேன்), அடைச்சேன் (அடைத்தேன்)* என்பன போன்ற வழக்குகளை ஏற்கவில்லை. இவற்றை நூலாசிரியர் கொச்சையானவை (barbarous and vulgar) என்று சுட்டுவதோடு, இவற்றைத் தவிர்க்க வேண்டும் என்றும் எச்சரிக்கின்றார். ஆனால் *நாங் (நாம்), நீய் (நீ), பல்லு (பல்), கண்ணு (கன்று)* போன்ற வழக்குகளை ஏற்று, அவை எழுத்து மொழியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்று சந்தி விதிகளையும் விவரிக்கிறார்.

இத்தகைய வழக்குகள் பெரும்பான்மைக் கிளை மொழியினரால் பேசப்படுதலோடு, சிறந்த நடையினவாக மதிக்கப்பெறுவன. எனவே வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் என்பது கொச்சை வழக்குகளைக் குறிக்காமல் பேச்சுத்தகு மொழி (standard spoken language), பொதுமைக்கிளை மொழி (Common dialect) என்ற பொருளையே சுட்டுகிறது.

திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சை போன்ற மாவட்டப் பகுதிகளின் பேச்சு வழக்குகள் இந்நூலுக்குத் தரவுகளாக அமைந்துள்ளன. இப்பகுதிகளிலேயே முனிவரின் ஊழியம் பெரிதும் பயன்பட்டது.

கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் ஆகிய இரண்டிலும் நூல் எழுதப்பெற்ற நோக்கம், விவரிப்பு முறை ஆகியன ஒத்துக் காணப்படுகின்றன. தமிழ் இலக்கண நூல்களுள் **நன்னூலை** முனிவர் பரவலாக மேற்கோள் காட்டுகிறார். எழுத்துத் தமிழையும் பேச்சுத் தமிழையும் ஒப்பிடுகிறார். இலத்தீன், போர்ச்சுக்கீசு போன்ற ஐரோப்பிய மொழிகளின் கூறுகளையும் மேலை நாட்டவரின் புரிதிறனுக்காக ஒப்பிட்டுக் காட்டுகின்றார். சமஸ்கிருதத்தின் இலக்கணச் செய்திகளும் கலைச்சொற்களும் ஓரளவு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஐரோப்பிய மொழியறிஞர்களும் சமய அறிஞர்களும் சமஸ்கிருத அறிவினைப் பெற்றிருப்பர். இந்தியத் தத்துவ ஞானத்தின் தளமாகவும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் சிறந்த வளமாகவும் விளங்குதலே சமஸ்கிருதத்தை ஐரோப்பியர் ஒப்பிட்டுக் கூறுதற்கு முதன்மைக் காரணம் எனலாம். **செந்தமிழ் இலக்கணத்தில்** சில இடங்களில் 'சிலர்', 'வேறொருவர்', 'ஒரு சில ஆசிரியர்கள்' என்பன போன்ற குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. இக்குறிப்புக்கள் வீரமாமுனிவர் தமக்கு முன்னர் எழுதப்பெற்ற சில நூல்களைக் கற்று, அவற்றிலிருந்து தரவுகளைப் பெற்றிருக்கிறார் என்பதை உணர்த்துகின்றன.

மேனாட்டவர் சிலர் இயற்றிய இலக்கண நூல்களையும் பெஸ்கி கற்றார் என்பதைக் **கொடுந்தமிழ் இலக்கணத்தின்** முன்னுரை தெரிவிக்கிறது. தவிர, நூலுள்ளும், 'சிலர், வேறொருவர், ஒரு சில ஆசிரியர்கள்' என்பன ஆங்காங்குச் சுட்டப்பெற்று, அவர்களின் கருத்துக்கள் பெஸ்கியால் திறனாய்வு செய்யப்பெற்றுள்ளன. **கொடுந்தமிழ் இலக்கணத்தையும், தமுலிகா கிராமட்டிகா** என்ற சீகன் பால்கின் தமிழ் இலக்கணத்தையும் விரிவாக ஆராய்ந்த செ.வை.சண்முகம் (**கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப் பணி,** ப.66) நூலமைப்பிலும் கருத்துக்களை விவரிக்கும் முறையிலும் சீகன் பால்கைப் பெஸ்கி பின்பற்றியுள்ளார் என்று கருதுகின்றார். பால்கின் இலக்கணத்திலுள்ள குறைகள் களையப்பெற்றுச் செம்மையாக்கப்பட்ட நூலே **கொடுந்தமிழ் இலக்கணம்** என்பது சண்முகத்தின் கருத்து.

சீகன் பால்கு எழுதிய **தமுலிகா கிராமட்டிகாவில்** எழுத்து, வாசித்தலும் உச்சரிப்பும், பெயர், பெயரடை, மாற்றுப்பெயர், வினை, இடைச்சொற்கள், தொடர் எனும் எட்டு இயல்கள் உள்ளன. முனிவர்

அவ்விலக்கண நூலினும் நுட்பமாகத் தம் நூலினைப் படைத்துள்ளார். எனினும் அவர் தமிழ் எழுத்துக்களின் ஒலிப்பிறப்பு முறையை விவரிக்க வில்லை. தமிழர்களிடம் நேரிடையான பயிற்சியால் மட்டுமே சரியாக அறிந்து கொள்ள முடியும் என்று கருதி, அதனை அவர் விடுத்திருக்கலாம்.

1. மொழிப்பயிற்சி நூல்கள்

கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் இரண்டும் அயல் மொழியாளர்கள் தமிழைக் கற்றுக் கொள்வதற்கு உதவியாக எழுதப்பெற்றவை. எனவே இவற்றை மொழிப் பயிற்சி இலக்கணம் (pedagogical grammar) என்று செ.வை.சண்முகம் கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணி எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

கொடுந்தமிழ் இலக்கணமும் செந்தமிழ் இலக்கணமும் இலத்தீன் மொழியை அறிந்த அயல் மொழியாளர்களுக்குத் தமிழ்மொழியை இலத்தீனில் கற்பிக்கின்றன. எனவே இலத்தீன் அறிந்தவர்க்கு மட்டுமே இந்நூல்கள் புரியக் கூடியவை. பிறரால் படிக்கவும் இயலாது.

மாணாக்கர்களுக்குப் புரிந்த மொழிகளின் வாயிலாக, அம்மொழிக் கூறுகளை அமைப்பு (structure), பயன்பாடு (function) ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் அயல் மொழியைக் கற்பித்தலே சிறந்த ஆற்றல்மிக்க நெறியாகும். இந்நெறியை வீரமாமுனிவர் செம்மையாகப் பின்பற்றியுள்ளார்.

முனிவர் இலத்தீன் மொழியின் கலைச் சொற்களால் தமிழ் இலக்கணத்தை விவரிக்கும்போது, தமிழ்க் கலைச் சொற்களை இரண்டாவது அறிமுகப்படுத்துகின்றார்.

தமிழ்மொழிக் கூறுகளை ஸ்பானிஷ், பிரஞ்சு, போர்ச்சுக்கீசு, இலத்தீன் ஆகிய ஐரோப்பிய மொழிகளுடனும் சமஸ்கிருதத்துடனும் ஒப்பிட்டு விளக்குகிறார். தமிழ்ச் சொற்களின் பொருள்கள் இலத்தீனில் வழங்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகக் கொடுந்தமிழ் இலக்கணத்திலிருந்து சில வற்றைச் சுட்டலாம்.

> அவர்கள் சில வேளைகளில் இலத்தீனைப் போன்று உடன்பாட்டு வினையுடன் 'இல்லை' என்னும் எதிர்மறை இடைச் சொல்லைச் சேர்க்கின்றனர்.
>
> எஞ்சிய நான்கு (ட், ண், ள், ழ்) எழுத்துக்களும் நமது மொழிகளிலிருந்து மிகவும் வேறுபட்டவை. இவற்றை ஒலிப்பது அயல் மொழியாளர்களுக்கு எளிதல்ல.

வீரமாமுனிவர் **செந்தமிழ் இலக்கணத்தில்** எழுத்து, சொல் இரண்டனுக்கும் **நன்னூலை** ஆதாரமாகக் கொண்டு எழுதுகின்றார். யாப்பிலக்கணத்திற்கு **யாப்பருங்கலக்காரிகையும்** பாட்டியற் செய்திகளுக்கு **வெண்பாப் பாட்டியலும்** அணி இலக்கணக் குறிப்புக்களுக்குத் **தண்டியலங்காரமும்** ஆதார நூல்களாகும். தாம் எழுதிய **தொன்னூல் விளக்கச்** செய்திகளை ஆதாரமாகக் கொண்டு எழுதின், இலத்தீன் பாதிரிமாரிடையே தம் படைப்பான **செந்தமிழ் இலக்கணம்** சிறப்பானதாக ஏற்கப் பெறாது எனக் கருதினார் போலும்.

முனிவர் கூறும் இலக்கணத்திற்குச் சான்றாகத் **திருக்குறள், சீவக சிந்தாமணி, நாலடியார், நன்னூல், அதிவீரராமபாண்டிய மன்னன் இயற்றிய நெகிழ்தம் (நைடதம்), கம்பராமாயணம், பாரதம், தேம்பாவணி, மூதுரை, நான்மணிக் கடிகை, சிலப்பதிகாரம், வெண்பாப்பாட்டியல், தண்டியலங்காரம்** என்பவற்றிலிருந்து பாடல்கள் தரப்படுகின்றன. எனினும் **திருக்குறள், சிந்தாமணிப்** பாடல்களே பரவலாக எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

> நூல் முழுவதும் செய்திகளைக் குறிப்பிடும் போது
>
> முந்தைய எனது நூலில் (**கொடுந்தமிழ் இலக்கணம்**) விரிவாக விளக்கியுள்ளேன். அதில் இல்லாத கூடுதலான செய்தியை மட்டும் இங்குக் குறிப்பிடுகின்றேன்.

என்னும் குறிப்பினை முனிவர் சுட்டிச் செல்கின்றார். இதனால் இந்நூல் **கொடுந்தமிழ் இலக்கணத்திற்கு** ஒரு பின்னிணைப்பாக அமைகின்றது என்றும், முன்னதைப் படித்தாலன்றிப் பின்னதன் செய்தி தெளிவும் முழுமையும் பெறாது என்றும் அறியலாம். மக்களிடம் உறவாட முதலில் பேச்சுத் தமிழ் இலக்கணமும் அவர்களின் நல்மதிப்பை நிலையாகப் பெறப் பின்னர் எழுத்துத் தமிழ் இலக்கணமும் முனிவரால் எழுதப்பெற்றன.

2. தொலைநெறிக் கல்விப் பாடங்கள்

கொடுந்தமிழ் இலக்கணமும் செந்தமிழ் இலக்கணமும் தொலைநெறிக் கல்வி (distance education) முறையில் அமைந்தவை. ஆசிரியரோடு நேரடித் தொடர்பின்றி, மாணாக்கர்கள் தாமே பயிலும் வகையிலான பாடமாக (self instructional lesson) முனிவர் இவற்றை எழுதியுள்ளார். இம்முறைக் கல்வியில் ஆசிரியர்களுக்கும் மாணாக்கர் களுக்கும் நேரடித் தொடர்பு (face to face contact) இல்லாமை ஒரு பெருங்குறையாகும். ஆனால் இதனைத் தவிர்க்கும் வகையில் ஆசிரியர்கள் மாணாக்கர்களை நேருக்கு நேர் விளித்துப் பேசுதல் போன்று

பாடங்களை அமைத்துக் கொள்வர். மடல்களை (letters) இணைத்தும், தம்மை வெளிப்படுத்தியும் (தன்மை ஒருமையில் பேசுதல்), மாணாக்கர்களைப் பாடத்துடன் உளப்படுத்தியும் (உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் பேசுதல்) செய்திகளை ஆசிரியர்கள் தருவர். இத்தகு அணுகுமுறை **கொடுந்தமிழ் இலக்கணத்திலும் செந்தமிழ் இலக்கணத்திலும்** காணப்படுகின்றது.

கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் இரண்டின் முகவுரைகளும் இயேசுசபை ஊழியர்களை வாழ்த்தித் தொடங்குகின்றன. இவற்றின் இறுதிப் பகுதியில் 'விடைபெறுகின்றேன்' என்பதும் நாளும் காணப்படுகின்றன. **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** 29 ஜனவரி, 1728 என்றும் **செந்தமிழ் இலக்கணத்தில்** 13, செப்டம்பர், 1730 என்றும் நாள்கள் குறிக்கப்பெற்றுள்ளன. மாணாக்கர்களை வாழ்த்தி நூலைப் படிப்பதன் பயனை உணர்த்தி, மாணாக்கர்களிடமிருந்து ஆசிரியர் விடைபெறுமாறு மடலாக அமைப்பது தொலைநெறிக் கல்விப் பாடங்களின் இயல்பாகும்.

3. ஐரோப்பிய நெறி

கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் இரண்டிலும் செய்திகள் ஐரோப்பிய மொழி மரபினைச் சார்ந்து பகுக்கப்பட்டு, அவ்வாறே முறைப்படுத்தப் பெற்றுள்ளன. இந்நெறி **செந்தமிழ் இலக்கணத்தை** விடவும் **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** சிறப்பாகப் பேணப்பெற்றுள்ளது. சான்றாக, பெயர் இலக்கணத்தைக் கூறலாம். தமிழ் இலக்கண நூல்கள் பெரும்பான்மையும் பெயரியல் என்ற ஒரே இயலில் இவ்விலக்கணத்தைக் கூறுகின்றன. ஆனால், இந்நூல்களில் வேற்றுமை, பெயரடை, மாற்றுப் பெயர், மாற்றுப் பெயரடை, திணை-பால் என்று பல பிரிவுகளில் பெயர் இலக்கணம் பகுத்து விவரிக்கப்படுகிறது. இவ்வாறே எழுத்து, சொல், தொடர் என்னும் எல்லா இலக்கணங்களும் பல உட்பிரிவுகளில் தொகுத்து விவரிக்கப்படுகின்றன.

வேற்றுமை இலக்கணம் உடைமை (genitive). கொடை (dative), செயப்படுபொருள் (accusative), விளி (vocative), நீங்கல் (ablative) எனும் முறையில் கூறப்படுகிறது. இடப்பொருள், கருவிப்பொருள், உடனிகழ்ச்சிப் பொருள் எனும் மூன்றும் ஒரே வேற்றுமைக்குள் அடக்கப்பட்டுள்ளன. இந்நெறி தமிழ் மரபினின்று வேறுபட்டது. ஆனால் **செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், கிலாவிஸ்** மூன்றிலும் தமிழ்மரபு பின்பற்றப்பட்டுள்ளது.

பத்திகள் எண் தரப்பெற்றுள்ளன. இதனால் ஒரு செய்தியை அதற்கு முந்திய அல்லது பின்வரும் செய்தியோடு ஒப்பிட்டுக் காணுதல் எளிது. மேலும், கூறியது கூறல் எனும் குற்றமும் இதனால் தவிர்க்கப்படுகிறது. அன்றியும், மாணாக்கர்கள் சிறுசிறு பிரிவுகளாகப் படித்தற்கும் இந்நெறி எளிதாக அமைகிறது.

தமிழ் இலக்கணிகள் தொடர் இலக்கணத்தைச் சொல் இலக்கணத்திலிருந்து வேறுபட்டது என்று கருதவில்லை. சொற்களின் தொடர்ச்சியால் அமைவதே தொடர் ; ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு சொல் உணர்த்துகிற தெளிவான பொருட் புலப்பாட்டிற்குக் கருவியாக அமைவதே தொடர். சொல்லுக்கும் தொடருக்கும் இடையேயான உறவு உறுப்பு, உறுப்பிகளுக்கு இடையேயான உறவை ஒத்தது; இரண்டும் ஒருங்கிணைந்தவை எனக் கொண்டு, தொடர் இலக்கணத்தைச் சொல் இலக்கணத்துள் அடக்கிக் கூறியுள்ளனர். எனவே அவர்கள் தொடரதிகாரம் என்று ஒரு தனிப்பிரிவைத் தம் நூல்களில் அமைக்கவில்லை. ஆனால் முனிவர் தொடர் இலக்கணத்திற்கென்று தனி அதிகாரத்தை இரு நூல்களிலும் அமைத்துள்ளார். இப்பகுப்புமுறை மேலைநாட்டு இலக்கணமுறையைத் தழுவியது.

தமிழ் மக்களோடு உறவாட விழைகிற அயல்மொழியாளர் எளிதில் பேச்சுத் தமிழை அறிந்து, பேசுதற்கு உதவியாக அவர்கள் அறிந்த மொழி மரபைத் தழுவி இலக்கணத்தை விவரிப்பதற்கு வீரமாமுனிவர் முன்னுரிமை தந்துள்ளார். இவ்விவரிப்பு நெறி கொடுந்தமிழில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

அதிகாரங்கள், உட்பிரிவுகளின் பகுப்பு, பெயர்களில் மட்டுமன்றி, அவற்றுள் செய்திகளை ஒருங்கிணைத்துத் தொகுத்துக் கூறுதலிலும் சொற்களைப் பகுத்துக் காட்டுதலிலும் **தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், இலக்கணவிளக்கம்** முதலிய நூல்களிலிருந்து **கொடுந்தமிழ் இலக்கணம்** வேறுபடுகிறது. **தொல்காப்பியம், நேமிநாதம்** ஆகியன வினைச்சொற்களில் பகுதி-இடைநிலை-விகுதி என நுண்பகுப்பினை மேற்கொள்ளவில்லை. ஆனால், **நன்னூலும் இலக்கண விளக்கமும்** பகுதி, இடைநிலை, விகுதி, சாரியை, சந்தி, விகாரம் என்று பகுத்துக் காட்டுகின்றன. **கொடுந்தமிழ் இலக்கணமோ** வினைச் சொற்களைப் பகுதி கால இடைநிலை விகுதி (*செய்-கிறேன், செய்-கிறாய், செய்கிறான்*) என்று பகுத்து விவரிக்கிறது.

சாரியை, விகுதி, வேற்றுமை உருபு போன்றவற்றைப் பிரிப்பதிலும் மேலைநாட்டு மொழியியல் நெறியே **கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம்** ஆகியவற்றில் காணப்படுகிறது. *த்து, க்கள், க்கு* என்று சந்தி எழுத்துடன் சேர்த்துப் பிரிக்கப்படுகின்றன.

இலக்கணங்களை விவரிப்பதற்காக விதிகளை உருவாக்கி, எடுத்துக்காட்டுக்களைத் தருதலையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

முனிவர் **கொடுந்தமிழ் இலக்கணத்தில்** மேற்கொண்டுள்ள சொற்பகுப்புமுறை மொழியைக் கற்றலுக்கு எளிமையானது. இத்தகைய சொற்பகுப்புமுறை முனிவருக்கு முன்னரே **வீரசோழியத்தில்** இடம்பெற்றுள்ளது. அந்நூலும் வடமொழியாளர் தமிழை அறிந்து கொள்ளவும் தமிழர் வடமொழி அறிவைப் பெற்றிடவும் எழுதப்பெற்றதே.

கொடுந்தமிழ் இலக்கணம் பேச்சுத்தமிழைக் கற்பிக்கும் நோக்கில் எழுதப்பட்டது. எனவே அந்நூலில் முனிவர் செய்யுட்கலையை விவரிக்கவில்லை. ஆனால் தமிழ்ச் செய்யுட்கலையைக் கற்பிக்கும் நோக்கில் எழுதப்பட்டதனால், **செந்தமிழ் இலக்கணத்தில்** செய்யுள் இலக்கணம் விரிவாகத் தரப்பெற்றுள்ளது.

ஆ. தொன்னூல் விளக்கமும் கிலாவிசும்

பழந்தமிழ் இலக்கண நூல்கள் கற்றற்கு அரியனவாக இருத்தலால், **தொன்னூல் விளக்கம்** எனும் பெயரில் எழுதியதாக வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார். ஆயினும் இந்நூல் முந்தைய தமிழ் இலக்கண நூல்களை முழுவதுமாக ஒத்துக் காணப்படவில்லை. இந்நூலின் அமைப்பு, விவரிப்பு முறை, கருத்துக்களை ஒருங்கிணைத்துத் தொகுத்துள்ள முறை, இலக்கணக் கொள்கை முதலியன பல இடங்களில் ஏனைய தமிழ் இலக்கண நூல்களிலிருந்து வேறுபடுகின்றன. மேலைநாட்டு முந்தைய நெறிகளும் **தொன்னூல் விளக்கத்தில்** பேணப்பெற்றுள்ளன.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் ஐந்து அதிகாரங்களில் விவரிப்பதனால், இந்நூல் ஐந்திலக்கணத் **தொன்னூல் விளக்கம்** எனும் பெயரையும் பெற்றுளது.

தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமுஞ்
சாற்றுளித் தோன்றுந் தானெழுத் தியல்பே

(தொன்னூல் விளக்கம், 2)

என்று எழுத்துக்களின் ஒலிப்பு, எழுத்துக்களின் வகை, அவற்றின் புணர்ச்சி ஆகிய மூன்று பிரிவுகளாக்கி எழுத்திலக்கணத்தை முனிவர் கூறுகிறார். இத்தகைய ஒலிப்பியல், ஒலியனியல், உருபொலியனியல் எனும் எழுத்திலக்கணப் பகுப்பு மொழியியல் முறையைத் தழுவியதாகும். இம்முறை தமிழ் இலக்கண முறைக்கு வேறானது. ஒலியனியல் (எழுத்தியல்), ஒலிப்பியல் (பிறப்பியல்), உருபொலியனியல்

(புணரியல்) எனும் முறையே தமிழ் இலக்கண மரபு. எழுத்துக்களை (ஒலியன்களை) அறிமுகப்படுத்திய பின்னரே அவை பிறக்கும் முறையாகிய ஒலிப்புக்களைக் கூறுதல் வேண்டும் எனும் கொள்கை தமிழர்களுடையது.

எழுத்திலக்கண விவரிப்பில் காணப்படுவது போன்று சொல்லிலக்கண விவரிப்பிலும் புதுமைகள் பல இடம்பெற்றுள்ளன. சொல்லதிகாரம் சொற்பொதுவியல், பெயர், வினைச்சொல்லியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என ஐந்து ஓத்துகளாகப் பகுக்கப் பெற்றுள்ளது. ஐந்து ஓத்துகள் எனும் உட்பகுப்பு **நன்னூல், இலக்கண விளக்கத்திலும்** காணப்படுவதே. ஆனால் அந்நூல்களில் உள்ள பொதுவியல், ஒழிபியல் அல்லது **தொல்காப்பியத்தின்** எச்சவியலைப் போன்ற ஓர் உட்பிரிவுக்கு இணையானதாகச் சொற்பொதுவியலை வீரமாமுனிவர் அமைக்கவில்லை. பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய இயல்களில் விவரிக்கப்பெறாது, விடுபட்ட எஞ்சிய இலக்கணங்கள் அல்லது அவ்வியல்களுள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றிற்குப் பொதுவான இலக்கணங்களைத் தொகுத்து விவரிப்பது பொதுவியல் அல்லது எச்சவியல் அல்லது ஒழிபியல் எனத் தமிழ் நூல்கள் கருதுகின்றன. இத்தகைய இயல் **தொன்னூல் விளக்கத்தில்** இடம் பெறவில்லை. இந்நூலின் சொற்பொதுவியல் பெயர், வினை, இடை, உரி, இயற்சொல், திரிசொல், ஒருமொழி முதலிய மூவகை மொழிகள், பகாப்பதம், பகுபதம், இருதிணை, ஐம்பால், மூவிடப்பெயர்கள், சாரியைகள் முதலியவற்றைச் சொல்லின் பொதுஇலக்கணமாகக் குறிப்பிடுகிறது.

தொன்னூல் விளக்கத்தின் சொல்லிலக்கணக் கோட்பாட்டில் பெயர், வினைச்சொற்களின் விவரிப்பு முறை குறிக்கத்தக்கது. பெயர் இலக்கணம் பெயர் வேற்றுமையியல், பகுப்பதப்பெயரியல், தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியல், சுட்டுவினா என நான்காக வகைப்படுத்தப்பெற்றுள்ளது. பெயர் இலக்கணத்தின் ஒரு கூறாகிய வேற்றுமைக்கு முன்னுரிமை தந்து பெயரின் பொது இலக்கண நூற்பாவுடன் முதலில் விளக்குதல், பெயர்ப்பகுபதங்களின் அமைப்புடன், சுட்டு வினா ஆகிய மாற்றுப் பெயர்களை ஒருங்கிணைத்துத் தனிப்பிரிவில் விளக்குதல், வேற்றுமைத் தொகை, வினைத்தொகை முதலிய அறுவகைத் தொகை மொழிகளையும் அடைசினை முதல் இணைந்த பெயர்த்தொடர், கூட்டு எண்ணுப் பெயர்கள் (எண்ணுத்தொகை மொழிகள்), அளவுப் பெயர்கள், திசைப்பெயர்கள் ஆகியவற்றையும் பெயர் எனக் கொள்ளுதல் என்பன பெயரிலக்கணத்தில்

முனிவர் செய்துள்ள புதுமைகளாகும். தொகைமொழிகளை ஒரு சொல் நடைத்தனவாகக் கொள்ளுதல் தமிழ் மரபே. எனினும் அவற்றைப் பெயர் இலக்கணத்துடனோ வினையிலக்கணத்துடனோ சேர்த்துத் தமிழ்நூல்கள் விவரித்தல் இல்லை. அவை எச்ச இலக்கணமாகக் கொள்ளப்பெற்று எச்சவியியலில் விளக்கப்படுகின்றன. இத்தொகைகள் யாவும் ஒரு பெயரைப்போன்று தொடரில் உறுப்பாக வருதலால் வீரமாமுனிவர் இவற்றைப் பெயரின் வகைகளுள் ஒன்றாகக் கருதுகிறார்.

வினைச்சொல் இலக்கணத்துள் ஏவல்-வியங்கோள் இரண்டையும் ஒருங்கிணைத்து தனியொரு பிரிவில் கூறுதலும், வினைக்குறிப்பினைத் தனிப் பிரிவில் விவரிப்பதும் முனிவரது கொள்கை சார்ந்த பகுப்பு எனலாம். **செந்தமிழ் இலக்கணத்திலும்** இவ்வினைகள் தனித்தனிப் பிரிவுகளிலேயே விவரிக்கப்பெற்றுள்ளன. ஆனால் **தொன்னூல் விளக்கத்தில்** வினைச்சொல்லியலில் விவரிக்கப்பெற்ற வினைக்குறிப்பு **செந்தமிழ் இலக்கணத்தில்** பெயர் அதிகாரத்தில் அடக்கப்பெற்றுள்ளது. ஏவல் வினையின் ஒருவகையே வியங்கோள் என்பதனைத் **தொல்காப்பியமும்** 'ஏவல் கண்ணிய வியங்கோள்' என்று குறிப்பிடுகிறது.

சாரியைகள், பெயர்ப் பகுபதங்களின் அமைப்பு, எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி, திசை-அளவுப்பெயர்களின் புணர்ச்சி, சுட்டு வினாக்களின் புணர்ச்சி, கால இடை நிலைகள் முதலியன தமிழ் நூல்களில் எழுத்ததிகாரத்தில் விவரிக்கப்பெற்றுள்ளன. ஆனால் இவை சொற்களின் வகைகளாதலால், முனிவர் இவற்றைச் சொல்லிலக்கணமாக ஏற்று, சொல்லதிகாரத்துள் விவரிப்பதோடு, அவற்றின் புணர்ச்சி விதிகள் சிலவற்றையும் ஒருங்கிணைத்துக் கூறுகிறார்.

சான்றாக, சுட்டுப்பெயர்கள் விவரிக்கப்படுதலைக் கூறலாம்.

அஇஉம் முதல வைம்பாற் சுட்டே
யொன்றன் பாலவை யாய்தமிடை யெனவும்
பலவின் பாலவை வவ்வீற் றனவு
மிவைகீழ் மூவின மியைபுளி முறையே
யாய்த மெலியியல் பாகு மென்ப (தொன்னூல் விளக்கம் 100)

தொழிற்பெயர்களையும் வினையாலணையும் பெயர்களையும் வினைச்சொல் இலக்கணத்துள் அடக்கிக் கூறுதல், பெயரெச்சங்களுடன் பால் விகுதிகள் இணைந்து வினையாலணையும் பெயர்கள் அமைகின்றன என்று கூறுதல், முற்று வினைகளிலிருந்து எச்ச வினைகள் உருவாக்கப்படுகின்றன என்று விவரித்தல் முதலியன வீரமாமுனிவரின் சொல்லிலக்கணக் கோட்பாட்டில் குறிப்பிடத்தக்கனவாகும்.

வீரமாமுனிவரின் கோட்பாட்டில் தமிழ் இலக்கண மரபைவிடவும் மேலைநாட்டு இலக்கண மரபே ஆதிக்கம் செலுத்துகிறது.

கிலாவிஸ் தொன்னூல் விளக்கத்தின் இலக்கணக் கருத்துக்களைச் சுருக்கித் தொகுத்துத் தருகிறது.

வீரமாமுனிவர் இலக்கணக் கருத்துக்களை விவரிக்குமிடத்துப் படிப்பவர் தமது கருத்துக்களை மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் விழிப்புடன் காணப்படுகிறார். **தொன்னூல் விளக்கம், கிலாவிஸ், செந்தமிழ் இலக்கணம்** ஆகியவற்றில் பழைய இலக்கியப் பாடல்களை எடுத்துக்காட்டுகிறார்.

> நன்னூல், தொல்காப்பியம் உள்ளிட்ட புகழ்பெற்ற
> இலக்கண நூல்களிலும் இக்கருத்து இடம்பெற்றுள்ளது.

எனும் உணர்வை உண்டாக்கிட, அந்நூல்களிலிருந்து மேற்கோள் நூற்பாக்களை உரையில் காட்டுகிறார். இலக்கியச் சான்றுகள் ஆசிரியர், இலக்கியம், உட்பிரிவு, பாடல் எண் என்று விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

துணைநூல்கள்

1. **தமிழ் இலக்கண நூல்கள்**

தொல்காப்பியம் உரைகள்

வீரசோழியம் பெருந்தேவனார் உரை

நேமிநாதம்

நன்னூல்

இலக்கணவிளக்கம்

பிரயோகவிவேகம்

இலக்கணக்கொத்து

தொன்னூல் விளக்கம்

சுவாமி நாதம்

முத்துவீரியம்

2. **ஆய்வுப்படைப்புக்கள்**

சண்முகம், செ.வை. **கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணி.**

சண்முகம், செ.வை. **சொல்லிலக்கணக் கோட்பாடு - 1.**

சண்முகம், செ.வை. **சொல்லிலக்கணக் கோட்பாடு - 2.**

சுயம்பு, பெ., **தொல்காப்பியமும் இலக்கணவிளக்கமும் ஓர் ஒப்பாய்வு (ஆய்வேடு).**

சுயம்பு, பெ., **தமிழ்மொழி அமைப்பும் வரலாறும்.**

சுயம்பு, பெ., **இலக்கணநூல்களில் கருத்து வளர்ச்சி.**

சுயம்பு, பெ., **இலக்கண நூற்களஞ்சியம்.**

சுயம்பு, பெ., **'செந்தமிழ் இலக்கணம்', மொழியியல்** (1989, பக். 163-186.

சுயம்பு, பெ., **'கொடுந்தமிழ் இலக்கணம்', தமிழ்ப்பொழில்** (2008, பக். 146-159.

சுயம்பு,பெ., **'செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும்' தமிழ்ப்பொழில்** (1996, பக்கம் 539-550.

ஞானப்பிரகாசம் (பதி.), **வீரமாமுனிவம்.**

மீனாட்சிசுந்தரன், தெ.பொ., தமிழ்மொழி வரலாறு.

Andre's F.Sjoberg, 'Evidence for a Locative Case in Telugu' Dravidian Linguistics (Seminar Papers), 1969, pp.59-64.

Beschi, C.J., A Grammar of the Common, Dialect of the Tamil Language, Saraswati Mahal Library, Tanjore, 1974.

Beschi, C.J., A Grammar of the High Dialect of the Language, Saraswati Mahal Library, Tanjore, 1974.

Beschi, C.J., Clavis, The Evangelical Lutheran, Mission Press, 1876.

Bishop R. Caldwell, A History of Tinnevelly Asian Educational Services, New Delhi, 1982.

Glasov, Yuri, Y., 'Non-Past Tense Morphemes in Ancient Tamil', Studies in Indian Lingustics (Prof.M.B.Emeneau Sastipurti Volume)

Glasov, Yuri, Y., Deccan College, Poona.

Glasov, Yuri, Y., University and Annamalai.

Glasov, Yuri, Y.,Unversity, 1986, pp.103-109.

Israel, M., The Treatment of Morphology in Tolkappiyam.

Natarajan, T., The Language of Sangam Literature and Tolkappiyam.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	அண்மை வெளியீடுகள்	ரூ. பை.
1.	சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு	160.00
2.	பழந்தமிழரின் பழக்க வழக்கங்கள்	55.00
3.	பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதாரச் சிந்தனைகள்	75.00
4.	தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம், அறிவியல், சமூகம்	70.00
5.	கிறித்தவக் காப்பியங்கள்	225.00
6.	தமிழ் நாளிதழ்களின் மொழிநடை	70.00
7.	சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும்	50.00
8.	குலோத்துங்கனின் கவிதை வளம்	60.00
9.	தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து)	40.00
10.	தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள்	50.00
11.	அறிவியல் பார்வையில் வேதாத்திரிய உடல்நலக் கொள்கைகள்	60.00
12.	பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு	65.00
13.	பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மனிதவள மேம்பாடும்	50.00
14.	மேலைநாட்டறிஞர்களின் தமிழ்த் தொண்டு	175.00
15.	பெரியார் என்னும் பேரொளி	60.00
16.	சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு)	70.00
17.	புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம்	100.00
18.	உலகத் தமிழியல் ஆய்வுகள் (தொகுதி 1)	450.00
19.	செவ்விலக்கியச் சாரம்	70.00
20.	வேதாத்திரி மகரிசியும் மதநல்லிணக்கமும்	45.00

வெ.எண் : 790

வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம்

விலை : ₹ 50.00

